# ார்க்ஸ்

## தனத்தின் பிறப்பு



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# கார்ல் மார்க்ஸ்

# மூலதனத்தின் பிறப்பு

CONNEMARA PUBLIC LIBRARY
5 MAR 198
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ. 1981

Rs. 1-0

மொழிபெயர்ப்பாளர்: கே. ராமநாதன்

கார்ல் மார்க்ஸின் மூலதனம் நூலின் (ஆங்கிலப் பதிப்பு) முதல் தொகுதியின் எட்டாவது பகுதியே இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம். இந்த மொழிபெயர்ப்பு முன்னேற்றப் பதிப்பகத்தின் வெளியிடான மூலதனம் முதல் தொகுப்பிலிருந்து செய்யப்பட்டுள்ளது.

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1981

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

M $\frac{10101\text{-}561}{014(01)\text{-}81}$ 802 — 81

0101010000

## பொருளடக்கம்


புராதனத் திரட்சியின் இரகசியம் . . . . . . . . 4

விவசாயி மக்களின் நிலவுடைமை பறிமுதல் . . . 10

உடைமை பறிமுதலானோருக்கு எதிராக 15ஆம் நூற்றுண்டின் இறுதி தொட்டு நிலவிய கொடூரமான சட்டங்கள். நாடாளுமன்றச் சட்டங்கள் மூலம் கூலிகளை வலுவந்தமாகக் குறைத்தல் . . . . . . . . . . 41

முதலாளித்துவ சாகுபடியாளரின் பிறப்பு . . . . . 55

தொழில்துறை மீது விவசாயப் புரட்சி ஏற்படுத்திய செயல் விளைவு. தொழில்துறை மூலதனத்துக்கு உள்நாட்டுச் சந்தை உருவாக்கம். . . . . . . . 60

தொழில்துறை முதலாளியின் பிறப்பு . . . . . . 68

முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுத்துறைப் போக்கியல்பு . . . . . . . . . . . . . . 87

காலனி அமைப்பின் நவீன தத்துவம் . . . . . . 93

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . . . . 111

# புராதனத் திரட்சியின் இரகசியம்

பணம் எவ்வாறு மூலதனமாக மாற்றப்படுகிறது, மூலதனத்தின் மூலம் எவ்வாறு உபரி மதிப்பும் மற்றும் உபரி மதிப்பிலிருந்து எவ்வாறு கூடுதல் மூலதனமும் உண்டுபண்ணப்படுகின்றன என்பதைப் பார்த்தோம். ஆனால் மூலதனத்தின் திரட்சி உபரி மதிப்பை முன்னனுமானிக்கிறது; உபரி மதிப்பு முதலாளித்துவ முறை உற்பத்தியை முன்னனுமானிக்கிறது; முதலாளித்துவ முறை உற்பத்தி பண்டங்களின் உற்பத்தியாளர்களின் கரங்களில் பெருமளவில் மூலதனமும் உழைப்பு சக்தியும் முன்கூட்டியே இருப்பதை முன்னனுமானிக்கிறது. எனவே இந்த இயக்கம் முழுவதும் ஒரு விஷ வட்டத்தில் திரிவது போலத் தோன்றுகிறது; முதலாளித்துவ திரட்சிக்கு முந்தியதான ஒரு புராதனத் திரட்சியை (ஆடம் ஸ்மித் கூறும் முந்திய திரட்சியை) அனுமானிப்பதன் மூலம் மட்டுமே இதிலிருந்து வெளியேற முடியும். அந்தத் திரட்சி முதலாளித்துவத்திற்குரிய உற்பத்தி முறையின் விளைவல்ல மாறாக அதன் துவக்க நிலையேயாகும்.

அரசியல் பொருளாதாரத்தில் இந்த புராதனத் திரட்சி வகிக்கும் பங்கு இறைமையியலில் ஆதிப்பாவம் வகித்த அதே பங்கைப் போன்றதாகும். ஆதாம் ஆப்பிளைக் கடித்தான், அதன் விளைவாக மனித இனத்தின் மீது பாவம் சுமந்தது. பழங்கால உபகதையாக இது சொல்லப்படும் பொழுது இதன் தொடக்கம் விளக்கப்படுவதாகக் கருதப்படுகிறது. நெடுங் காலத்துக்கு முன்னால் இரு வகையான மக்கள் இருந்தார்கள்; ஒன்று, தளரா ஊக்கமும் விவேகமும் எல்லாவற்றுக்கும்

மேலாக சிக்கனமும் கொண்டு வாழ்ந்த உயர்ந்தோர் குழாம்; மற்றது தமது வக்குக்கும் அதிகமாக ஒழுக்கங் கெட்ட வாழ்க்கையில் செலவிடுகிற சோம்பேறிப் போக்கிரிகள். இறைமையியலில் உள்ள ஆதிப் பாவம் பற்றிய புராணக் கதை, மனிதன் தனது நெற்றி வியர்வையில் தன் ரொட்டியைத் தின்னும் படியாகச் சபிக்கப்பட்டவனுனது எவ்வாறு என்பதை நமக்கு நிச்சயமாயும் கூறுகிறது; ஆனுல் பொருளாதார ஆதிப்பாவத்தின் வரலாறே இது யாருக்கு எவ்வகையிலும் இன்றியமையாத கூறல்லவோ அத்தகைய மக்களும் இருக்கிருர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. அது கிடக்கட்டும்! இவ்வாருக, முந்திய வகையினர் செல்வம் திரட்டியதும், பிந்திய வகையினர் தமது சொந்தத் தோலைத் தவிர விற்பதற்கு எதுவுமற்ற நிலையைக் கடைசியாக எட்டியதும் ஏற்பட்டது. இந்த ஆதிப்பாவத்திலிருந்து மிகப் பெரும்பான்மையான மக்களின் வறுமையும் தொடங்குகிறது, இவர்கள் எவ்வளவோ பாடுபட்டும்கூட இன்று வரை தம்மைத் தவிர வேறு விற்பதற்கு எதுவுமற்ற நிலையில் உள்ளனர். ஆனுல் ஒரு சிலர் நெடுங்கால முன்பே உழைப்பதை நிறுத்தி விட்ட போதிலும் அவர்களது செல்வம் இடையருது பெருகி வருகிறது. இத்தகைய உப்புச்சப்பற்ற சிறுபிள்ளைத்தனமே சொத்துடைமையை ஆதரிப்போரால் நம்மிடம் பிரசாரம் செய்யப்படுகிறது. உதாரணமாக ஒரு காலத்தில் மிகவும் நுண்ணுணர்வுத் திறனுடனிருந்த பிரெஞ்சு மக்களிடம் இதை ஓர் அரசியலறிஞனின் வீருர்வத்துடன் மீண்டும் உரைக்கும் உறுதி எம். தியேருக்கு இருந்தது. ஆனுல் சொத்தைப் பற்றிய பிரச்சினை எழுந்தவுடன் எல்லோரும் நன்கறிந்த கண்ணேட்டமே எல்லாக் காலங்களுக்கும் எல்லா வளர்ச்சிக் கட்டங்களுக்கும் தகுதியானது என்று பறைசாற்றுவது ஒரு புனிதக் கடமையாகி விடுகிறது. உண்மையான வரலாற்றில், வென்று கீழடக்கல், அடிமைப்படுத்தல், கொள்ளை, கொலை ஆகியவை—சுருங்கக் கூறில் பலப்பிரயோகம்—மாபெரும் பங்கு வகிப்பது நன்கறிந்த நிகழ்வாகும். அரசியல் பொருளாதாரத்தின் மென்மையான வரலாற்றுப் பதிவேடுகளில் கிராமிய காவிய பாணி கால காலமாகக் கோலோச்சி வருகிறது. உரிமையும் ''உழைப்பும்'' எல்லாக் காலங்களிலும் செல்வம் திரட்டுவதற்கான ஏக சாதனங்களாக இருந்து வந்துள்ளன, இற்றை ஆண்டு எப்போதுமே

இதற்கு விதிவிலக்கு. உண்மையில் புராதனத் திரட்சி முறைகள் எவ்வகையிலும் கிராமிய காவிய பாணியிலானவையல்ல.

உற்பத்தி மற்றும் பிழைப்புச் சாதனங்களைப் போன்று பணமும் பண்டங்களும் சுயமாகவே மூலதனமாக இருக்கவில்லை. அவற்றை மூலதனமாக உருமாற்ற வேண்டியுள்ளது. ஆனால் இந்த மாற்றம் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் மட்டுமே நடைபெற முடியும், அதாவது: இரண்டு மிகவும் வெவ்வேறு வகையினரான பண்ட-உரிமையாளர்கள் நேருக்கு நேர் வந்து சந்திக்கவேண்டும் தொடர்பு கொள்ள வேண்டும்; ஒரு புறம், மற்ற மக்களின் உழைப்பு-சக்தியை விலைக்கு வாங்கித் தாம் வைத்திருக்கும் செல்வத் தொகையை அதிகரித்துக் கொள்வதில் ஆர்வமுடைய பணம், உற்பத்தி சாதனங்கள், பிழைப்புச் சாதனங்களின் உரிமையாளர்கள், மறு புறத்தில், தமது சொந்த உழைப்பு-சக்தியை விற்பனை செய்யும், எனவே உழைப்பை விற்பனை செய்யும் சுதந்திரமான தொழிலாளர்கள். இரட்டைப் பொருளில் இவர்கள் சுதந்திரமான தொழிலாளர்களாக இருக்கின்றார்கள், இவர்கள் அடிமைகள் பண்ணையடிமைகள் போன்று உற்பத்தி சாதனங்களின் ஒரு பகுதியாகவும் இருக்கவில்லை, விவசாய உரிமையாளர்களைப் போல உற்பத்தி சாதனங்களைச் சொந்தமாக வைத்திருக்கவுமில்லை. எனவே தமது சொந்த உற்பத்தி சாதனங்கள் எவையுமின்றிச் சுதந்திரமாக இருக்கிறார்கள், அவற்றால் கட்டுப்படுத்தப் படாது இருக்கிறார்கள். பண்டங்களுக்கான சந்தையின் இந்த துருவகரணத்தோடு முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை நிபந்தனைகள் அமுலில் வருகின்றன. தமது உழைப்பு கைவரப் பெற உதவும் சாதனங்களான எல்லா உடைமைகளிலிருந்தும் தொழிலாளர்கள் முற்றிலும் பிரித்துவைக்கப்படுகிறார்கள் என்று முதலாளித்துவ அமைப்பு முன்னனுமாணிக்கிறது. முதலாளித்துவ உற்பத்தி தன் சொந்தக் கால்களில் நிற்க முடிந்தவுடனேயே அது இந்தப் பிரிவினையை நிலை நிறுத்துகிறது என்பது மட்டுமின்றி தொடர்ச்சியாக விரிவடையும் அளவில் இதைத் திரும்பவும் உருவாக்குகிறது. எனவே, முதலாளித்துவ அமைப்புக்குப் பாதை திறந்து வைக்கும் இந்த மாற்றப் போக்கு தொழிலாளியிடமிருந்து அவனது உற்பத்தி சாதனங்களின் உடைமையைப் பறித்துக் கொள்ளும் மாற்றப் போக்கே தவிர வேறு எதுவுமல்ல; இந்த மாற்றப் போக்கு

ஒரு புறத்தில் சமுதாயத்தின் பிழைப்புக்கும் உற்பத்திக்கு மான சாதனங்களை மூலதனமாக மாற்றுகிறது, மறு புறத்தில் நேரடியாக உற்பத்தி செய்பவர்களைக் கூலித் தொழிலாளர் களாக மாற்றுகிறது. எனவே, புராதனத் திரட்சி எனப்படு வது, உற்பத்தி செய்வோரை உற்பத்தி சாதனங்களிலிருந்து விலக்கி வைக்கும் வரலாற்று மாற்றப்போக்கே தவிர வேறு எதுவுமல்ல. இது புராதனத் தன்மையுடையதாகத் தோன்று கிறது, காரணம் இது மூலதனத்தின் வரலாற்றுக்கு முந்திய கட்டத்தையும் அதற்கு இணையான உற்பத்தி முறையையும் உருவாக்குகிறது.

முதலாளித்துவச் சமூக அமைப்பின் பொருளாதாரக் கட்டுமானம் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் பொருளா தாரக் கட்டுமானத்திலிருந்து வளர்ந்து வந்ததாகும். பின்ன தின் அழிவு முன்னதின் கூறுகளைக் கட்டவிழ்த்து விட்டது.

நிலத்தோடு பந்தப்பட்டு இருந்த நிலை முடிவுற்றபிறகு மட்டுமே, இன்னொருவரது அடிமையாய் அல்லது பண்ணையடி மையாய் இல்லாத நிலைமை ஏற்பட்ட பிறகு மட்டுமே நேரடி யாக உற்பத்தி செய்யும் தொழிலாளிக்குத் தன்னைத்தானே விருப்பப்படி கையாளும் நிலை ஏற்பட்டது. உழைப்புச் சக்தியை தாராளமாக விற்பனை செய்பவனாக, தனது பண் டத்தை எங்கே மார்க்கெட் கிடைக்கிறதோ அங்கே கொண்டு செல்பவனாக அவன் ஆகவேண்டுமானால் அவன் கில்டுகளின் (கைவினைஞர் சங்கம்) ஆட்சியிலிருந்தும், பணி பயில்வோர் கற்றுக் கொண்டே உழைப்போர் சம்பந்தமான அவற்றின் விதி களிலிருந்தும் உழைப்பைப் பற்றிய மற்ற சட்டத் தடை களிலிருந்தும் தப்பி வெளியேறியிருக்க வேண்டும். எனவே, உற்பத்தியாளர்களை கூலித் தொழிலாளர்களாக மாற்றும் இந்த வரலாற்றுப் போக்கு, ஒரு புறம் அடிமை முறையிலி ருந்தும் கில்டுகளின் தளைகளிலிருந்தும் அவர்கள் அடைந்த விடுதலையாகக் காட்சி தருகிறது; நமது முதலாளித்துவ வர லாற்றாசிரியர்களின் பார்வையில் இந்தப் பக்கம் மட்டுமே நிலவுகிறது. ஆனால் மறு புறம், அவர்களது சொந்த உற் பத்தி சாதனங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு விட்ட பிறகே, பழைய நிலப்பிரபுத்துவ ஏற்பாடுகள் வழங்கியிருந்த வாழ்க் கைக்குரிய எல்லா உத்தரவாதங்களும் பறிபோன பிறகு மட்டுமே புதிதாக விடுதலை பெற்ற இவர்கள் தம்மைத் தாமே

விற்பனை செய்து கொள்கிறவர்களானூர்கள். அவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டதன் இந்த வரலாறு மனித குலத்தின் வரலாற்றுப் பதிவேடுகளில் குருதியும் தீயும் கொண்ட எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.

இந்தப் புதிய வல்லுநர்களான தொழில்துறை முதலாளிகளுக்கு கில்டுகளின் தலைமையாளர்களிடமிருந்து கைவினைத் தொழில்களை எடுத்துக் கொள்வது மட்டுமன்றி செல்வ ஆதாரவளங்களை உடைமையாய் வைத்திருந்த நிலப்பிரபுக்களையும் அகற்ற வேண்டியதாக இருந்தது. இந்த வழியில் சமுதாய அதிகாரத்தை அவர்கள் வென்று பெற்றதானது ஒரு புறம் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தையும் அதன் படுகேவலமான தனியுரிமைகளையும் எதிர்த்தும், மறு புறம் கில்டுகளையும், உற்பத்தியின் சுதந்திரமான வளர்ச்சி, மனிதனை மனிதன் விருப்பம் போல் சுரண்டுவது இவற்றின் மீது கில்டுகள் போட்டிருந்த தளைகளையும் எதிர்த்தும் நடத்திய வெற்றிகரமான போராட்டத்தின் பலனுகக் காட்சியளித்தது. தமக்கு எவ்விதத்திலும் பொறுப்பில்லாததான நிகழ்ச்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு மட்டுமே தொழில் துறை வீரர்கள் கத்தி வீச்சு வீரர்களின் இடத்தைப் பிடித்துக் கொள்வதில் வெற்றியடைந்தார்கள். சுதந்திர மனிதனுகிவிட்ட ரோமன் அடிமை முன் ஒரு காலத்தில் தன்னைத் தானே தனது **புரவலர்களின்** எஜமானனுக்கிக் கொள்ளப் பயன்படுத்திய, அதே நீசமான வழிகள் மூலமே அவர்கள் உயர்ந்துவந்துள்ளனர்.

கூலித்தொழிலாளியும் முதலாளியும் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த வளர்ச்சியின் தொடக்க நிலை தொழிலாளியின் அடிமைத்தனமாகும். இந்த அடிமைத்தனத்தின் வடிவம் மாற்றமடைந்ததிலும் நிலப்பிரபுத்துவச் சுரண்டல் முதலாளித்துவச் சுரண்டலாக உருமாற்றமடைந்ததிலும் தான் முன்னேற்றம் அமைந்திருந்தது. இதன் முன்னேற்றத்தின் போக்கைப் புரிந்துகொள்ள நாம் வெகுதூரம் பின்னுல் நோக்க வேண்டியதில்லை. மத்திய தரைக் கடற்பகுதியிலிருந்த சில நகரங்களில் அங்குமிங்குமாக ஏற்பட்டிருந்த முதலாளித்துவ உற்பத்தியின் முதல் துவக்கங்களை 14, 15ஆம் நூற்றுண்டுகளிலேயே நாம் காண நேர்ந்த போதிலும், முதலாளித்துவ சகாப்தம் 16ஆம் நூற்றுண்டிலிருந்தே துவங்குகிறது. அது எங்கெல்லாம் தோன்றுகிறதோ அங்கெல்லாம் பண்ணை

யடிமை முறை ஒழிப்பு நீண்ட கால முன்பே செயல்படுத்தப் பட்டிருந்தது, மற்றும் மத்திய காலத்தின் ஆக உயர்ந்த அபிவிருத்தியைக் குறிக்கும் சர்வ சுதந்திர நகரங்கள் நீண்ட கால முன்பே தேய்வுறலாயின.

புராதனத் திரட்சியின் வரலாற்றில், முதலாளித்துவ வர்க்கத்தினது உருவாக்கத்தின் நெம்பு-கோல்களாகச் செயல் பட்ட எல்லாப் புரட்சிகளும் சகாப்தம் படைப்பனவாக இருந் தன; எல்லாவற்றுக்கும் மேலாக, பெருந்திரளான மக்கள் அவர்களது பிழைப்புச் சாதனங்களிலிருந்து திடீரென்றும் வலுவந்தமாகவும் பிய்த்தெடுக்கப்பட்டு, உழைப்புச் சந்தை யில் சுதந்திரமான ''கட்டுப்பாடுகளில்லாத'' பாட்டாளி களாகத் தூக்கி எறியப்பட்ட தருணங்கள் சகாப்தம் படைப் பனவாகவே இருந்தன. விவசாயப் பொருள் உற்பத்தி யாளரை, விவசாயியை, நிலத்திலிருந்து உடைமை பறிமுதல் செய்து வெளியேற்றியதுதான் இந்த மாற்றப் போக்கு முழு வதற்குமான அடிப்படையாகும். இந்த உடைமை பறிமுத லின் வரலாறு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அம்சங்களை மேற்கொள்கிறது, வெவ்வேறு வரிசை முறைகளில் வெவ் வேறு காலகட்டங்களில் அதன் பல்வேறு படிநிலைகளுக்குள் கடந்து செல்கிறது. நாம் உதாரணமாக எடுத்துக் கொண் டுள்ள இங்கிலாந்தில் மட்டுமே இது அதன் சாஸ்த்ரீய வடிவத்தைக் கொண்டுள்ளது.*

---

* முதலாளித்துவ முறை உற்பத்தி ஆக முதலில் வளர்ச்சி யடைந்த இத்தாலியில், பண்ணையடிமை முறையின் ஒழிப் பும் மற்ற இடங்களை விட ஆக முன்னதாகவே நடை பெற்றது. பண்ணையடிமைக்கு நிலத்தில் சட்ட பூர்வமான எவ் வித உரிமையும் (prescriptive right) கிடைப்பதற்கு முன்னரே அந்த நாட்டில் அவன் விடுதலை செய்யப்பட்டான். அவனது விடுதலை அவனை உடனே ஒரு சுதந்திரமான பாட்டாளியாக மாற்றியது, மேலும் அவன் ரோமன் கால முதல் பெரும் பாலும் மரபுரிமையாக ஒப்படைக்கப்பட்டு நிலவிய நகரங் களில் உடனுக்குடன் புதிய எஜமானரைக் கண்டான். உலக மார்க்கெட்டின் புரட்சி[1] 15ஆம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில் வட இத்தாலியின் வாணிக மேலாதிக்கத்தை அழித்த பொழுது, நேர் எதிர்த்திசையிலான ஓர் இயக்கம் தொடங்கியது. நகரங்களிலிருந்த தொழிலாளர்கள் கூட்ட மாக நாட்டுப் புறத்துக்கு விரட்டப்பட்டனர், தோட்டங் கள் போடும் வடிவிலான சிறு வீத விவசாயத்துக்கு முன் என்றுமே கண்டிராத அளவில் தூண்டுதல் அளித்தார்கள்.

# விவசாயி மக்களின் நிலவுடைமை பறிமுதல்

இங்கிலாந்தில் பண்ணையடிமை முறை 14ஆம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் பெரும்பாலும் மறைந்து போய் விட்டது. அந்த நாட்களிலும்—15ஆம் நூற்றுண்டில் அதை விடப் பெரிய அளவிலும்—மக்கள் தொகையில் மிகப்பெரும் பான்மையினர்*, அவர்களது சொத்துரிமையை மூடிமறைத்திருந்த பிரபுத்துவ உரிமைச் சான்று எதுவாக இருந்தாலும், சுதந்திரமான விவசாயி உரிமையாளர்களாக இருந்தார்கள். பெரிய நிலப்பிரபுக்களின் பண்ணைகளில் தானே ஒரு பண்ணையடிமையாக விருந்த பழைய மேலாளர் (bailiff) இடத்தில் சுதந்திர சாகுபடியாளர் (farmer) வந்து சேர்ந்தார். விவசாயத்தில் ஈடுபட்டிருந்த கூலித் தொழிலாளரிடையில் ஒரு

---

* "தமது சொந்தக் கரங்களால் தமது சொந்த நிலங்களில் பயிர் செய்த, மிதமான அளவில் உரிமைத் தகைமை கொண்டிருந்த சிறிய உரிமையாளர்கள் இன்றைவிட அதிகமாக நாட்டின் மிக கணிசமான பகுதியாக இருந்தார்கள். அந்தக் காலத்திய சிறந்த புள்ளிவிபர ஆசிரியர்களை நாம் நம்புவோமானுல் அக்காலத்தில் இருந்த 160,000 நில உரிமையாளர்கள் தமது குடும்ப உறுப்பினர்களையும் சேர்த்து மக்கள் தொகையில் ஏழில் ஒரு பங்குக்கும் அதிகமாக இருந்திருக்க வேண்டும், ஜீவியகாலத்துக்கு சாகுபடி உரிமையுள்ள சிறிய பண்ணைகளிலிருந்து அவர்கள் தமது பிழைப்புக்குரியவற்றைப் பெற்றுவந்தார்கள். இந்தச் சிறிய நிலவுடைமையாளர்களின் சராசரி வருவாய் ஆண்டுக்கு 60 பவுன் முதல் 70பவுன் என்று மதிப்பிடப்படுகிறது. தமது சொந்த நிலங்களில் உழுது பயிரிட்டவர்களின் எண்ணிக்கை மற்றவர்களின் நிலங்களில் பயிர் செய்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.'' Macaulay, *History of England*, 10th ed., London, 1854, Vol. I. pp. 333, 334. பதினேழாம் நூற்றுண்டின் கடைசி மூன்றும் பகுதியில் ஆங்கிலேய மக்களில் ஐந்தில் நான்கு பகுதியினர் விவசாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் (அதே நூல், பக்கம் 413). நான் மெக்காலேயை மேற்கோள் காட்டுவதற்குக் காரணம் ஒரு திட்டமிட்ட முறையிலான சரித்திரப் புரட்டர் என்ற வகையில் அவர் இத்தகைய உண்மைகளை எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு குறைத்தே மதிப்பிடுவார் என்பதேயாகும்.

பகுதி விவசாயிகளாவர், அவர்கள் தமது ஓய்வு நேரத்தை பெரிய பண்ணைகளில் வேலை செய்யப் பயன்படுத்தினார்கள், இன்னொரு பகுதியான சுதந்திரமான தனி வகைப்பட்ட கூலித் தொழிலாளர்கள் ஒப்புநோக்கில் அறவே குறைந்த எண்ணிக்கையில் இருந்தார்கள். அவர்களும் அதே சமயம் விவசாயி சாகுபடியாளர்களாகப் பெரும்பாலும் செயல் பட்டார்கள், ஏனெனில் அவர்களது கூலி நீங்கலாக அவர் களுக்குக் குடிசைகளுடன் சேர்த்து 4 அல்லது அதிக ஏக்கர் பரப் புடைய சாகுபடிக்குரிய நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், அவர்கள் மற்ற விவசாயிகளுடன் சேர்ந்து பொது நிலத்தில் மாற்றார் நலன்களை அனுபவித்தனர். இது அவர்களது கால் நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் வழங்கியது, அவர்களுக்கு வெட்டுமரம், விறகு, முற்று நிலக்கரி ஆகியவற்றை உதவி யது.* ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும், நிலப்பிரபுத் துவ உற்பத்தி முறை சாத்தியமான அளவுக்கு அதிக எண் ணிக்கையிலான கீழ் மானியக்காரர்(sub-feudatories) இடையே நிலத்தைப் பிரித்தளிக்கும் பாங்கில் இருந்தது. நிலப்பிரபு வின் பேராற்றல் மன்னரினது (the sovereign) போன்று குத்த கைப் பட்டியலின் நீளத்தைச் சார்ந்ததாக இருக்கவில்லை. ஆனால் அவரது குடிகளின் எண்ணிக்கையைச் சார்ந்ததாக இருந்தது, அதுவோ விவசாயி உரிமையாளர் எண்ணிக்கை யைச் சார்ந்ததாக இருந்தது.** எனவே, ஆங்கில நாட்டு

---

* கப்பம் கட்டுபவனாக இருப்பினும் பண்ணையடிமையுங் கூட தனது வீட்டோடு சேர்ந்த துண்டு நிலத்திற்கு உரிமை யாளன் என்பதோடு பொது நிலத்தின் சக உடைமையாள ராகவும் இருந்தான் என்பதை நாம் என்றும் மறந்து விடக் கூடாது. ''அங்கே (சைலிசியாவிலிருந்த இரண்டாம் ஃபிரீட்ரி ஹின் காலத்தில்) விவசாயி பண்ணையடிமையாயினும்.'' இந்தப் பண்ணை அடிமைகள் பொது நிலங்களை தம் வசம் வைத் திருந்தார்கள். ''இது வரையில் பொது நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளுமாறு சைலிசியன் மக்களை ஒப்புக்கொள்ளும்படி செய்வது சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால் நைமார்க்கில் இத்தகைய பங்கிடல் மிகவும் வெற்றிகரமாக நிறைவேறி யிராத ஒரு கிராமம் கூடக் கிடையாது.'' (Mirabeau, *De la monarchie prussienne*, Londres, 1788, t. II, pp. 125, 126).

** நிலவுடைமையில் முற்றிலும் நிலப்பிரபுத்துவ அமைப் பையும் வளர்ச்சியடைந்த சிறுவீத விவசாயத்தையும் கொண் டுள்ள ஜப்பான், நமது வரலாற்று நூல்கள் அனைத்தையும்

நிலம் நார்மன் படையெடுப்புக்குப் பிறகு மிகப் பெரிய ஆட்சிப் பரப்புகளாக (baronies) பிரிக்கப்பட்டது; இதில் ஒன்றுக்குள் 900 பழைய ஆங்கிலோ-சாக்சன் பிரபுக் குடும்பங்கள் அடங்கியிருந்தன. இதில் சிறிய விவசாயி உரிமையாளர்கள் நிரம்பிக் கிடந்தனர், இங்குமங்குமாக இடையில் மாபெரும் நிலப்பிரபுக்கள் சிலர் இருந்தனர். இந்த நிலைமைகளும், 15 ஆம் நூற்றாண்டின் சிறப்பம்சமாக விளங்கிய நகரங்களின் சுபிட்சமும் சேர்ந்தே சான்சலர் ஃபோர்டிஸ்கு தமது "Laudibus Legum Angliae" என்ற நூலில் மிகவும் வாசாலகமாக சித்தரித்துள்ளபடி மக்கள் செல்வத்தின் சாத்தியக் கூறை உருவாக்கின. ஆனால் இது முதலாளித்துவ முறையிலான செல்வத்தின் சாத்தியக் கூறை விலக்கியது.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடித்தளத்தை நிறுவிய புரட்சியின் ஆரம்ப பீடிகையை 15ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியும் 16ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளும் குறித்தன. சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் நன்றாகக் கூறுவது போல ''வீட்டிலும் மாளிகைகளிலும்[2] எங்கும் பயனின்றி நிரம்பிக் கிடந்த'' நிலப்பிரபுத்துவப் பரிவாரப் படைகள் கலைக்கப்பட்டதால், தொழிலாளர் மார்க்கெட்டில் சுதந்திரமான பாட்டாளிகளின் பெருந்திரள் புகுந்தது. முதலாளித்துவ வளர்ச்சியின் சிருஷ்டியான மன்னராட்சியே முழுமையான அரசுரிமைக்கான போராட்டத்தில் இந்தப் பரிவாரங்கள் படைகளைக் கலைப்பதற்கு பலவந்தமாக விரைந்த போதிலும், நிச்சயமாயும் அது மட்டுமே இதற்கான ஏக காரணமாக இருக்கவில்லை. மன்னருடனும் நாடாளுமன்றத்துடனுமான துடுக்கான மோதலில் இறங்கிய மாபெரும் நிலப்பிரபுக்கள், பிரபுக்களைப் போலவே நிலப்பிரபுத்துவ உரிமை பெற்றிருந்த விவசாயிகளை பலாத்காரமாக நிலத்திலிருந்து வெளியேற்றியும் பொது நிலங்களை அநீதமாகப் பறித்துக் கொண்டும் ஒப்பிடவியலாத முன்னிலும் பெரிய

---

விட ஐரோப்பிய மத்திய காலம் பற்றிய மேலதிகமான மெய்யான சித்திரத்தைத் தருகிறது. நமது வரலாற்று நூல்கள் பெரும்பாலும் முதலாளித்துவ விருப்பு வெறுப்புகளால் ஆட்டிப்படைக்கப்பட்டவை. மத்திய காலத்துக்குப் பிரதிகூலமான நிலையில் ''மிதவாதி''யாக இருப்பது மிகவும் எளிதாகும்.

அளவில் பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கி விட்டனர். பிளெமிஷ் கம்பளி உற்பத்தியாளர்களின் துரிதமான எழுச்சியும் இதற்கு இணையாக இங்கிலாந்தில் கம்பளி விலை உயர்ந்ததும் இந்த வெளியேற்றங்களுக்கு நேரடித் தூண்டுதல்களாக இருந்தன. பழைய பிரபுக்குலம் மாபெரும் நிலப்பிரபுத்துவப் போர்களால் கபளிகரம் செய்யப்பட்டிருந்தது. புதிய பிரபுக்குலம் தனது காலத்தின் குழந்தையாக இருந்தது, அதற்குப் பணமே எல்லா சக்திகளுக்கும் சக்தியாக இருந்தது. எனவே சாகுபடிக்குரிய நிலத்தை மந்தை நிலமாகமாற்ற வேண்டும் என்பதே அதன் கூக்குரலாக இருந்தது. ஹாரிசன் வெளியிட்டிருந்த **இங்கிலாந்து குறித்த வர்ணனை, ஹாலின்ஷெட்டின் செய்திக் கோவைக்கு முன்குறிப்புகள்** என்ற நூலில் சிறிய விவசாயிகளின் உடைமைகள் பறிக்கப்பட்டது நாட்டை எவ்வாறு நாசப்படுத்துகிறது என்பதைச் சித்திரிக்கிறார். ''நமது மாபெரும் அத்துமீறுவோருக்கு என்ன கவலை?'' என்று இதில் அவர் எழுதினார். விவசாயிகளின் வீடுகளும் தொழிலாளர் குடிசைகளும் தகர்த்துத் தரைமட்டமாக்கப்பட்டன அல்லது சிதிலமாகும்படி விடப்பட்டன.

ஹாரிசன் கூறுகிறார்: ''ஒவ்வொரு பிரபுக்குடும்பத்தின் பழைய ஆவணங்களையும் தேடிப் பரிசீலித்தால், சில பண்ணைகளில் பதினேழு, பதினெட்டு அல்லது இருபது வீடுகள் மறைந்திருப்பதை விரைவில் காணலாம்... இன்று போல இங்கிலாந்தில் இவ்வளவு குறைவான மக்கள் தொகை முன் என்றுமே இருந்ததில்லை... பட்டணங்கள் நகரங்கள் அறவே அழிந்து போயின அல்லது காலாய் பாதியாய்க் குறைந்தன, ஆயினும் இங்குமங்கும் சில சற்றே பெரிதாயிருக்கலாம்; மந்தை நிலத்துக்காக அழிக்கப்பட்ட நகரங்களில் நிலப்பிரபுக்களின் வீடுகள் மட்டுமே நிற்கின்றன... இந்தளவே நான் சொல்ல முடியும்.''

இந்தப் பழைய செய்திக் கோவையாளர்களின் குற்றச்சாட்டுகள் எப்போதும் மிகைப்படுத்தப்பட்டதாகவே இருக்கும், ஆனால் அவை உற்பத்தி நிலைமைகளில் நிகழ்ந்த புரட்சி சமகாலத்தவர்கள் மீது ஏற்படுத்திய எண்ணப்பதிவை உண்மையாகப் பிரதிபலிக்கின்றன. சான்சலர் ஃபோர்டிஸ்கு மற்றும் தாமஸ் மோரின் நூல்களை ஒப்புநோக்கிப் பார்த்தால் 15ஆவது மற்றும் 16ஆவது நூற்றாண்டுகளுக்கிடையிலான

பெரும் பிளவு வெளித் தோற்றமாகும். தார்ன்டன் சரியாகவே குறிப்பிட்டது போல ஆங்கிலத் தொழிலாளி வர்க்கம் அதன் பொற்காலத்திலிருந்து அதன் இரும்பு யுகத்துக்கு எவ்விதமான மாறுதல் படிநிலையும் இன்றிக் கடுவேகமாகத் தள்ளப்பட்டுள்ளது.

சட்டம் இந்தப் புரட்சியைக் கண்டு பீதியடைந்தது. அது இன்னும் ''நாட்டின் செல்வம்'' (அதாவது மூலதனத்தின் உருவாக்கமும், மக்கட்திரள் ஈவிரக்கமின்றிச் சுரண்டப்பட்டு வறுமையில் தள்ளப்பட்டதும்) அரசுக் கலையின் ultima Thule (இறுதி லட்சியமாகக்) கருதப்படும் நாகரிகத்தின் அந்த உயரத்தை எட்டவில்லை. ஏழாம் ஹென்ரியின் வரலாறு பற்றிய தமது நூலில் பேகன் கூறுவதாவது:

''அந்தக் காலத்தில் (1489) வேலியிட்டு நிலத்தை வளைத்துக் கொள்ளும் நடவடிக்கை அடிக்கடி நிகழத் தொடங்கியது, சாகுபடிக்குரிய நிலம் (ஆட்களும் குடும்பங்களும் இன்றி உரமிட முடியாதவை) மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டது, அதற்கு சில கால்நடை மேய்ப்பர்கள் போதும்; விருப்பப்படியும் பல ஆண்டுகளுக்கும் ஜீவியகாலமுழுமைக்கும் குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலங்கள் (இவற்றில் பெருமளவில் வேளாண் படையினர் வாழ்ந்திருந்தனர்) பெரிய எஸ்டேட்டுகளாக மாற்றப்பட்டன. இதனுல் மக்கள் சீரழிவு தொடங்கியது, (பின்விளைவாக) நகரங்கள், மதபீடங்கள், tithes (சமய வரிகள்) ஆகியவை சீரழியலாயின... இந்தத் தொந்தரைகளை அகற்றுவதில் மன்னர் மற்றும் நாடாளுமன்றம் தோற்றுவித்த விவேகம் பாராட்டுக்குரியது... அடைப்புக்களைப் போட்டும் மேய்ச்சல் நிலங்களாக்கியும் மக்களை வெளியேற்றுவதை எதிர்த்தும் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

ஏழாம் ஹென்ரியால் 1489இல் வெளியிடப்பட்ட ஒரு சட்டத்தின் பாரா 19, குறைந்தது 20 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்த ''உழவுத் தொழில் குடும்ப வீடுகளை'' அழிக்கக் கூடாது என்று தடை விதித்தது.எட்டாவது ஹென்ரி ஆட்சியின் 25ஆவது ஆண்டில் பிறப்பித்த சட்டம் இந்தச் சட்டத்தையே புதுப்பித்தது. இது வேறு விபரங்கள் நீங்கலாகக் கூறுவதாவது:

''பல வாரப் பண்ணைகளும் பெரிய கால்நடை மந்தைகளும் குறிப்பாக ஆடுகளும் ஒரு சிலர் கைகளில் குவிந்து கிடக்

கின்றன, இதன் காரணமாக நில வாரம் மிகவும் உயர்ந்துள்ளது, உழு தொழில் மிகவும் குறைந்துள்ளது, மாதாகோயில்கள் மற்றும் வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டுள்ளன, அளவிடற்கரிய திரளான மக்கள் தம்மையும் தமது குடும்பங்களையும் எதைக் கொண்டு பராமரித்து வந்தார்களோ அந்த இன்றியமையாத சாதனங்களை இழக்கும்படி நேர்ந்துள்ளது.''

எனவே, இந்தச் சட்டம் சீரழிந்து போன பண்ணை வீடுகளை மறுபடி கட்டும்படி உத்தரவிடுகிறது, தானிய விளை நிலத்துக்கும் மேய்ச்சல் நிலத்துக்கும் இடையிலான விகிதாசாரத்தை நிர்ணயிக்கிறது. 1533ம் ஆண்டுச் சட்டம் ஒன்று சில உடைமையாளர்கள் 24,000 ஆடுகள் வரை வைத்திருக்கிறார்கள் என்று கூறி சொந்தமாக வைத்திருக்கக் கூடிய ஆடுகளின் தொகையை 2,000 ஆக நிர்ணயித்துள்ளது.* மக்களின் கூக்குரலும் சிறிய குடியானவர்கள் மற்றும் விவசாயிகளின் உடைமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்து ஏழாம் ஹென்ரிக்குப் பிறகு 150 ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்ட சட்டங்களும் அதே போலப் பயனற்றுப் போயின. இவற்றின் திறமின்மையைத் தன்னையறியாமலே எங்களுக்கு வெளிப்படுத்துகிறார் பேகன்.

''குடிப்பண்பு, ஒழுக்க நெறி பற்றிய வியாசங்கள் (*Essays, Civil and Moral*) என்ற தமது நூலின், அத்தியாயம் 29இல் பேகன் கூறுவதாவது: ''வேளாண்மை செய்வோரின் பண்ணைகளையும் வீடுகளையும் ஒரு தர நிர்ணயத்திற்குக் கொண்டுவருவதற்காக ஏழாம் ஹென்ரி கையாண்ட உபாயம் அருமையானது, பாராட்டத்தக்கது; அதாவது ஒரு குடிமகன் சுபிட்சம் நிறைந்த வசதிகளுடன் வாழ்வதற்கு வகை செய்யும் அளவுக்கான நிலத்தைக் கொண்டு பராமரிக்கப்படுவான், அடிமை நிபந்தனைகள் இல்லை, உழுவதற்கான ஏரைப் பிடிப்பது உடைமையாளர் கரங்களே வெறும் கூலியாட்களின் கரங்களல்ல.''**

---

* தாமஸ் மோர் தமது கற்பனை உலகம் (*Utopia*) என்ற நூலில் கூறுகிறார்: இங்கிலாந்தில் ''மிகவும் சாதுவாய் வசக்கிப் பழக்கப்பட்டதாய் இருந்த உங்களது ஆடுகள் மிகப் பெரிய கபளீகரர்களாய், காட்டு விலங்குகளாய் மனிதர்களையே தின்று விழுங்கிவிடுவனவாக இப்போதுள்ளன''. *Utopia*, மொழிபெயர்ப்பு ராபின்சன், பிரசுரம் ஆர்பர், லண்டன், 1869, பக்கம் 41.

** பேகன், வசதியாக வாழும் சுதந்திரமான விவசாயி

மறுபுறம், முதலாளித்துவ அமைப்பு கோரியது என்னவென்ருல், வெகுஜனங்களுக்குக் கீழ்த்தரமான கிட்டத்தட்ட அடிமைத்தனமான நிலைமை, அவர்களை கூலிப்படைகளாக மாற்றுவது, அவர்களது உழைப்புச் சாதனங்களை மூலதனமாக மாற்றுவது என்பதே. இந்த மாற்றம் நடைபெற்ற காலகட்டத்தில் விவசாய கூலித் தொழிலாளியின் குடிசையருகில் 4 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கவும் அவனது குடிசைக்குள் மற்ற யாரையும் குடிவைக்கக்கூடாது என்று தடை விதிக்கவும் சட்டம் முயன்றது. முதலாம் சார்ல்ஸ் மன்னர் ஆட்சி

---

களுக்கும் நல்ல காலாட்படைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுகிருர். "வறுமையிலிருந்து விடுபட்ட வலுவுள்ள ஆட்கள் குழுவை பராமரிப்பதற்குப் போதிய தரத்தில் பண்ணைகளை வைத்திருப்பது ஆட்சியின் வலிமை மற்றும் பாங்குநிலை சம்பந்தப்பட்டதான அருமையான காரியம்; இது நடைமுறையில் நாட்டின் நிலங்களில் பெரும் பகுதியை வேளாண்படையினருக்கு அதாவது கனவான்களுக்கும் குடிசைவாழ்வோர் (cottagers), விவசாயிகளிடையே நடுத்தர நிலையிலிருந்த மக்களுக்கும் உடைமையாக நிரந்தரமாக உரிமையாக்கியது... காரணம் போர்கள் குறித்துச் சிறப்பாக நிர்ணயம் செய்யக் கூடியவர்களின் பொதுவான அபிப்பிராயத்தின் படி... ஒரு சேனையின் முக்கிய வலிமை காலாட்படையிலேயே அடங்கியுள்ளது. நல்ல காலாட்படை உருவாக்கப்பட வேண்டுமாளுல் அதற்கு அடிமைத்தனம் அல்லது வறிய நிலையில் வளர்ந்த மனிதர்கள் அல்ல மாருக சுதந்திரமான சுபிட்சமான நிலையில் வளர்ந்த மனிதர்கள் அவசியம். எனவே ஓர் அரசில் பிரபுக்களும் கனவான்களுமே முக்கியமான பங்காற்றிளுல் விவசாயிகளும் உழவர்களும் அவர்களது வெறும் வேலையாட்களாய், தொழிலாளர்களாய் அல்லது வெறும் குடிசைவாழ்வோராய் (தங்கமட்டும் இடமுள்ள பிச்சைக்காரர்களாய்) இருப்பார்களாளுல் அங்கு நல்ல குதிரைப் படை இருக்கலாம் ஆளுல் நல்ல திடமான காலாட்படை இருக்காது... இதை பிரான்ஸ், இத்தாலி மற்றும் வேறு சில நாடுகளில் பார்க்கலாம். அந்நாடுகளில் உள்ளபடி இருப்பதெல்லாம் பிரபுக்கள் அல்லது விவசாயிகளே என்ற அளவில், அவர்கள் கூலிப்படை குழுக்களான சுவிட்சர்லந்தவர் போன்ருரைத் தமது காலாட்களாக வேலைக்கு வைக்கும் நிர்ப்பந்தம் இருக்கிறது; இதன் விளைவாக அந்த நாடுகளில் மக்கள் தொகை அதிகமாயும் படைவீரர்கள் குறைவாகவுமுள்ள நிலைமை ஏற்படுகிறது" (*The Reign of Henry VII*. Verbatim reprint from Kennet's England, ed. 1719, London 1870, p. 308).

யில், 1627ல் பிரன்ட் மில்லேச் சேர்ந்த ரோஜர் குரோக்கர் என்பவர் நிரந்தர உரிமையுள்ள நான்கு ஏக்கர் பூமியை இணைத்துக் கொள்ளாமல் பிரன்ட் மில் பண்ணையில் ஒரு குடிசை கட்டியதற்காகத் தண்டனை அளிக்கப்பட்டார். பல ஆண்டுகளுக்குப் பின் 1638ல் முதலாம் சார்ல்ஸ் ஆட்சியில் பழைய சட்டங்களை, குறிப்பாக 4 ஏக்கர் நிலம் சம்பந்தப் பட்ட சட்டத்தை அமுல் செய்வதற்காக ஓர் அரசுக் கமிஷன் நியமிக்கப்பட்டது. கிராம்வெல்லின் காலத்தில் கூட 4 ஏக்கர் நிலம் மானியமாக இருந்தாலன்றி லண்டன் நகரின் நான்கு மைல் எல்லே அளவில் கூட வீடு கட்டுவது தடை செய்யப் பட்டிருந்தது. 18ஆம் நூற்றாண்டின் முதற் பாதியிலுங்கூட விவசாயத் தொழிலாளியின் குடிசையை ஒட்டி ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலம் இல்லாவிட்டால் புகார் செய்யப்படும் நிலைமை இருந்தது. இந்த நாட்களில் விவசாயிக்குக் குடிசை யுடன் சிறு தோட்டம் இருந்தால் அல்லது தன் குடிசையிலி ருந்து நெடுந் தொலையில் ஒரு சிறு காணியை அவன் வாரத் துக்குப் பெற்றிருந்தால் அவன் அதிருஷ்டசாலியாவான்.

''நிலவுடைமையாளர்களும் குத்தகை விவசாயிகளும் இங்கே கைகோர்த்து வேலை செய்கிறார்கள். குடிசையோடு சேர்ந்து ஏதேனும் சில ஏக்கர் நிலம் இருப்பது தொழிலாளர் களை அளவுக்கு மீறி சுதந்திரமானவர்களாக்கி விடும்'' என்கிறார் டாக்டர் ஹண்டர்.*

மக்களை வலுவந்தமாக உடைமை பறிக்கும் நிகழ்ச்சிப் போக்குக்கு, 16ஆம் நூற்றாண்டில் மகா சீர்திருத்தத்திட மிருந்தும், இதைத் தொடர்ந்து சமய பீடங்களின் உடைமை கள் பிரம்மாண்டமான அளவில் சூறையாடப்பட்டதிலிருந்தும் புதிய மற்றும் பயங்கரமான தூண்டுதல் கிட்டியது. மகா சீர்திருத்த காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபை ஆங்கில

---

* Dr. Hunter, *Public Health. 7th Report 1864*, London, 1865, பக்கம் 134. ''ஒதுக்கப்பட்ட (பழைய சட்டப் படி) நிலத்தின் அளவு இப்போது தொழிலாளர்களுக்கு மிக வும் அதிகம் என்றும் அவர்களை சிறு விவசாயிகளாக மாற்றக் கூடும் என்றும் கருதப்படுகிறது.'' (George Roberts, *The Social History of the People of the Southern Counties of England in Past Centuries*, London, 1856, pp. 184-185).

நாட்டு நிலப்பரப்பின் மிகப் பெரும் பகுதியில் நிலப் பிரபுத்துவ உரிமையாளராக இருந்தது. மடங்கள் அழிக்கப்பட்டதால் அவற்றில் வசித்திருந்தவர்கள் பாட்டாளிகளிடையில் வந்து விழுந்தார்கள். சமய அமைப்புகளின் பண்ணைகள் பெருமளவுக்கு மன்னரின் பேராசை பிடித்த செல்லப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டன, அல்லது பேரம் செய்யும் விவசாயிகள் மற்றும் குடிமக்களுக்குப் பெயரளவிலான விலைக்கு விற்கப்பட்டன; அவர்கள் பரம்பரையாக இருந்து வந்த உள்-குத்தகை விவசாயிகளை (sub-tenants) மொத்தமாக வெளியேற்றி தமது நிலங்களை ஒன்ருக இணைத்தார்கள். மாதாகோயிலின் பத்தில் ஒரு பங்கில் ஒரு பகுதியாக இருந்த சட்டபூர்வம் உத்தரவாதம் செய்யப்பட்டிருந்த ஏழை மக்களின் சொத்து சொல்லாமலே பறிமுதல் செய்யப்பட்டது.* “Pauper ubique jacet”[3] என்று இங்கிலாந்திற்குள் பயணம் செய்த பிறகு கூவினார் ராணி எலிசபெத். அவரது ஆட்சியின் 43ஆவது ஆண்டில் அரசு ஏழ்மை உதவி வரியைப் புகுத்தியது மூலம் ஒட்டாண்டித் தனத்தை அதிகார பூர்வம் அங்கீகரிக்கும் கட்டாயம் ஏற்பட்டது.

''இந்தச் சட்டத்தின் கர்த்தாக்கள் இதற்கான காரணங்களை எடுத்துச் சொல்ல வெட்கப்படுகிருர்கள், எனவே (மரபான வழக்காறுக்கு மாருக) இதற்கு எத்தகைய பீடிகையும் கிடையாது.**

முதலாம் சார்லஸினது ஆட்சியின் 16வது ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டத்தின் 4வது அத்தியாயத்தின் படி இது நிரந்தரமானது என்று பிரகடனம் செய்யப்பட்டது, உண்மையில் 1834ல் தான் இது ஒரு புதிய கடுமையான வடிவம் மேற்கொண்டது.*** மகாசீர் திருத்தத்தின் இந்த உடனடி

* ''பத்திலொன்றில் ஏழை மக்கள் பங்குபெறும் உரிமை பழங்காலச் சட்டத்தின் மூலம் நிலைநாட்டப்படுகிறது'' (Tuckett, *A History of the Past and Present State of the Labouring Population*, London, 1846, Vol. II, pp. 804-805).

** William Cobbett, *A History of the Protestant Reformation*, § 471.

*** புரோட்டஸ்டென்ட சமயப் பிரிவின் ''உணர்வை'' பின்வருவனவற்றிலிருந்து காணலாம். இங்கிலாந்தின் தென்

விளைவுகள் அதன் ஆக நிலையான விளைவுகளல்ல. சமய அமைப்புகளின் உடைமை நிலச் சொத்துரிமையின் மரபான நிலைமைகளின் சமயக் கோட்டையாக அமைந்தது. அதன் வீழ்ச்சிக்குப்

---

பகுதியில் ஒரு சில நிலவுரிமையாளர்களும், வசதியான விவசாயிகளும் கூடி ஆலோசனை நடத்தி எலிசபெத்தின் ஏழ்மை (நிவாரண) சட்டத்தின் சரியான வியாக்யானம் குறித்துப் பத்துக் கேள்விகளை முன்வைத்தார்கள். இவற்றை அவர்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்திருந்த பிரசித்தி பெற்ற சட்ட நிபுணரான செர்ஜண்ட் ஸ்னிக்கி (பின்னுல் முதலாம் ஜேம்ஸ் கீழ் நீதிபதியாக இருந்தவர்)யிடம் அவரது அபிப்பிராயம் கோரி முன்வைத்தார்கள். ''கேள்வி 9—திருச்சபை வட்டாரத்திலுள்ள (The parish) சில பணக்கார விவசாயிகள் இந்தச் சட்டத்தை (எலிசபெத் ஆட்சியின் 43ஆவது ஆண்டில்) அமுல் நடத்துவதிலான தொல்லைகள் அனைத்தையும் அகற்றுவதற்குரிய செயல்திறனுள்ள ஒருமுறையை வகுத்துள்ளனர். வட்டாரத்தில் ஒரு சிறையைக் கட்ட வேண்டும், பிறகு அண்டை அயல் வாசிகளுக்கு ஓர் அறிவித்தல் செய்ய வேண்டும், அதாவது அவர்களில் யாராவது ஏழைகளுக்குப் பண்ணையில் வேலை தரும் உத்தேசம் கொண்டிருந்தால் ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்கள் ஏழைகளை எடுத்துக் கொள்ளும் ஆகக் குறைந்த விலை என்ன என்பதைக் குறிக்கும் முத்திரையிட்ட வேண்டுகோள்களைத் தர வேண்டும்; மேலே குறிப்பிடப்பட்ட சிறைக்குள் அடைக்கப்பட்டவர் தவிர வேறு யாரையும் வேலைக்கு எடுப்பதில்லை என்று மறுக்கும் அதிகாரம் அவர்களுக்கு உண்டு. இந்தத் திட்டத்தை முன்வைத்தவர்கள், பக்கத்திலுள்ள மாவட்டங்களில் வேலை செய்ய விருப்பமில்லாதவர்கள், வேலைசெய்யாமல் வாழ்வதற்கு வேண்டிய பண்ணையோ அல்லது கப்பலோ உடைமையாகக் கொள்ளும் வசதியோ தகுதியோ இல்லாதவர்கள் இருப்பார்கள், அவர்களை வட்டாரத்துக்கு மிகவும் சாதகமான முறையில் முன்வருமாறு தூண்டலாம் என்று கருதுகிருர்கள். ஒரு கண்டிராக்டரின் பராமரிப்பில் ஏழைகள் எவராவது இறந்து போனுல் பழி அவரையே சாரும், வட்டாரம் தனது கடமைகளை அவரைப் பொருத்த வரை ஏற்கெனவே நிறைவேற்றி விட்டதாகக் கருதப்படும். இப்போதைய சட்டம் இந்த வகையான விவேகமான நடவடிக்கைக்கு உத்தரவாதம் செய்யாது என்று நாங்கள் அஞ்சுகிறோம்; ஆனுல் இந்த மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட நிலவுரிமையாளர்களும் பக்கத்து மாவட்டத்தில் உள்ளவர்களும் ஏழைகளை சிறையிலடைத்து வேலை வாங்க ஒரு நபரிடம் கண்டிராக்ட் ஏற்படுத்திக் கொள்ள வட்டாரத்துக்கு இயலும் வகையில் ஒரு சட்டத்தை முன்மொழியுமாறு தமது உறுப்பினர்களுக்கு உத்தரவிடுவதில் தயாராகச் சேர்ந்து

பிறகு இவை மேலால் நிலைக்கக் கூடியனவாக இல்லை.*

17ஆம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டிலுங்கூட சுதந்திரமான விவசாயி வர்க்கமான வேளாண் படையினர்

---

கொள்வார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும்; இவ் வாறு சிறைக்குள் அடைக்கப்படுவதையும் வேலை வாங்கப்படு வதையும் எந்த நபராவது மறுப்பாரானால் அவர் எவ்வித நிவாரணத்துக்கும் உரியவரல்ல என்று பிரகடனம் செய்யப் படும். இது கஷ்டப்படுவோர் நிவாரணம் கோருவதையும் வட்டாரங்களைக் கீழடக்கி வைப்பதற்கான சாதனமாக இருப் பதையும் தடை செய்யும், என்றும் நம்புகிறோம்'' (R. Blakey, *The History of Political Literature from the Earliest Times*, London, 1855, Vol. II, pp. 84-85). ஸ்காட்லந்தில் பண்ணை அடிமை முறை ஒழிப்பு இங்கிலாந்தில் நிறைவேறியதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னரே நிகழ்ந்தது. 1698ல் கூட சால்டௌனைச் சேர்ந்த ஃபிளெச்சர் ஸ்காட்லந்து நாடாளு மன்றத்தில் கூறினார்: ''ஸ்காட்லந்திலுள்ள பிச்சைக்காரர்கள் தொகை 2,00,000க்கும் குறையாது என்று கணக்கிடப்படு கிறது. ஒரு குடியரசுவாதி என்ற முறையில் கோட்பாடு பூர்வ மாக நான் ஆலோசனை கூறும் ஒரே பரிகாரம் பழைய பண்ணை யடிமை முறையினை மீண்டும் கொண்டுவருவது, தமது சொந்தப் பிழைப்புக்கு வகை செய்து கொள்ள முடியாத அனைவரையும் அடிமைகளாக்குவது என்பதே.'' ஈடன், **ஏழை களின் நிலை** (*The State of the Poor*, லண்டன், 1797, பாகம் I, அத்தியாயம் 1, பக்கங்கள் 60-61) என்ற நூலில் கூறு வதாவது: ''பண்ணையடிமை முறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஏழைகள் தோற்றத்தின் சகாப்தமாக இன்றியமையாத முறையில் ஏற்பட்டு விட்டது போலும். நமது தேசிய ஏழை மக்களின் இரு பெற்றோர்கள் பட்டறைத் தொழிலும் வாணி கமுமே.'' ஈடனும் நமது கோட்பாடு பூர்வ ஸ்காட்லந்திய குடியரசுவாதி போலவே ஒன்றில் மட்டுமே தவறு செய்கிறார்: பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டதல்ல, மாறாக நிலத்தி லான விவசாயத் தொழிலாளியின் சொத்துடைமை ஒழிக்கப் பட்டதே அவன் பாட்டாளியானதற்குக் காரணம், இறுதி யாக அவன் ஓட்டாண்டியானதற்கும் காரணம். உடைமை பறிமுதலை இன்னொரு வழியில் அமுல் செய்த பிரான்ஸில் 1566 மூலின் அவசரச் சட்டம் மற்றும் 1656ம் ஆண்டு ஆணை இங்கிலாந்தின் ஏழ்மைச் சட்டங்களுக்கு இணையானவை.

* பேராசிரியர் ரோஜர்ஸ்—புரோட்டஸ்டென்ட் வைதி கப் போக்கின் வெங்களமாக இருந்த ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரத்தில் பேராசிரியராக இருந்த போதிலும் **விவசாயத்தின் வரலாறு** என்ற நூலுக்கு அவர் எழுதிய முகவுரையில் மகாசீர்திருத்தத்தால் திரளான

(the yeomanry), சாகுபடியாளர் வர்க்கத்தை விடவும், மிக அதிகமான தொகையினராக இருந்தார்கள். அவர்கள் கிராம் வெலின் வலிமைக்கு முதுகெலும்பாக இருந்தார்கள்—மெக் காலே ஒப்புக்கொள்வது போன்று—குடிகார நிலப்பிரபுகள், எஜமானரால் விலக்கித் தள்ளப்பட்ட வைப்புப் பெண்களைத் திருமணம் செய்ய வேண்டிய அவர்களது சேவகர்களான கிராம குருமார் ஆகியவர்களுடன் ஒப்பிடும் போது அவர் கள் மேலானவர்களாகவே இருந்தார்கள். 1750ல் வேளாண் படையினர் மறைந்து விட்டார்கள்,* இதே போன்று 18ஆம் நூற்றுண்டின் இறுதிப் பத்தாண்டில் விவசாயித் தொழிலாளி யின் பொது நிலத்தின் கடைசிச் சுவடும் மறைந்து விட்டது. விவசாயப் புரட்சியின் முற்றிலும் பொருளாதார அடிப்படை யிலான காரணங்களை இங்கு விவரிக்காமல் ஒரு புறம் விட்டு விடுகிறேம். கையாளப்பட்ட பலப்பிரயோக முறைகளைப் பற்றி மட்டுமே இங்கு விளக்குகிறேம்.

ஸ்டுவர்ட் வமிச மன்னர்கள் மீண்டும் அரசபதவிக்கு வந்த பிறகு நிலவுரிமையாளர்கள் சட்ட மார்க்கமாகவே உடைமை அபகரிக்கும் செயலை (an act of usurpation) நிறை வேற்றினார்கள், மாகண்டத்தில் இதை எவ்விதச் சட்ட சம் பிரதாயமும் இன்றிச் செயல்படுத்தினார்கள். அவர்கள் நிலத் திலிருந்த நிலப்பிரபுத்துவ உடைமையுரிமை முறையை ஒழித்

---

மக்கள் ஓட்டாண்டிகளாக்கப்பட்ட செயலுண்மையை வற்புறுத்திக் கூறுகிறார்.

* *A Letter to Sir T. C. Bunbury, Bart.: On the High Price of Provisions. By a Suffolk Gentleman*, Ipswich, 1795, p. 4. பெரிய பண்ணைகளை மிகவும் ஆவேசத்துடன் ஆதரிக்கும் *Inquiry into the Connection between the Present Price of Provisions and the Size of Farms etc.* (London, 1773, p. 139) என்ற நூலின் ஆசிரியர் கூறுவதாவது: ''நமது வேளாண படையினரை இழக்க நேர்ந்தது பற்றி மிகவும் வருந்துகிறேன், இந்த நாட்டின் சுதந்திரத்தை உண்மையில் காத்து வந்த மனிதர்கள் இவர்கள்; அவர்களது நிலங்கள் ஏகபோக பிரபுக் களிடம் சிக்கி, சிறு விவசாயிகளுக்கு வாரத்துக்கு விடப்பட் டுள்ளன என்பதைக் காண வருத்தமடைகிறேன். இந்த விவசாயிகளின் குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் அடிமை கள் (vassals) மீதான நிபந்தனைகளை விடச் சற்றும் மேலான வையல்ல. துரதிருஷ்டவசமான சந்தர்ப்பங்களில் அவர்கள் நிலத்தை விட்டு விரட்டப்படுவார்கள்.''

னர் அதாவது அரசுக்குரிய தமது கடப்பாடுகள் அனைத்துக்கும் முடிவு கட்டிவிட்டனர், விவசாயிகள் மற்றும் இதர வெகுஜனங்கள் மீது வரி போட்டு அரசுக்கு ''இழப்பீடு'' செய்தனர், தமக்கு நிலப்பிரபுத்துவ உரிமைகள் பெயரளவில் மட்டுமே இருந்த பண்ணைகளில் நவீன தனியார் சொத்துடைமை உரிமைகளைத் நிலைநாட்டிக் கொண்டார்கள், இறுதியாக குடியிருப்புச் சட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டனர்; இவை mutatis mutandis (வேண்டிய மாறுதல்களுடன்) ஆங்கில நாட்டு விவசாயித் தொழிலாளிகள் மீது, ரஷ்ய விவசாயிகள் மீது தார்த்தார் பொரீஸ் கொதுநோவின் ஆணையைப் போன்ற அதே விளைவை ஏற்படுத்தியது.[4]

அந்தப் ''புகழார்ந்த புரட்சி''[5] ஆரஞ்சு வமிச வில்லியம் மன்னருடன் கூடவே உபரிமதிப்பை சுவிகரிக்கும் நிலவுடைமையாளர்களையும் முதலாளிகளையும் ஆட்சி அதிகாரத்தில் கொண்டு வந்தது.* அரசு நிலங்களை பிரம்மாண்டமான அளவில் களவாடும் செயல்பாடு மூலம் ஒரு புதிய சகாப்தத்தை அவர்கள் தொடங்கி வைத்தார்கள், இது வரை இத்தகைய களவுகள் மிகவும் மிதமான அளவில் இருந்தன. அரசாங்க நிலங்கள் சும்மா அள்ளித் தரப்பட்டன, படுமோசமான தொகைகளுக்கு விற்பனை செய்யப்பட்டன, அல்லது நேரடியாகப் பறிக்கப்பட்டுத் தனியார் பண்ணைகளோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன.** இவையாவும் சட்ட மரியாதைகளைச் சிறிதளவும் அனுசரியாது நடந்தன. இவ்வாறு

---

* இந்த முதலாளித்துவ வீரனின் தனிப்பட்ட ஒழுக்க நெறி இயல்புகளிடையே காணப்படுவதாவது: ''1695ல் அயர்லந்தில் ஓர்க்கினி சீமாட்டிக்கு பெருமளவு நிலம் மானியமாக வழங்கப்பட்டது மன்னரின் அன்பாதரவுக்கும் இந்தச் சீமாட்டியின் செல்வாக்குக்குமான பகிரங்க உதாரணமாகும்... ஓர்க்கினி சீமாட்டியின் தனி அன்புக்குப் பாத்திரமானவை foeda labiorum ministeria (கீழ்த்தரமான காதல் செயல்கள்)'' (பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள ஸ்லோன் ஏட்டுப்பிரதி தொகுப்பில் எண் 4224. இந்த ஏட்டுப்பிரதியின் தலைப்பு: *The Character and Behaviour of King William, Sunderland, etc., as Represented in Original Letters to the Duke of Shrewsbury from Somers, Halifax, Oxford, Secretary Vernon, etc.* இது சுவையான தகவல் நிறைந்ததாக உள்ளது).

** ''அரசாங்க நிலங்கள், ஒரு பகுதி விற்பனை மூலமும் ஒரு பகுதி பரிசளிக்கப்பட்டும், சட்டவிரோதமாக பராதீனம்

மோசடி மூலம் சுவிகரிக்கப்பட்ட அரசு நிலங்களுடன் மாதா கோவில் பண்ணைகள் களவாடப்பட்டதும் சேர்ந்து—குடியரசுப் புரட்சியின் போது இவை மீண்டும் இழக்கப்படாத வரை—இன்றைய ஆங்கில உயர்குடி சிலராட்சியினது (oligarchy) நிலச் சொத்தின் அடிப்படையாக அமைந்துள்ளன.* பூர்ஷ்வா-முதலாளிகள், நில விற்பனையை விருப்பம் போல் நடத்தவும், பெரிய பண்ணை-அமைப்பு அடிப்படையில் நவீன விவசாயத் துறைகளை விஸ்தரிக்கவும், தமக்கு வேண்டிய அளவுக்கு கிராமங்களிலிருந்து விவசாயிப் பாட்டாளிகள் தாராளமாக வருவதை அதிகரிக்கவும் இந்த நடவடிக்கையை ஆதரித்தார்கள். தவிரவும் புதிய நிலவுடைமை உயர்குடியினர், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நிதிப் பிரபுக்கள் வர்க்கத்தினரான புதிய வங்கி உரிமையாளர்கள் மற்றும் பெரிய பட்டறை அதிபர்களின் இயல்பான நேச சக்தியாக இருந்தனர். இந்தப் பட்டறை அதிபர்கள் அன்று பாதுகாப்பு வரிகளைச் சார்ந்து நின்றூர்கள். சுவீடன் நாட்டு முதலாளிகளைப் போலவே ஆங்கில முதலாளி வர்க்கமும் தனது சொந்த நலன்களுக்காக முற்றிலும் விவேகத்துடன் செயல்பட்டது; சுவீடன் நாட்டு முதலாளி வர்க்கம் நிகழ்ச்சிப் போக்கைத் தலை கீழாக்கி தமது பொருளாதார நேச சக்தியான விவசாயிகளுடன் சேர்ந்து உயர்குடிப்பிரபு கும்பலிடமிருந்து அரசு நிலங்களை பலாத்காரமாக மீட்டுப் பெறுவதற்கு மன்னர்களுக்கு உதவியது. இது 1604க்குப் பிறகு பத்தாவது சார்லஸ், பதினோராவது சார்லஸ் மன்னர்கள் காலத்தில் நடைபெற்றது.

---

செய்யப்பட்டது ஆங்கில நாட்டின் வரலாற்றிலேயே மிகவும் வெட்கக் கேடான அத்தியாயமாகும்... தேசத்தின் மீது நடத்தப்பட்ட மிகப் பெரிய மோசடியாகும் (gigantic fraud on the nation)" (F. W. Newman, *Lectures on Political Economy*, London, 1851, pp. 129, 130). [இன்று இங்கிலாந்திலுள்ள பெரிய நில உரிமையாளர்கள் எவ்வாறு தமது நிலங்களைப் பெற்றனர் என்பது குறித்த விவரங்களுக்கு Noblesse Oblige எழுதியுள்ள *Our Old Nobility*, London, 1879 பார்க்கவும்—**பி.எங்கெல்ஸ்.**]

* இ. பர்க் பெட்ஃபோர்டின் பிரபுக் குடும்பம் பற்றிய பிரசுரத்தைப் படியுங்கள். இக்குடும்பத்தின் சந்ததியான ஜான் ரஸ்ஸல் பிரபு "the tomtit of liberalism" (மிதவாதத்தின் குட்டித்தலைவர்).

சமுதாய உடைமை—தற்போது விளக்கப்பட்ட அரசு உடைமையிலிருந்து எப்போதும் வேறுபட்டுத் தனியாக இருப்பது—நிலப்பிரபுத்துவத்தின் மறைவில் நிலவியதான ஒரு பழைய டியூட்டானிக் சம்பிரதாயமாகும். இந்த நிலம் பலாத்காரமாக உடைமை பறிப்புக்கு உள்ளானதும் இதைத் தொடர்ந்து சாகுபடிக்கு லாயக்கான நிலம் மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டதும் 15ஆம் நூற்றுண்டின் இறுதியில் தொடங்கி, 16ஆம் நூற்றுண்டுக்கும் எவ்வாறு விஸ்தரிக்கப்பட்டது என்பதை நாம் பார்த்தோம். ஆனுல் அந்தக் காலத்தில் இந்த நிகழ்ச்சிப் போக்கு தனிப்பட்ட பலாத்காரச் செயல்கள் மூலம் நிறைவேற்றப்பட்டது, இதை எதிர்த்து சட்டம் 150 ஆண்டு காலம் ஒரு பயனுமின்றிப் போராடியது. 18ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட வளர்ச்சி இந்தச் சட்டமே மக்கள் நிலங்களைக் களவாடுவதற்கான கருவியாகி விட்டது என்பதில் வெளிப்பட்டது; அதே காலத்தில் பெரிய பண்ணையுடைமையாளர்கள் நிலங்களைக் களவாடத் தமது சிறிய சுதந்திரமான முறைகளையும் பயன்படுத்தி வந்தார்கள்.* "Bills for Inclosures of Commons" (பொது நிலங்களை சுற்றி வளைத்து அடைப்பதற்கான சட்டங்களே) இந்தக் களவாடலின் நாடாளுமன்றத்து வடிவமாகும், வேறு சொற்களில் கூறிஞல், நிலப்பிரபுக்கள் மக்கள் நிலங்களை தனியுடைமையாகத் தமக்குத் தாமே வழங்கிக் கொள்வதற்கான ஆணைகள் இவை, மக்கள் உடைமைகளைப் பறிக்கும் ஆணைகள் இவை. சர் எஃப். எம். ஈடன் சமுதாய நில உடைமையை மிகப் பெரும் நிலச்

---

* ''குடிசை வாழ்வோர் (cottagers) தம்மையும் தம் குழந்தைகளையும் தவிர வேறு உயிர் வாழ்ஜீவிகள் எதையும் வைத்திருக்கக் கூடாது என்று பண்ணை உடைமையாளர்கள் தடை போட்டிருந்தார்கள். கால்நடைகள் அல்லது கோழிகளை அவர்கள் வைத்திருந்தால் அவற்றின் உணவுக்காகப் பண்ணைக் களஞ்சியங்களிலிருந்து தானியம் திருடி விடுவார்கள் என்பதே இதற்கு சாக்குப் போக்கு. குடிசைவாழ்வோரை ஏழைகளாகவே வைத்திருங்கள் அப்பொழுதுதான் அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பார்கள் என்றும் அவர்கள் கூறிஞர்கள். ஆனுல் உண்மை என்னவெனில் பண்ணையார்கள் இந்த வழியில் பொது நிலத்தை தமக்கே முழுமையாக எடுத்துக் கொள்கிறுர்கள் என்பதே'' (*A Political Inquiry into the Consequences of Enclosing Waste Lands*, London, 1785, p. 75).

சொந்தக்காரர்களின் தனியுடைமையாகச் சித்திரிக்க முயல்கிறார் — நிலப்பிரபுக்கள் இருந்த இடத்தில் அவர்கள் இப்போது இருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர் ''பொது நிலங்களை அடைப்பதற்கு ஒரு பொதுவான நாடாளுமன்றச் சட்டம் வேண்டும்'' என்று கோருகிறார் (இதன் மூலம் நிலங்களைத் தனிச் சொத்தாக மாற்றுவதற்கு நாடாளுமன்ற coup d'état (திடீர் நடவடிக்கை) அவசியம் என்பதை ஒத்துக் கொள்கிறார்); மேலும் உடைமை பறிமுதல் செய்யப்பட்ட ஏழைகளுக்கு இழப்பீடு தருவதற்கான சட்டத்தையும் கோருகிறார். இவ்வாறு தமது தந்திரமான வாதங்களையே அவர் மறுத்துரைக்கிறார்.*

சுதந்திரமான வெளாண் படையினரின் இடத்தை விருப்பக் குத்தகைதாரர்களாக (tenants-at-will) ஆண்டுக் குத்தகை மூலம் எடுத்துக் கொண்ட சிறு விவசாயிகள், நிலவுடைமையாளரின் இஷ்டப்படி நடக்கும் அடிமைத்தனம் கொண்ட மந்தையாக இருக்கின்றனர். அதே பொழுதில் அரசு நிலங்கள் களவாடப்பட்டதற்கு அடுத்தபடியாக சமுதாய நிலங்கள் திட்டமிட்டுக் களவாடப்பட்டுப் பெரிய பண்ணைகளைப் பெருக்க வைக்க உதவியுள்ளன. இவை முதலாளித்துவப் பண்ணைகள்** அல்லது வியாபாரிப் பண்ணைகள்*** என்று 18ஆம் நூற்றாண்டில் அழைக்கப்பட்டன; மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்களைப் பட்டறைத் தொழில்களுக்கான பாட்டாளிகளாக ''விடுவிப்பதும்'' நடை பெற்றது.

ஆனால் தேசியச் செல்வமே மறுபுறம் மக்களின் வறுமையாகிவிட்ட முற்றொருமையை 18ஆம் நூற்றாண்டு, 19ஆம் நூற்றாண்டைப் போன்று அவ்வளவு முழுமையாக அங்கீகரித்திருக்கவில்லை. எனவே ''பொது நிலங்களை அடைப்பது'' சம்பந்தமாக அந்தக் காலத்திய பொருளாதார இலக்கியத்தில்

---

* ஈடன், முன்குறிப்பிட்ட நூல், முகவுரை.

** *Capital Farms (Two Letters on the Flour Trade and the Dearness of Corn.* By a Person in Business. London, 1767, pp. 19, 20).

*** *Merchant Farms (An Inquiry into thc Causes of the Present High Price of Provisions*, London, 1767, p. 111. குறிப்பு.) ஆசிரியர் பெயரின்றி வெளியிடப்பட்ட இந்த அரிய நூல் ரெவ். நத்தேனியல் பார்ஸ்டரால் எழுதப்பட்டதாகும்.

மிகவும் காரசாரமான விவாதம் நடைபெற்றது. என்முன் கிடக்கும் பெருந்திரளான தகவல் பொருட்களிலிருந்து ஒரு சில பகுதிகளைத் தருகிறேன், அந்தக் காலத்திய சூழ்நிலை பற்றிய வலுவான விளக்கத்தை இவை வழங்கும்.

''ஹெர்ட்ஃபோர்ட் ஷயரைச் சேர்ந்த பல வட்டாரங்களில் சராசரி 50 முதல் 150 ஏக்கர் கொண்டதான 24 பண்ணைகள் மூன்று பண்ணைகளாக உருமாற்றப்பட்டு விட்டன''* என்று கோபாவேசங்கொண்ட ஒருவர் எழுதுகிறார். நார்த்தம்ப்டன்-ஷயரிலும், லிசெஸ்டர்-ஷயரிலும் பொது நிலங்கள் அடைக்கப்படுவது மிகப் பெருமளவில் நடைபெற்றுள்ளது, அடைப்புகளின் விளைவாக உருவான புதிய பிரபுக் குடும்பங்களின் நிலங்கள் மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டுள்ளன. இதன் பின்விளைவாகப் பல பிரபுக் குடும்ப நிலங்களில் ஆண்டு தோறும் உழவு செய்யப்படும் நிலப்பரப்பு 50 ஏக்கர்கூட இல்லை, முன்னாட்களில் இவற்றில் 1,500 ஏக்கர்கள் வரை உழுது பயிரிடப்பட்டன... பழைய குடியிருப்பு வீடுகள், களஞ்சியங்கள், குதிரை லாயங்கள் ஆகியவற்றின் இடிபாடுகள்'' மட்டுமே அங்கு முன்னே மக்கள் வாழ்ந்திருந்ததற்கான அடையாளங்களாகும்... ''ஒரு சில திறந்த வயல் வெளிக் கிராமங்களில் நூறுவரை இருந்த வீடுகளும் குடும்பங்களும் எட்டாகவோ... பத்தாகவோ... சுருங்கிவிட்டன 15 அல்லது 20 ஆண்டுகளுக்குள் மட்டுமே அடைக்கப்பட்ட பெரும்பாலான வட்டாரங்களில் நிலம் வைத்திருப்போர் எண்ணிக்கை முன்னுள் திறந்த வயல் வெளிகளாக இருந்த போது அவற்றில் நிலம் வைத்திருந்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் மிகவும் குறைவாகவே உள்ளது. முன்நாட்களில் 20 அல்லது 30 விவசாயிகளிடமும் அதே அளவிலான சிறு குத்தகைதாரர் மற்றும் உரிமையாளர்களிடமும் இருந்த நிலத்தை 4 அல்லது 5 செல்வந்த கால்நடைப் பண்ணையார்கள் தமக்கென வசப்படுத்திக் கொள்வது என்பது அசாதாரணமல்ல. மேற்குறிப்பிட்ட அனைவரும் அவர்களது குடும்பங்களுடன், அவர்களால் வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டு ஆதரிக்கப்பட்டு வந்த பல மற்ற குடும்பங்களோடும் பிழைப்பின்றி வெளியே தள்ளப்படுகின்றார்கள்.**

தரிசாகக் கிடந்த நிலங்களை மட்டுமன்றி, பொதுவில்

---

* Thomas Wright, *A Short Address to the Public on the Monopoly of Large Farms*, 1779, pp. 2, 3.

** Rev. Addington, *Inquiry into the Reasons for and against Enclosing Open Fields*, London, 1772, pp. 37-43.

பயிரிடப்பட்டவையோ அல்லது சிலர் சமுதாயத்துக்கு ஒரு நிர்ணயமான வாரம் செலுத்தித் தம் வசம் வைத்திருந்தவை யோவான நிலங்களைக் கூட அடைப்பு என்ற சாக்குப் போக்கில் அண்டையிலிருந்த நிலவுடைமையாளர்கள் எடுத்துச் சேர்த்துக் கொண்டு விட்டார்கள்.

''இங்கு நான் குறிப்பிடுவது ஏற்கெனவே மேம்படுத்தப் பட்ட திறந்த வயல் வெளிகள் மற்றும் நிலங்களைச் சுற்றி வளைத்த அடைப்புகளையே. அடைப்புகளை ஆதரித்த எழுத்தாளர்களும் கூட, இந்தச் சிறிதாகிப் போன கிராமங்கள் பண்ணைகளின் ஏகபோகங்களை அதிகரிக்கும், உணவுப் பண்டங்களின் விலைகளை உயர்த்தும், மக்கள் தொகைக் குறைப்பை உண்டாக்கும் என்பதையும்... (இப்போது நிறைவேற்றப் படுவது போன்ற) தரிசு நிலங்கள் மீதான அடைப்புகளுங் கூட ஏழை மக்களின் பிழைப்புச் சாதனத்தில் ஒரு பகுதியைப் பறித்து அவர்களுக்கு இன்னல் விளைக்கும், ஏற்கெனவே மிகவும் பெரியதாக உள்ள பண்ணைகளை மேலும் அதிகரிக்கவே உதவும் என்பதையும் ஒப்புக் கொள்கிறார்கள்.''* டாக்டர் பிரைஸ் கூறுகிறார்: ''இந்த நிலம் ஒரு சில பெரிய சாகுபடியாளர்கள் கைகளில் போய்ச் சேரும் போது இதன் பின் விளைவாக சிறு விவசாயிகள்'' (அவர்களைப் பற்றி ஏற்கெனவே பிரைஸ் பின்வருமாறு சொன்னார்: ''பெரு வாரியான சிறு உரிமையாளர்கள் மற்றும் குடிவாரச் சாகுபடியாளர்கள்— தம்மையும் தமது குடும்பங்களையும் தாம் வைத்திருக்கும் நிலத்தில் கிட்டும் விளைபொருள் மூலம், பொது நிலத்தில் வளர்க்கும் ஆடுகள் கோழிகள் பன்றிகள் மூலம் பராமரித்துக் கொள்கிறார்கள், எனவே பிழைப்புச் சாதனங்களை விலைக்கு வாங்கும் வாய்ப்பு இவர்களுக்கு இல்லை'') மற்றவர்களிடம் வேலை செய்வது மூலம் தமது பிழைப்புக்குத் தேவையானவற்றை சம்பாதித்துக் கொள்ள வேண்டிய ஆட்களாக மாற்றப்படுவார்கள்; அவசியம் காரணமாகத் தமக்குத் தேவைப்படும் அனைத்துக்கும் மார்க்கெட்டுக்குப் போக வேண்டிய நிலையில் இருப்பார்கள்... உழைப்பு அதிகமாக இருக்கலாம் காரணம் அதற்குரிய கட்டாயம் அதிகரித்துள்ளது. நகரங்களும் பட்டறைத் தொழில்களும் பெருகும், காரணம் இடம் தேடியும் வேலை தேடியும் மேலதிகமான மக்கள் அவற்றை நோக்கி முடுக்கப்படுவார்கள். இந்த வழியில் தான் பண்ணை

---

* Dr. R. Price, *Observations on Reversionary Payments*, 6 th. ed., London, 1803, Vol. II, p. 155. ஃபார்ஸ்டர், அடிங்டன், கெண்ட், பிரைஸ் மற்றும் ஜேம்ஸ் ஆண்டர்சன் நூல்களைப் படித்து முகஸ்துதிக்கார மேக்குலோச் தனது பட்டியலில் (*The Literature of Political Economy*, London, 1845) தரும் மோசமான பிதற்றல்களை ஒப்புநோக்க வேண்டும்.

களை தன்வயமாக்கி அதிகரித்தல் இயல்பாகச் செயல்படுகிறது. இந்த நாட்டில் பல ஆண்டுகளாக உண்மையில் இது இந்த வழியில் தான் செயல்பட்டு வருகிறது.''*

அடைப்புகளின் விளைவை அவர் பின்வருமாறு தெகுத்துக் கூறுகிறார்:

''ஒட்டுமொத்தத்தில், கீழ்மட்ட வரிசைகளைச் சேர்ந்த மனிதர்களின் சூழ்நிலைமை எல்லா வழிகளிலும் மோசமாக மாறியுள்ளது. சிறிய நிலங்களை வைத்திருந்தவர்கள் என்ற நிலைமையிலிருந்து அவர்கள் நாள் வேலைக்காரர்களாயும் கூலிக்கு உழைப்பவர்களாயும் தாழ்வுறுத்தப்படுகின்றனர்; அதே சமயத்தில் அந்த நிலைமையில் அவர்களது பிழைப்பு மேலும் கஷ்டமாகி விட்டது.''**

---

* பிரைஸ், அதே நூல், பக்கம் 147.

** பிரைஸ், அதே நூல், பக்கம் 159. பண்டைக்கால ரோமாபுரி நம் நினைவுக்கு வருகிறது. ''பாகம் பிரிக்காத நிலத்தில் மிகப் பெரும் பகுதி செல்வந்தர்களுக்கு உடைமையாகியது. அவர்கள் அக்காலத்தின் அனுகூலமான நிலைமைகளில் நம்பிக்கை வைத்து இந்த உடைமைகள் அவர்களிடமிருந்து மீண்டும் எடுத்துக் கொள்ளப்படமாட்டா என்று கருதினார்கள், எனவே தமது நிலங்களுக்கு அருகாமையில் கிடந்த ஏழை மக்களுக்குச் சொந்தமான சில துண்டு நிலங்களை அவற்றின் உரிமையாளர்களின் சம்மதத்தோடு விலைக்கு வாங்கினார்கள், வேறு சில துண்டு நிலங்களைப் பலாத்காரமாக மேற்கொண்டார்கள். இப்போது அவர்கள் தனித்தனி சிறு நிலங்களில் பயிர் செய்வதற்குப் பதில் மிகவும் பரவலான நிலப் பகுதியில் விவசாயம் செய்யலானார்கள். சுதந்திரமான மனிதர்கள் உழைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு ராணுவ சேவைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் விவசாய வேலைகளுக்கும் கால்நடை வளர்ப்புக்கும் அடிமைகளை வேலைக்கமர்த்தினார்கள். அடிமைகளை உடைமையாகக் கொண்டது அவர்களுக்கு மாபெரும் லாபத்தைக் கொண்டு வந்தது, இந்த அடிமைகள் இராணுவ சேவையிலிருந்து விலக்குப் பெற்றதால் இஷ்டம் போலப் பல்கிப் பெருகினார்கள் ஏராளமான குழந்தைகளைப் பெற்றிருந்தார்கள். இவ்வாறாக அதிகாரமுள்ள மனிதர்கள் தமக்கே எல்லாச் செல்வத்தையும் உரிமையாக்கிக் கொண்டனர், நாட்டில் அடிமைகள் மொய்த்து மலிந்தனர். மறு புறம் இத்தாலியர்கள் எப்போதும் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வந்தார்கள்; வறுமை, வரிகள், இராணுவ சேவையால் அழிக்கப்பட்டு வந்தார்கள். சமாதானம் நிலவிய காலத்திலும்கூட வேலையின்றித் தவிப்பதே

உண்மையில் பொது நிலங்கள் அநீதமாகப் பறிக்கப்பட்டதும் இதைத் தொடர்ந்து விவசாயத்தில் நிகழ்ந்த புரட்சியும் விவசாயத் தொழிலாளர்களை மிகவும் கடுமையாகப் பாதித்தன, ஈடன் கூற்றுப்படி 1765க்கும் 1780க்குமிடையே அவர்களது கூலி குறைந்தபட்ச மட்டத்திற்கும் கீழே இறங்கத் தொடங்கியது, அதிகார பூர்வமான ஏழ்மைச் சட்ட நிவாரண மூலம் நிறைவு செய்யப்பட வேண்டி இருந்தது. ''அவர்களது கூலி, வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளுக்கே பற்றவில்லை'' என்கிறார் அவர்.

அடைப்புகள் முறையின் ஆதரவாளரும், டாக்டர் பிரைஸின் எதிர்ப்பாளருமான ஒருவர் கூறுவதைக் கேட்போம்.

''மனிதர்கள் திறந்த வெளி நிலத்தில் தமது உழைப்பை வீணுக்குவது காணப்படவில்லை என்பதால் மக்கள் தொகை கட்டாயம் குன்ற வேண்டும் என்ற பின்விளைவு நேர வேண்டுவதில்லை... சிறிய விவசாயிகளை மற்றவர்களுக்குக் கட்டாயம் உழைக்க வேண்டிய மனிதர்களின் ஒரு குழுவாக மாற்றுவதால் மேலும் அதிக உழைப்பு உருவாகுமானல், இது நாடு'' (இதில் இவ்வாறு மாற்றப்பட்டவர்கள் சேரமாட்டார்கள்) ''விரும்பி ஏற்கும் ஒரு சாதகமாகும்... ஒரு பண்ணையில் அவர்களது கூட்டு உழைப்பு ஈடுபடுத்தப்பட்டால் உற்பத்திப் பொருள் மேலும் அதிகமாகும், அவை பட்டறைத் தொழில்களுக்கு உபரியாகக் கிடைக்கும், இதன் மூலம் நாட்டின் செல்வச் சுரங்கமான பட்டறைத் தொழில், உற்பத்தி செய்யப்படும் தானியத்தின் அளவுக்கு ஏற்ப அதிகரிக்கும்.''*

---

அவர்கள் கதியாக இருந்தது: செல்வந்தர்களிடம் நிலம் உடைமையாக இருந்தது, அவர்கள் சுதந்திரமான மனிதர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளவில்லை அடிமைகளை வைத்தே நிலத்தை உழுது பயிரிட்டார்கள்'' (Appian. Römische Bürgerkreige, I, 7). இந்த வாசகம் லிசினியசின்[6] சட்டத்துக்கு முந்திய காலத்தைக் குறிக்கிறது. ரோமன் சாமான்ய மக்களின் அழிவைப் பெருமளவுக்கு துரிதப்படுத்திய இராணுவ சேவை; இது மாபெரும் சார்லசுக்கு சுதந்திரமான ஜெர்மன் விவசாயிகளைப் பண்ணையடிமைகளாயும் கொத்தடிமைகளாயும் மாற்றுவதற்கான பிரதான சாதனமாக இருந்தது.

* [J. Arbuthnot.] *An Inquiry into the Connection between the Present Price of Provisions, etc.*, pp. 124, 129. இதே போன்ற விளைவுடன் ஆனல் எதிரான போக்கில்: ''உழைப்பாளிகள் தமது குடிசைகளிலிருந்து விரட்டப்பட்டு

முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடித்தளங்களை நிறுவுவதற்கு அவை தேவை என்றவுடனேயே ''உடைமையின் புனிதமான உரிமைகள்'' மிகவும் வெட்கக்கேடான முறையில் மீறப்படுவதையும் நபர்கள் மீது மிகவும் படுமோசமான வன்முறைச் செயல்கள் தொடுக்கப்படுவதையும், அரசியல் பொருளாதாரவியலாளர் பற்றுத்துறந்த மனவமைதியுடன் கருதிப் பார்ப்பதைப் பரோபகாரியும் அதோடு டோரியுமான எஃப். எம். ஈடன் எடுத்துக் காட்டுகிறார். 15ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றும் பகுதி முதல் 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் மக்கள் பலாத்காரமாக உடைமை பறி முதலுக்கு ஆளாக்கப்பட்டதைத் தொடர்ந்து வரிசையாக ஏற்பட்ட களவுகள், அட்டூழியங்கள், பொதுஜன அவல நிலை ஆகியவை அவரை வசதியான இந்த முடிவுக்கு மட்டுமே இட்டுச் சென்றன:

''சாகுபடிக்கு லாயக்கான நிலங்களுக்கும் மேய்ச்சல் நிலங்களுக்கும் இடையே உரிய விகிதம் நிலைநாட்டப்பட வேண்டியிருந்தது. 14ஆம் நூற்றாண்டு முழுவதிலும், 15ஆம் நூற்றாண்டின் பெரும் பகுதியிலும் ஓர் ஏக்கர் மேய்ச்சல் நிலத்துக்கு 2, 3 அல்லது 4 ஏக்கர் சாகுபடிக்கு லாயக்கான நிலம் என்ற விகிதம் நிலவியது. 16ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இந்த விகிதம் 2 ஏக்கர் மேய்ச்சல் நிலத்துக்கு 2 ஏக்கர் சாகுபடி நிலம் எனவும், பிறகு 2 ஏக்கர் மேய்ச்சல் நிலத்துக்கு 1 ஏக்கர் சாகுபடி நிலமாகவும் இறுதியாக நியாயமான விகிதமான 3 ஏக்கர் மேய்ச்சல் நிலத்துக்கு ஓர் ஏக்கர் சாகுபடி நிலம் என்றும் மாற்றப்பட்டது.''

19ஆம் நூற்றாண்டில், விவசாயத் தொழிலாளிக்கும் சமுதாய சொத்துக்கும் இடையிலான தொடர்பு குறித்த நினைவு கூட மறைந்து விட்டது. வெகு சமீப காலத்திய நிகழ்ச்சிகள் ஒரு புறமிருக்க விவசாயி மக்களிடமிருந்து 1801க்கும் 1831க்கும் இடையே களவாடப்பட்டு, நாடாளுமன்றத்தின் சூழ்ச்சி மூலம் நிலவுடைமையாளர்களால் நிலவுடைமை

---

வேலை தேடி நகரங்களுக்குச் செல்லும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது; ஆனால் மேலும் பெரியளவிலான உபரி உற்பத்திப் பொருள் கிட்டுகிறது இவ்வாறு மூலதனம் பெருக்கப்படுகிறது'' ([R. B. Seeley.] *The Perils of the Nations*, 2 nd ed., London, 1843, p. XIV).

யாளர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்ட 3,511,770 ஏக்கர் பொது நிலத்துக்கு என்று விவசாயி மக்களுக்கு ஒரு காசாவது நஷ்ட ஈடாகத் தரப்பட்டதா?

நிலத்திலிருந்து விவசாயி மக்களை மொத்தமாக உடைமை பறிமுதல் செய்து விரட்டிய கடைசி நிகழ்ச்சிப்போக்கு இறுதியாகப் ''பண்ணைகளைத் துடைத்தொழிப்பதில்'' («Clearing of Estates»), அதாவது மக்களை அவற்றிலிருந்து வெளியேற்றுவதில் போய் நின்றது. இது வரை நாம் கவனித்து வந்த ஆங்கில உடைமை பறித்தல் முறைகள் யாவும் ''துடைத்தொழிப்பதில்'' சென்று முடிந்தன. முந்திய அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருந்த நவீன நிலைமைகளின் சித்திரத்தில் நாம் பார்த்தது போன்று, விரட்டப்பட வேண்டிய சுதந்திர விவசாயிகள் இனி இல்லை என்ற நிலையில் குடிசைகள் ''துடைத்தொழிக்கப்படுவது'' ஆரம்பமாகிறது; தாம் பாடுபட்டுப் பயிர் செய்த நிலத்தில் விவசாயித் தொழிலாளிகள் தமது சொந்த வீட்டு வசதிக்கு அவசியமான ஒரு சிறு இடத்தைக் கூடப் பெறக் கூடாது என்பதே இதன் நோக்கம். பண்ணைகளைத் ''துடைத்தொழிப்பது'' என்பதன் உண்மையான சரியான முக்கியத்துவத்தை நாம், நவீன கற்பனை நாவல் இலக்கியத்தின் பேரின்ப உலகான, ஸ்காட்லந்தின் மேட்டு நிலங்களில் இருந்தே கற்றறிகிறோம். அங்கு இந்த நடைமுறை, அதன் திட்டமிட்ட தன்மையாலும், ஒரே அடியில் (அயர்லந்தில் நிலவுடைமையாளர்கள் ஒரே சமயத்தில் பல கிராமங்களை அழித்து விடுமளவுக்குச் சென்றனர்கள்; ஸ்காட்லந்தில் ஜெர்மன் மாவட்டங்கள் அளவுக்குப் பெரியதான பகுதிகளில் இவ்வாறு செய்யப்பட்டது) இது நிறைவேற்றப்பட்டதன் பரிமாணத்தாலும், இறுதியாக களவாடப்பட்ட நிலங்களை வைத்திருந்த விசித்திரமான உடைமை வடிவத்தாலும் வேறுபட்டுக் காட்சியளித்தது.

மேட்டு-நிலக் குடிகளான கெல்ட்டுகள் கோத்திரங்களாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தனர், ஒவ்வொரு கோத்திரமும் அது குடி அமர்த்தப்பட்டிருந்த நிலத்தின் உரிமையாளராகும். கோத்திரத்தின் பிரதிநிதி, இதன் தலைவர், அல்லது ''பெரிய மனிதர்'' இந்தச் சொத்திற்குப் பெயரளவில் மட்டுமே உரிமையாளர், இங்கிலாந்து ராணி தேசத்துநிலம் முழுவதற்கும் பெயரளவில் உரிமையாளராக இருப்பது

போல. ஆங்கில அரசு, இந்தப் ''பெரிய மனிதர்கள்'' இடையிலான கோத்திரப் போர்களையும், ஸ்காட்லந்தின் தாழ்ந்த சமநிலங்களுக்குள் அவர்கள் இடையருது தலையிட்டுத் தாக்குதல் நடத்துவதையும் ஒடுக்குவதில் வெற்றி கண்ட பொழுதும், இந்தக் கோத்திரங்களின் தலைவர்கள் கள வாணிகள் என்ற முறையிலான தமது தொன்மையான இத் தொழிலை எவ்விதத்திலும் கைவிட்டு விடவில்லை, மாருக அதன் வடிவத்தை மட்டுமே மாற்றினர். தமது சொந்த அதிகார பலத்தால் அவர்கள் தமது பெயரளவிலான உரிமையை தனிச் சொத்துரிமையாக மாற்றிஞர்கள். இது தமது கோத் திரத்தைச் சேர்ந்த மக்களுடன் அவர்கள் மோதும் நிலைமை களை ஏற்படுத்தியதால், அம்மக்களைப் பகிரங்கமான பலப் பிரயோகம் மூலம் துரத்தி விட இத்தலைவர்கள் முடிவு செய் தனர். ''இந்த வகையில் இங்கிலாந்தின் மன்னர் தமது குடி களைக் கடலுக்குள் துரத்தி விட்டதாக உரிமை பாராட்ட லாம்'' என்று பேராசிரியர் நியூமன் கூறுகிருர்.* அரச முடிக் கான போலி உரிமையாளரினது (The Pretender)[7] ஆதரவாளர் களின் கடைசி எழுச்சிக்குப் பிறகு ஸ்காட்லந்தில் தொடங்கிய இந்தப் புரட்சியின் முதல் கட்டங்களை சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட்** மற்றும் ஜேம்ஸ் ஆண்டர்சன்*** நூல்களில் தொடர்ந்து பார்க்கலாம். 18ஆம் நூற்ருண்டில் விரட்டப் பட்ட கெல்ட்டுகள் நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வெளியே

* F. W. Newman, *Lectures on Political Economy*, London, 1851, p. 132.

** ஜேம்ஸ் ஸ்டுவர்ட் கூறுவதாவது: ''இந்த நிலங் களில் கிட்டும் வாரம் (இந்தப் பொருளாதார வகையினத் தில் அவர் கோத்திரத் தலைவருக்குப் பணியாட்கள் (taskmen) தரும் கப்பத்தையும் தவருகச் சேர்த்துள்ளார்) அவற்றின் பரப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் சிறிய தாகத் தோன்றும். இதைப் பண்ணையில் பிழைப்பு நடத்து வோர் தொகையுடன் ஒப்பிட்டால் மேட்டு நிலத்திலுள்ள ஒரு பண்ணை, வேறு நல்ல செழுமையான மாகாணத்தில் இதே மதிப்புடைய பண்ணையை விடப் பத்து மடங்கு அதிக மான மக்களைப் பராமரித்துவருவதைக் காணலாம்'' (James Steuart, *An Inquiry into the Principles of Political Economy*, London, 1767, Vol. I, ch. XVI, p. 104).

*** James Anderson, *Observation on the Means of Exciting a Spirit of National Industry etc.*, Edinburgh, 1777.

செல்ல முடியாதபடி தடை செய்யப்பட்டார்கள், இதன் நோக்கம் அவர்களை கிளாஸ்கோ மற்றும் இதர பட்டறைத் தொழில் நகரங்களுக்கு வலுவந்தமாக விரட்டுவதேயாகும்.* 19ஆம் நூற்றுண்டில் நிலவிய முறைக்கு** ஓர் உதாரணமாக சதர்லந்து கோமகள் நடத்திய ''துடைத்தொழிப்பைக்''

---

* 1860ல் பலப்பிரயோகத்தால் உடைமை பறிமுதல் செய்யப்பட்ட மக்கள் பொய்யான சாக்குப் போக்குகளின் கீழ் கானடாவுக்கு ஏற்றியனுப்பப்பட்டார்கள். சிலர் அண்டையிலுள்ள மலைகள் மற்றும் தீவுகளுக்குத் தப்பியோடினுர்கள். போலீஸ் படை அவர்களைப் பின்தொடர்ந்தது, போலீசுடன் மோதி இவர்கள் தப்பி வெளியேறினுர்கள்.

** ஆடம் ஸ்மித் நூல்களைப் பற்றி விளக்கம் தரும் புக்கானன் 1814இல் கூறுவதாவது: ''ஸ்காட்லந்தின் மேட்டு நிலங்களில் உடைமையின் பழைய நிலைமை தினசரி தலை கீழாய் பலவந்தமாய்ப் புரட்டப்படுகிறது... நிலவுடைமையாளர் மரபான குத்தகைதார் பற்றிக்(இங்கு இந்த வகையினம் தவருகப் பயன்படுத்தப்பட்டுள்ளது) கருதிப் பார்க்காமலே இப்போது தம் நிலத்தை ஆக உயர்ந்த வாரம் தருபவருக்கு வழங்க முன்வருகிருர், அப்படி வருபவர் மேம்பாட்டாளராக இருப்பாராஞல் அவர் உடனடியாகப் புதிய பயிர்த் தொழில் முறையை மேற்கொள்கிருர். முன்ஞட்களில் சிறு விவசாயிகள் அல்லது உழைப்பாளர்களை எங்கும் பரவலாகக் கொண்டிருந்த நிலம் அதன் உற்பத்திப் பொருளுக்குச் சரி விகிதமான மக்கள் தொகையினைக் கொண்டதாக இருந்தது, ஆனுல் புதிய அமைப்பின் கீழ் மேம்பட்ட பயிர்ச்செய்கையும் அதிகரித்த குத்தகையும் காரணமாக சாத்தியமான அளவு குறைந்த செலவில் சாத்தியமான அளவு அதிகமான உற்பத்திப் பொருள் பெறப்படுகிறது: இந்த நோக்கத்துடன் பயனற்ற நபர்கள் அகற்றப்படுவதால் மக்கள் தொகை இந்த நிலத்தால் பராமரிக்கத்தக்க அளவுக்கு வரையறுக்கப்படுவதற்குப் பதில் இந்த நிலத்தில் கிட்டும் வேலை வாய்ப்பை ஒட்டிக் குறைக்கப்படுகிறது. இவ்வாறு உடைமை பறிக்கப்பட்ட விவசாயிகள் அண்டையிலுள்ள நகரங்களில் பிழைப்பைத் தேடிச் செல்கிருர்கள்'' (David Buchanan, *Observations on, etc., A. Smith's Wealth of Nations*, Edinburgh, 1814, Vol. IV, p. 144). ''ஸ்காட்லந்தின் உயர் குடியினர் களைப்புற்களைப் பறித்தெறிவது போன்று இந்தக் குடும்பங்களின் உடைமைகளைப் பறித்தனர்; கிராமங்களையும் அவற்றின் மக்களையும் வனவிலங்குகள் துன்புறுத்தியதை ஒட்டி ஏற்பட்ட தமது பழி வெறியில் இந்தியர்கள் கொடும்புலிகளைக் காட்டில் துன்புறுத்துவது போல் அலைக்கழித்தனர்... மனிதன் ஆட்டு

குறிப்பிடுவதே போதுமானது. பொருளாதாரம் குறித்து நன்கு அறிந்திருந்த இந்த நபர் தன் மாவட்டத்தில் நிர்வாகத்தில் பிரவேசித்ததும் தீவிரமான பரிகாரத்தைச் செயல்படுத்த முடிவு செய்தாள், இதே போன்ற முந்திய நிகழ்ச்சிப் போக்குகளால் மக்கள் தொகை 15,000க்குக் குறைந்து விட்டதான மாவட்டம் முழுவதையுமே ஒரு மேய்ச்சல் பூமியாக மாற்ற அவள் முடிவு செய்தாள். 1814 முதல் 1820 வரை இந்த 15,000 பேர்களைக் கொண்டதான 3,000 குடும்பங்கள் திட்டமிட்டு விரட்டப்பட்டு வேருடன் அகற்றப்பட்டன. அவர்களுடைய கிராமங்கள் அனைத்தும் எரித்து நாசமாக்கப்பட்டன, அவர்களது நிலங்கள் யாவும் மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டன. பிரிட்டிஷ் படையாட்கள் இந்த வெளியேற்றத்தை வலிந்து செயல்படுத்திக் கிராமவாசிகளுடன் மோதினார்கள். குடிசையை விட்டு வெளியேற மறுத்த ஒரு மூதாட்டி குடிசை நெருப்பில், எரித்துக் கொல்லப்பட்டாள். இவ்வாறு இந்த நாகரிகச் சீமாட்டி காலகாலமாகக் கோத்திரங்களுக்குச் சொந்தமாக விருந்த 7,94,000 ஏக்கர் நிலத்தைச் சுவிகரித்துக் கொண்டாள். வெளியேற்றப்பட்ட மக்களுக்கு அவள் கடலோரத்தில்—குடும்பத்துக்கு 2 ஏக்கர் வீதம்—6,000 ஏக்கர் ஒதுக்கினாள். இந்த 6,000 ஏக்கர் நிலம் இது வரையில் தரிசாகவே கிடந்தது, உரிமையாளருக்கு எவ்வித வருவாயும் பெற்றுத் தரவில்லை. கோமகள் தனது கருணையுள்ளம் காரணமாக இந்த நிலங்களை, அவளது குடும்பத்துக்காகப் பல நூற்றாண்டுகளாகத் தம் இரத்தத்தைச் சிந்திய இந்தக் கோத்திரத்தைச் சார்ந்த ஆட்களுக்கு ஏக்கருக்கு சராசரி 2 ஷிலிங்,

---

ரோமம் அல்லது செத்த விலங்கின் இறைச்சிக்குப் பண்டமாற்றுச் செய்யப்படுகிறான், இல்லை, இதை விட இன்னும் மதிப்பற்றவனாய்க் கருதப்படுகிறான்... சீனாவின் வடமாகாணங்களில் படையெடுத்துப் புகுந்து அங்கு வாழும் மக்களை அழித்து அந்த நிலத்தை மேய்ச்சல் நிலமாக மாற்றலாம் என்று மொகலாயர்களின் அவையில் பிரேரேபிக்கப்பட்டது. அந்த நோக்கத்தை விட இது எவ்வளவு படுமோசமானது. இந்த யோசனையை மேட்டுநில உரிமையாளர் பலர் தமது சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகத் தமது சொந்த நாட்டிலேயே செயல்படுத்தியிருக்கிறார்கள்'' (George Ensor, *An Inquiry Concerning the Population of Nations*, London, 1818, pp. 215, 216).

6 பென்ஸ் வாரத்துக்கு குத்தகைக்கு விட முன்வந்தாள். கோத்திரத்திடம் களவாடப்பட்ட நிலம் முழுவதையும் அவள் 29 மாபெரும் ஆட்டுப் பண்ணைகளாகப் பிரித்தாள், இப்பண்ணைகள் ஒவ்வொன்றிலும் ஒரு குடும்பம், பெரும் பாலும் இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கிலப் பண்ணை ஊழி யர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1825ஆம் ஆண்டு 15000 கெல்ட்டு மக்கள் அகற்றப்பட்டு அவர்கள் இருந்த இடத்தில் 1,31,000 ஆடுகள் வந்து புகுந்தன. கடற்கரைக்கு விரட்டிய டிக்கப்பட்ட ஆதிவாசிகளின் மீதமிச்சங்கள் மீன் பிடித்து உயிர் வாழ முயன்றனர். அவர்கள் நீர்நிலவாழ்வினர் ஆகிப் பாதி நிலத்திலும் பாதி தண்ணீரிலுமாக அதனுடன் இரண் டிலும் பாதியளவே வாழ்ந்தார்கள்.*

ஆனல் தீரமிக்க கெல்ட்டு மக்கள் தமது கோத்திரத் தின் ''பெரிய மனிதர்களை'' கற்பனையாக வழிபட்டதற்கு கடுமையான கழுவாய் தேட வேண்டியிருந்தது. அவர்களது மீன்களின் வாசனை பெரிய மனிதர்கள் மூக்குகளை எட்டியது. இதில் சற்றே லாபத்தை முகர்ந்த அவர்கள் கடற்கரையை லண்டனிலுள்ள பெரிய மீன் வியாபாரிகளுக்குக் குத்தகைக்கு விட்டு விட்டார்கள். இரண்டாவது தடவையாக கெல்ட்டு மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்.**

---

* சதர்லந்தின் தற்போதைய கோமகள் அமெரிக்கக் குடியரசின் நீக்ரோ அடிமைகளுக்குத் தனது அனுதாபத்தைக் காட்டுவதற்காக வேண்டி ''அங்கிள் டாம்ஸ் கேபின்'' என்ற நூலின் ஆசிரியை திருமதி பீச்சர் ஸ்டௌவுக்கு விருந்தளித்து உபசரித்த போது (உள்நாட்டுப் போரின் போது தனது சகப் பிரபுத்துவக் கும்பலுடன் சேர்ந்து இந்த அனுதாபத்தை தன்னல அறிவுடன் மறந்து விட்டாள் இந்தக் கோமகள், அந்த சமயத்தில் ஆங்கில ''மேற்குல'' இதயங்கள் அனைத்தும் அடிமை எஜமானர்களுக்காகவே துடித்தன) நான் சதர்லந்து அடிமைகளைப் பற்றிய உண்மைத் தகவல்களை *New-York Tribune*இல் வெளியிட்டேன். (இவை காரியால் *The Slave Trade*, பிலடல்ஃபியா, 1853, பக்கங்கள் 203, 204ல் சுருக்கப்பட்டு தரப்பட்டுள்ளது.) எனது கட்டுரை ஒரு ஸ்காட் லந்து பத்திரிகையில் மறுபிரசுரமாயிற்று. அது அப்பத்திரிகைக் கும் சதர்லந்தின் முகஸ்துதியாளருக்கும் இடையே பெரிய வாதப் போருக்கு இட்டுச் சென்றது.

** இந்த மீன் வியாபாரம் பற்றிய சுவையான தகவல் கள் திரு. டேவிட் உர்க்ஹார்டின் *Portfolio. New Series*இல்

இறுதியாக மேய்ச்சல் நிலங்களில் ஒரு பகுதி மான்களின் காப்புவனமாக மாற்றப்பட்டது. இங்கிலாந்தில் உண்மையான காடுகள் இல்லை என்பது எல்லோரும் அறிந்ததே. உயர்குல மனிதர்களின் பூங்காக்களில் இருக்கும் மான் அமைதியான வீட்டுப் பிராணியாகும். லண்டன் நகர-பிதாக்களைப் போன்று கொழுத்து வளர்வதாகும். எனவே இந்த ''உத்தம ஆர்வத்தின்'' இறுதிப் புகலிடமே ஸ்காட்லந்து.

''மேட்டு நிலங்களில் புதிய காடுகள் காளான்களைப் போன்று முளைத்து வருகின்றன'' என்று 1848ல் கூறுகிறார் சோமர்ஸ்.* ''இங்கு கெய்க்கின் ஒரு பக்கத்தில் புதிய காடான கிளென்ஃபெஷி இருக்கிறது; மறு பக்கம் புதிய காடான அர்ட்வெரிக்கி இருக்கிறது. இதே வரிசையில் அண்மையில் நிறுவப்பட்ட பிளேக் மவுன்ட் என்ற மிகப் பெரிய தரிசு கிடக்கிறது. கிழக்கிலிருந்து மேற்காக—அபர்டீன் அண்டைப் பிரதேசத்திலிருந்து ஒபானின் பாறை முகடு வரைத் தொடர்ந்து வரிசையாகக் காடுகள் இருக்கின்றன. அதே பொழுதில் மேட்டு நிலங்களின் இதர பகுதிகளில், புதிய காடுகளான லோச் அர்ச்செய்க், கிளென்கரி, கிளென்மாரிட்சன் ஆகியவை உள்ளன. சிறு விவசாயி சமுதாயங்களின் குடியிடமாக இருந்த தாழ்ந்த பிரதேசங்களில் ஆடுகள் கொண்டு வரப்பட்டு, மக்கள் மேலும் கரடுமுரடான விளைவற்ற நிலப் பரப்புக்களுக்குப் பிழைப்புத் தேடுமாறு விரட்டப்பட்டார்கள். இப்போது ஆடுகளின் இடத்தில் மான்கள் புகுந்துள்ளன. இது சிறு விவசாயிகளை மீண்டும் ஒரு முறை உடைமை பறித்து இன்னும் கரடுமுரடான நிலத்துக்கு மேலும் அரித்துத் தின்னும் வறுமையில் தவிர்க்க முடியாத வகையில் விரட்டியே தீரும். மான் வனங்களும் மக்களும் சகவாழ்வு வாழ முடியாது,

---

காணப்படும். நஸ்ஸாவு டபிள்யூ சீனியர் மறைவுக்குப் பிறகு வெளியான (ஏற்கெனவே மேற்குறிப்பிட்ட) நூலில் ''சதர்லந்த ஷயர் நடவடிக்கைகள் மனித நினைவு தோன்றியதற்குப் பிந்தியதான ஆக அனுகூலமான துடைத்தொழிப்பு'' என்கிறார் (*Journals, Conversations and Essays Relating to Ireland*, London, 1868).

* ஸ்காட்லந்திலுள்ள மான்வனங்களில் ஒரு மரம் கூடக் கிடையாது. ஆடுகள் அவற்றிலிருந்து வெளியே விரட்டப்படுகின்றன; அவற்றுக்குள் மான்கள் புகுமாறு விரட்டப்படுகின்றன. மரம் செடிகளற்ற மொட்டைக் குன்றுகள் இவை, பிறகு இவை மான் வனங்கள் என்று அழைக்கப் படுகின்றன. இங்கு வெட்டு மரம் நடுதலோ உண்மையான காடு வளர்ப்போ இல்லவே இல்லை.

இரண்டில் ஏதாவது ஒன்றுக்குத்தான் இடமுண்டு. கடந்தகால் நூற்றுண்டில் நிகழ்ந்தது போன்று அடுத்த கால் நூற்றுண் டிலும் காடுகள் எண்ணிக்கையிலும் பரப்பிலும் அதிகரிக்கு மாஞல் கெல்ட்டு மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து அழிந்து போவார்கள்... இந்த இயக்கம் மேட்டு நில உரிமை யாளர்களிடையே சிலருக்கு ஆசை காரணமாயும், சிலருக்கு விளையாட்டு விருப்பத்தாலும் ஏற்பட்டது, மேலும் காரிய வாதிகளான வேறு சிலர் முற்றிலும் லாபத்தில் கண்கொண்டு மான் வாணிகம் நடத்தத் தொடங்கினர். உண்மையில் மலைப் பகுதியில் காடு வளர்ப்பது மேய்ச்சல் நிலமாக விடுவதை விட உரிமையாளருக்கு மிகவும் அதிக லாபகரமானதாகும்... மான் வனத்தை விரும்பும் ஒரு வேட்டைக்காரன் எவ்வளவு பணம் வேண்டுமாயினும் செலவழிக்கத் தயங்கமாட்டான்... நார் மன் மன்னர்களினது கொள்கைகளின் விளைவாக ஏற்பட்ட துன்பதுயரங்களைவிட எவ்வகையிலும் கடுமையில் குறையாத துன்பதுயரங்கள் மேட்டு நில மக்கள் மீது சுமத்தப்பட்டுள் ளன. மான்களுக்கு மேலும் மேலும் விரிவான இடம் கிடைத் துள்ளது, அதே பொழுதில் மனிதர்கள் மேலும் மேலும் குறுகிய வட்டத்திற்குள்ளேயே விரட்டப்படுகின்றனர்... ஒன்று பின் ஒன்ருக மக்களின் சுதந்திரங்கள் வலுவந்தமாக வெட்டப்படுகின்றன... ஒடுக்குமுறைச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன... அமெரிக்கா அல்லது ஆஸ்தி ரேலியாவில் தரிசு பூமியிலிருந்து மரங்களும் புதர்களும் ஒழித்த கற்றப்படுவது போல விவசாயத்துக்கு இன்றியமையாதது என்ற வகையில் மக்களைத் துடைத்தொழித்து கலைத்து விடும் பணி உரிமையாளர்களால் ஒரு நிர்ணயக் கோட்பாடாகக் கையாளப்பட்டு வருகிறது; இந்தச் செயல்பாடு அமைதியாக காரிய நோக்கில் தொடர்ந்து நடைபெறுகிறது.*

---

* Robert Somers, *Letters from the Highlands; or, the Famine of 1847*, London, 1848, pp. 12-28 passim. இந்தக் கடிதங்கள் முதலில் *The Times* பத்திரிகையில் வெளியாயின. 1847ல் கெல்ட்டு மக்கள் பஞ்சத்திற்காளனதற்கு அவர்களது அமித-மக்கள் தொகையே காரணம் என்று ஆங்கிலப் பொரு ளாதார நிபுணர்கள் நிச்சயமாக விளக்கம் தந்தார்கள். எப் படியும் ''அவர்கள் தமது உணவு சேமிப்பைத் தின்று தீர்த்து விட்டார்கள்''. ஜெர்மனியில் "Bauernlegen" என்றழைக்கப் பட்ட ''பண்ணைகளைத் துடைத்தொழிக்கும்'' இயக்கம் குறிப் பாயும் 30 ஆண்டுப் போருக்குப் பிறகே நடைபெற்றது, இது 1790லேயே Kursachsen என்னுமிடத்தில் விவசாயிகள் புரட்சிகளுக்கு இட்டுச் சென்றது. இது குறிப்பாயும் கிழக்கு ஜெர்மனியில் நடைமுறையில் இருந்தது. பெரும்பாலான பிரஷ்யன் மாகாணங்களில் இரண்டாம் ஃபிரீட்ரிஹ் மன்னர்

மாதா கோயில் சொத்துக்கள் சூறையாடப்பட்டதும், அரசுப் பிரதேசங்கள் மோசடியாக உடைமை மாற்றப்பட்டதும், பொது நிலங்கள் களவாடப் பட்டதும், நிலப்பிரபுத்துவ

---

முதல் தடவையாக விவசாயிகளுக்குச் சொத்துரிமையைப் பெற்றுத் தந்தார். சைலிசியாவைப் படையெடுத்து வென்ற பின் அவர் விவசாயிகளின் குடிசைகளையும் களஞ்சியங்களையும் மீண்டும் கட்டும்படியும் மற்றும் விவசாயிகளுக்கு கால் நடைகள் உழு கருவிகள் வழங்கும் படியும் நிலவுடைமையாளர்களைக் கட்டாயப்படுத்தினர். அவர் தமது சேனைக்குப் படையாளிகளையும், கஜானுவுக்கு வரி கொடுப்போர்களையும் விழைந்தார். ஃபிரீட்ரிஹின் நிதி அமைப்பின் கீழும், எதேச்சாதிகாரம், அதிகார வர்க்கம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் ஒரு கதம்பமான ஆட்சியின் கீழும் விவசாயி நடத்திய வாழ்க்கை எத்துணை சுககரமாக இருந்தது என்பது பற்றி அவரது புகழ்பாடியான மிராபோவின் பின்வரும் மேற்கோள்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்: ''வடக்கு ஜெர்மன் விவசாயியின் பிரதான வருவாய்களில் ஒன்று சணல். ஆனுல் துரதிருஷ்டவசமாக மனித குலத்துக்கு இது மிகவும் மோசமான வறுமைக்கு எதிரான ஒரு பரிகாரம் மாத்திரமே தவிர நல வாழ்வுக்கான ஆதாரமல்ல. நேரடியான வரிகளும், கட்டாய உழைப்பும் மற்றும் பலவிதங்களிலான ஊழியங்களும் சேர்ந்து விவசாயியை நாசமாக்கி வந்தன. ...இதற்கும் மேல் அவன் வாங்கும் பொருட்களுக்கு மறைமுக வரி செலுத்துகிருன். அவனுக்குத் தனது விளைபொருட்களை தான் விரும்பும் இடத்தில் விற்கவும், தன் விருப்பப்படி விலை நிர்ணயிக்கவும் உரிமை இல்லை; குறைந்த விலைக்கு விற்கும் வியாபாரியிடமிருந்து தனக்கு அவசியமானவற்றை வாங்கிக் கொள்ளும் உரிமையும் கிடையாது. இந்தச் சூழல்கள் காரணமாக அவன் படிப்படியாக நசித்துக் கொண்டிருந்தான், நூல் நூற்பதில் அவன் ஈடுபடாதிருப்பானுகில் அவனுல் வரிகளைச் செலுத்த முடியாமல் போயிருக்கும். நூற்பு வேலை அவனுக்கு தேவையான ஆதரவைக் கொடுத்தது. ஏனெனில், இதில் அவன் தனது மனைவி, குழந்தைகள், வேலைக்காரர்களின் உழைப்பையும் தனது சொந்த உழைப்பையும் பயன்படுத்த முடிந்தது. ஆனுல் இந்த ஆதரவு இருந்தும் அவன் எத்தகைய வறிய வாழ்வு வாழ நேர்ந்தது! கோடைக் காலத்தில் அவன் குற்றவாளி அடிமை போன்று நிலத்தை உழுகிருன், அறுவடை செய்கிருன்; இரவு 9 மணிக்குப் படுக்கச் சென்று விடிய இரண்டு மணிக்கே எழுந்து வேலையை முடிக்க வேண்டியிருக்கிறது. பனிக்காலத்தில் அதிகநாள் ஓய்வு பெற்று அவனது பலத்தை மீண்டும் பெற வேண்டும், ஆனுல் வரிகளைச் செலுத்துவதற்காக அவன் தன் விளைவில் ஒரு பகுதியை விற்கிருன்,

மற்றும் கோத்திர உடைமைகள் பறிக்கப்பட்டதும், முரட்டுப் பயங்கரமான சந்தர்ப்ப சூழல்களில் இவை நவீனத் தனியார் உடைமையாக மாற்றப்பட்டதும் எல்லாம் புரா

ஆனுல் சாப்பாட்டிற்கும் விதைப்புக்கும் தேவையான தானியம் அவனிடமிருப்பதில்லே. எனவே இந்தக் குறைவை நிறைவு செய்ய அவன் நூற்க வேண்டும்... மிகவும் சுருசுருப்பாக நூற்க வேண்டும். ஆனுல் பனிக்காலத்தில் விவசாயி நள்ளிரவு ஒரு மணிக்கே படுக்கச் செல்கிருன், ஐந்து அல்லது ஆறுமணிக்கு எழுந்து விடுகிருன். அல்லது இரவு 9மணிக்குப் படுத்து அதிகாலே 2 மணிக்கு எழுந்து விடுகிருன். இது ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்றபடி அவன் வாழ்நாள் முழுவதிலும் நடைபெறுகிறது... இவ்வளவு அதிகமான வேலேயும் இவ்வளவு குறைந்த நேர உறக்கமும் மனித உடலே வாட்டி வருத்துகின்றன; இதனுல் தான் நகரங்களிலுள்ளவர்களே விட மிகவும் விரைவாகவே கிராமப்புற ஆடவரும் மகளிரும் அகால மூப்பை அடைந்து விடுகிருர்கள்'' (Mirabeau, மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி 3, பக்கம் 212).

இரண்டாவது பதிப்புக்கான குறிப்பு. 1866ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேலே மேற்கோள் காட்டப்பட்ட ராபர்ட் சோமர்சின் நூல் வெளியிடப்பட்டு 18 ஆண்டுகள் கடந்த பின்னர் பேராசிரியர் லியோன் லெவி, மேய்ச்சல் நிலங்கள் மான் வனங்களாக மாற்றப்பட்டது சம்பந்தமாகக் கலேக் கழகத்தில் ஓர் உரை யாற்றினுர். அதில் அவர் ஸ்காட்லந்தின் மேட்டு நிலங்கள் பாழடிக்கப்பட்டதைச் சித்திரிக்கிருர். வேறு பலவற்றேடு சேர்த்து அவர் கூறுவதாவது: ''மக்களே நிலத்தை விட்டு விரட்டுவதும் நிலத்தை மேய்ச்சல் நிலமாக மாற்றுவதும் எவ்விதச் செலவும் இன்றி வருவாய் பெறுவதற்கான மிகவும் வசதியான ஒரு மார்க்கமாகும்... மேய்ச்சல் நிலத்தின் இடத்தில் மான் வனம் நிறுவுவது என்பது மேட்டு நிலங்களில் ஏற்பட்ட சாமான்யமான மாற்றமாகும். நிலவுடைமையாளர்கள் முன்பு ஒருக்கால் மனிதர்களேத் தமது பண்ணைகளே விட்டு விரட்டியது போன்று ஆடுகளேயும் விரட்டி விட்டுப் புதிய குடிகளாக—வன விலங்குகளேயும் பறவைகளேயும் வரவேற்ருர்கள்... ஃபார்ஃபார் ஷயரிலிருந்த டல்ஹௌசி பிரபுவின் பண்ணைகளிலிருந்து ஜான் ஏ குரோட்ஸ் வரையில் காட்டு நிலத்துக்குள்ளேயே ஒருவர் செல்லலாம்... இந்த வனங்கள் பலவற்றில் நரி, காட்டுப் பூனே, காட்டுக் கீரி, மரநாய், மலே முயல் ஆகியவை சர்வ சாதாரணமாக வாழ்ந்தன, குறுமுயல், அணில் மற்றும் எலி ஆகியவை அண்மையில் நாட்டுக்குள் வந்து விட்டன. ஸ்காட்லந்தின் புள்ளிவிபர விளக்கங்களில் மிகவும் உயர்தரமாக வர்ணிக்கப்பட்டுள்ள செழுமையும் பரப்பும் கொண்டதான பெரிய நிலப் பகுதிகள்

தனத் திரட்சியின் பல காவியபாணி முறைகளாகும். முதலாளித்துவ விவசாயத்திற்காக அவை நிலத்தை வென்று கைப்பற்றின. நிலத்தை மூலதனத்தின் ஒரு பகுதியாக்கின, நகரத்துத் தொழில் துறைக்கு ''சுதந்திரமான'' சட்டக் காப்பற்ற பாட்டாளிகள் போதியளவு கிடைப்பதற்கான ஏற்பாட்டை உருவாக்கின.

---

பயிரிடப்படாமலும் மேம்படுத்தப்படாமலும் அடைத்துப் போடப்பட்டு ஆண்டில் சிறு காலத்திற்கு மட்டுமே சிலரது விளையாட்டுக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.'' 1866 ஜூன் 2ந் தேதிய லண்டன் *Economist* கூறுவதாவது: ''ஸ்காட் பத்திரிகை ஒன்றின் கடந்த வார இதழில் வெளிவந்த செய்திகளில் நாம் படித்ததாவது: 'சதர்லந்திலுள்ள மிகவும் அருமையான ஆட்டுப் பண்ணை நடப்பிலிருக்கும் குத்தகைக் காலம் முடிந்தவுடன் மான் வனமாக மாற்றப்படவிருக்கிறது, இதற்கு ஆண்டுக்கு 1,200 பவுன் குத்தகை செலுத்தப்பட்டது!' இங்கு நாம் நிலப்பிரபுத்துவத்தின் நவீன இயல்பூக்கத்தைக் காண்கிறோம்... இது நார்மன் படையெடுப்பின் போது ஒரு புது வனத்தை உருவாக்குவதற்காக 36 கிராமங்கள் அழிக்கப்பட்டதான அதே பாணியில் இவர்களும் செயல்பட்டு வருவதைக் காட்டுகிறது. இருபது லட்சம் ஏக்கர் பூமி முற்றும் தரிசாக்கப்பட்டது, இதனுள் ஸ்காட்லந்தின் ஆக வளம் செறிந்த நிலப்பரப்பும் உட்படும். கிளென் டில்ட் இயற்கைப்புல் பெர்த் மாவட்டத்திலேயே ஆக ஊட்டம் மிகுந்த புல் வகையாகும்; பென் ஔல்டரில் நிறுவப்பட்டிருக்கும் மான்வனத்தின் நிலம் முன்னொரு காலத்தில் பரந்த மாவட்டமான படினோச்சிலிருந்த ஆகச் சிறந்த மேய்ச்சல் நிலமாகும்; பிளேக் மவுன்ட் காட்டின் ஒரு பகுதி கருப்பு ஆடுகளுக்கான மிகவும் நல்லதோர் புல் வெளியாகும். முற்றிலும் விளையாட்டுக்காக வேண்டி ஸ்காட்லந்தில் தரிசு போடப்பட்ட நிலப்பரப்பின் அளவு பெர்த் மாவட்ட முழுவதன் பரப்பை விடப் பெரியது. பென் ஔல்டர் வனத்தின் மூலாதாரங்களைப் பார்த்தால் இந்தப் பலாத்காரமான பாழ்படுத்தல் மூலம் ஏற்பட்ட இழப்பைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளலாம். இந்த நிலம் 15,000 ஆடுகளுக்குப் போதுமான மேய்ச்சல் நிலமாகும், ஸ்காட்லந்தின் பழைய காட்டு நிலத்தில் இது முப்பதில் ஒரு பகுதி கூட அல்ல..., காட்டு நிலம் அறவே ஆக்கவளமற்றது... இதை ஜெர்மன் கடலில் மூழ்கடித்திருந்தாலும் பரவாயில்லை. இவ்வாறு கானகங்களும் பாலைவனங்களும் திடீரெனத் தோற்றுவிக்கப்படுவதைச் சட்டத்தின் தீர்மானகரமான தலையீடு மூலம் ஒடுக்கவேண்டும்.''

## உடைமை பறிமுதலானோருக்கு எதிராக 15ஆம் நூற்றாண்டின் இறுதி தொட்டு நிலவிய கொடூரமான சட்டங்கள். நாடாளுமன்றச் சட்டங்கள் மூலம் கூலிகளை வலுவந்தமாகக் குறைத்தல்

நிலப்பிரபுத்துவ ஏவலாளர் குழுக்கள் தகர்வுற்றதாலும், மக்கள் நிலத்திலிருந்து பலவந்தமாக உடைமை பறிமுதல் செய்யப்பட்டதாலும் உருவாக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம், இந்த ''சுதந்திர'' பாட்டாளி வர்க்கம் எவ்வளவு வேகத்தில் இந்த உலகில் தோற்றுவிக்கப்பட்டதோ அந்தளவு வேகத்தில் அதை ஆரம்ப கட்டத்திலிருந்த பட்டறைத் தொழிலால் வேலைக்குச் சேர்த்துக் கொள்வது சாத்தியமல்லாததாக இருந்தது. மறு புறம் தமது வழக்கமான வாழ்க்கைப் பாங்கிலிருந்து திடீரென்று இழுக்கப்பட்ட இந்த மனிதர்கள் அவர்களது புதிய நிலைமையின் கட்டுப்பாட்டுக்கு அவ்வளவு சடுதியாகத் தம்மைத் தகவமைத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் ஓரளவு மனப்பற்றுக் காரணமாயும் பெரும்பாலும் சந்தர்ப்பச் சூழல்களின் நெருக்கத்தாலும், பிச்சைக்காரர்களாக, திருடர்களாக, உதவாக்கரை தெருச் சுற்றிகளாக ஒரே கூட்டாக மாற்றப்பட்டனர். எனவே 15ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 16ஆம் நூற்றாண்டு முழுவதிலும் மேற்கு ஐரோப்பா பூராவும் நாடோடி தெருச் சுற்றித் தனத்தை எதிர்த்த கடுமையான சட்டம் அமுலாக்கப்பட்டது. இன்றைய தொழிலாளி வர்க்கத்தின் தந்தைமார்கள் நிர்ப்பந்தம் காரணமாக நாடோடிகளாயும் ஓட்டாண்டிகளாயும் மாற்றப்பட்டதற்குத் தாமே தண்டனை அனுபவிக்க நேர்ந்தது. சட்டம் அவர்களை ''தாமாகவே'' குற்றம் புரிந்த குற்றவாளிகளாக நடத்தியது, மேலும் நிலவில் இல்லாத பழைய நிலைமைகளின் கீழ் தொடர்ந்து வேலை செய்வது அவர்களது சொந்த விருப்பத்தைப் பொருத்தே இருப்பதாயும் கருதியது.

இங்கிலாந்தில் இந்தச் சட்டம் ஏழாம் ஹென்றியின் கீழ் ஆரம்பமாயிற்று.

எட்டாவது ஹென்றி 1530இல் வெளியிட்ட ஆணைக்கு ஏற்ப வேலை செய்ய முடியாதவர்களான வயோதிகப்

பிச்சைக்காரர்கள் பிச்சைக்காரர் லைசன்ஸ் பெற்றனர். மறுபுறம் திடமான நாடோடிகளுக்கு கசையடியும் சிறைத் தண்டனையும் கிடைத்தன. அவர்கள் வண்டியின் பின்புறத்தில் கட்டிவைக்கப்பட்டு உடம்பிலிருந்து இரத்தம் பீறிடும் வரையில் கசையடி பெறுவர், பின்னர் தமது பிறந்த ஊருக்கோ அல்லது கடந்த மூன்றாண்டுகளாக அவர்கள் எங்கே வாழ்ந்திருந்தார்களோ அங்கே திரும்பிப் போய் ''உழைப்பில் ஈடுபடுவதாக'' வாக்குறுதியளித்துச் சபதமேற்க வேண்டும். என்ன பயங்கர கேலிக்கூத்து! எட்டாம் ஹென்ரியின் ஆட்சியின் 27ஆவது ஆண்டில் பிறப்பித்த முந்திய சட்டம் மீண்டும் இடம் பெற்றுள்ளது, புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. நாடோடித் திரிந்த ஒருவர் இரண்டாம் முறை கைது செய்யப்பட்டால் மீண்டும் கசையடி பெறுவதோடு அவரது பாதிக் காதும் அறுக்கப்படும்; மூன்றும் தடவையாகக் கைதானல் இந்த நபர் காய்த்துப் போன குற்றவாளி பொது நலத்தின் விரோதி என்பதாகக் கருதப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுவார்.

ஆறும் எட்வர்ட் ஆட்சியின் முதலாண்டில் 1547 இயற்றப்பட்ட சட்டம், ஒரு நபர் வேலை செய்ய மறுப்பாராளுல், அவரைச் சோம்பேறி என்று யார் குற்றம் சாட்டுகிறார்களோ அவருக்கு அடிமையாக இருக்கும் படி அந்த நபர் தண்டிக்கப்படுவார் என்று கட்டளையிடுகிறது. எஜமானர், தமது அடிமைக்கு ரொட்டி, தண்ணீர், காய்கறி வெந்த சாறு மற்றும் தனக்கு விருப்பப்பட்ட கழிசல் இறைச்சி ஆகியவற்றை உணவாகத் தருவார். எவ்வளவு அருவருப்பான வேலையானாலும் சரி அடிமையிடம் கசையும் கைவிலங்கும் கொண்டு பலாத்காரமாக வேலை வாங்கும் உரிமை அவருக்கு உண்டு. அடிமை இரு வாரங்கள் வேலைக்கு வரவில்லையானால் அவன் ஆயுள் முழுதுக்கும் அடிமையாக இருக்கும்படி தண்டனை வழங்கப்படுவான், அவன் நெற்றி அல்லது முதுகில் அடிமை என்பதன் முதலெழுத்துச் சூடுபோட்டுக் குறிக்கப்படும்; மூன்று தடவைகள் அவன் தப்பியோடியிருப்பானானல் அவன் ஒரு படுபாதகன் என்ற முறையில் மரண தண்டனை பெறுவான். எஜமானர் தம் சொந்தத் தட்டுமுட்டு அல்லது கால்நடை போன்று அடிமையை விற்கலாம், பின் சந்ததிகளிடம் ஒப்படைக்கலாம், அடிமையாக வாடகைக்கு விடலாம். எஜ

மானர்களுக்கு எதிராக அடிமைகள் ஏதேனும் செய்ய முயல்வார்களானுல் அவர்களும் மரண தண்டனை பெறுவர். நீதிபதிகள் தகவல் தெரிந்தவுடன் இந்தப் போக்கிரிகளை வேட்டையாடிப் பிடித்தல்வேண்டும். நாடோடியாகத் திரியும் ஒருவன் மூன்று நாட்கள் சோம்பித் திரிந்தானுகில் அவனைப் பிடித்து அவனது பிறந்த இடத்துக்குக் கொண்டு சென்று, நாடோடி என்பதன் முதல் எழுத்தை பழுக்கக் காய்ந்த இரும்பு கொண்டு அவன் மார்பில் சூடு பொறித்து, தெருக்களிலோ வேறு ஏதாவது வேலையிலோ விலங்கிடப்பட்ட நிலையில் உழைக்கும் படி நிர்ப்பந்திக்கப்படுவான். நாடோடி ஒருவன் பொய்யான பிறந்த இடத்தைக் கூறுவானுகில், அவன் இந்த இடத்தின், இங்குள்ள மக்களின், இதன் கார்ப்பொரேஷனின் அடிமையாக வாழ்நாள் முழுதும் இருக்க வேண்டும்; அடிமை என்பதன் முதல் எழுத்தும் அவன் மீது சூடு போட்டுப் பொறிக்கப்படும். நாடோடிகளின் குழந்தைகளை எடுத்துக் கொண்டு போய் அவர்களைப் பழகும் தொழிலாளர்களாக வைத்திருக்கும் உரிமை எல்லோருக்கும் உண்டு, இளைஞர் 24 வயது வரையிலும் இளம் பெண்கள் 20 வயது வரையிலும் இவ்வாறு வைத்திருக்கப்படுவார்கள். இதற்கிடையில் அவர்கள் தப்பி ஓடிப்போனுல் இந்த வயதடையும் வரை தம் எஜமானர்களின் அடிமைகளாக இருக்க வேண்டும்; எஜமானர்கள் விருப்பப்படி அவர்களுக்கு விலங்கு பூட்டலாம் கசையடி தரலாம். ஒவ்வொரு எஜமானரும் தனது அடிமையின் கழுத்தில், கரங்களில், கால்களில் இரும்பு வளையம் இடலாம்; இதன் மூலம் அடிமையை எளிதாகவும் நிச்சயமாகவும் அடையாளம் கண்டு கொள்ளலாம்.* இந்தச் சட்டத்தின் கடைசிப் பகுதி, சில ஏழை மக்கள் ஒரு பிரதேசத்தால் அல்லது சில நபர்களால் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படலாம், ஆனுல் அவர்கள் இந்த ஏழை மக்களுக்கு உணவும்

---

* *Essay on Trade etc.* என்ற நூலின் ஆசிரியர் கூறுவதாவது: ''ஆறும் எட்வர்டின் ஆட்சியில் ஆங்கிலேயர் பட்டறைத் தொழிலை ஊக்குவிக்கவும் ஏழைகளை வேலைக்கமர்த்தவும் மிகவும் மும்முரமாகச் செயல்படத் தொடங்கினுர்கள். இதை நாடோடிகள் அனைவருக்கும் சூட்டுக் குறி போட வேண்டும்... என்று துவங்கும் முக்கியமான சட்டத்திலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்'' (*An Essay on Trade and Commerce*, London, 1770, p. 5).

பானமும் அளிக்கவும் வேலே தேடித்தரவும் சம்மதிக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்த வகையான வட்டார அடிமைகள் roundsmen (தவணைக்காரரர்கள்) என்ற பெயரில் 19ஆம் நூற்றூண்டு தொடங்கிப் பலகாலம் இங்கிலாந்தில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

எலிசபெத் ஆட்சியில் 1572ல் இயற்றப்பட்ட சட்டம் கூறுவதாவது: 14 வயதுக்கு மேற்பட்ட லேசன்சில்லாத பிச்சைக்காரர்கள், எவரும் அவர்களை இரண்டாண்டுகளுக்கு வேலைக்கு வைத்துக் கொள்ளாத பட்சம் கடுமையாகக் கசை யடி கொடுக்கப்பட்டு இடது காதில் சூட்டுக் குறி பொறிக்கப் படுவார்கள்; மீண்டும் குற்றம் செய்து அவர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்களானல், யாராவது அவர்களை இரண்டாண்டுகள் வேலைக்கு வைத்துக் கொள் ளாத பட்சம் மரண தண்டனை விதிக்கப்படுவார்கள்; மூன்ரும் முறையாக அவர்கள் குற்றம் புரிவார்களானல் அவர்கள் படுபாதகன் என்று குறிப்பிடப்பட்டு ஈவிரக்கமின்றி மரண தண்டனை விதிக்கப்படுவார்கள். இதே போன்ற கட்டளைகள் எலிசபெத் ஆட்சியின் 18ஆவது ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டம் (அத். 13) மற்றும் 1597ல் வெளியிடப்பட்ட சட்டத்தில் அடங்கியிருந்தன.*

---

* தாமஸ் மோர் தமது ''உடோபியா'' என்னும் நூலில் கூறுகிறூர்: ''எனவே பேராசைக்காரனும் திருப்திப் படுத்த முடியாதவனும் தனது சொந்த நாட்டைப் பொருத்த வரை ஒரு கொள்ளை நோயாக ஆகி விட்டவனுமான ஒருவன் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்கு வரம்பு கட்டி வேலிக் குள் அடைத்து விடலாம், தனது நிலத்திலிருந்த விவசாயிகளை சூழ்ச்சியாலும் மோசடியாலும் அல்லது வன்மையான ஒடுக்கு முறையாலும் வெளியே தள்ளி விடலாம், தீம்புகள் கொடுமைகளின் தொல்லை பொறுக்காமல் எல்லாவற்றையும் விற்ருெழித்து விடும் நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படலாம்; இவ்வாருக எப்படியாவது இந்தத் துயரமிகுந்த ஏழைகள்— ஆண்களும் பெண்களும், கணவன்மாரும் மனைவியரும், தந் தையில்லாக் குழந்தைகளும் விதவைகளும், இளம் குழந்தை களுடனை துன்புறும் தாய்களுமாக வீடுமுச்சூடும் வெளியேற வேண்டியிருந்தது. சொத்தில் சிறிதாய் தொகையில் பெரிதாய் இருந்தன இக்குடும்பங்கள், காரணம் விவசாய வேலைக்கு அதிக ஆட்கள் வேண்டுமல்லவா? தமக்குப் பழக்கமான வீடுகளை உதறி விட்டு தலை சாய்க்க இடம் காணுமல் அவர்கள்

முதலாம் ஜேம்ஸ் ஆட்சியில், சுற்றித் திரிந்து கொண்டும் பிச்சையெடுத்துக் கொண்டும் இருப்பவர்கள் போக்கிரிகள் மற்றும் நாடோடிகள் என்று சாற்றப்பட்டார்கள். நீதிபதிகள் சிறு அமர்வுகளில் அவர்களுக்கு பகிரங்கமாகக் கசையடி தண்டனை கொடுக்கவும், முதல் குற்றத்துக்கு 6 மாதம் சிறை, இரண்டாம் குற்றத்துக்கு 2 ஆண்டுகள் சிறை என்று தண்டனை விதிக்கவும் அதிகாரம் பெற்றிருந்தனர். கைதிகள்

---

வாடுகிருர்கள். அவர்களது வீட்டுச் சாமான்கள் மதிப்பில் குறைந்தவையாயினும் விற்கத்தக்கவையே, ஆனுல் திடீரென்று வெளியேற்றப்பட்டதால் அவற்றை மிகவும் அற்பமான விலைக்கு விற்கும் கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. சுற்றித் திரிந்து இந்தச் சொற்பக் காசும் செலவழிந்த பிறகு அவர்கள் என்ன செய்வார்கள்? திருடுவதோ—அதன் விளைவாக தூக்கிலிடப்படுவதோ—அல்லது பிச்சை எடுப்பதோ தவிர வேறு வழியில்லை. மேலும் வேலையின்றிச் சுற்றித் திரிவதால் நாடோடிகள் என்று சொல்லி அவர்கள் சிறையிலடைக்கப்படலாம். அவர்கள் வேலை செய்ய எவ்வளவு அதிகமாக விரும்பினுலும் கூட யாரும் அவர்களுக்கு வேலை தர மாட்டார்கள்.'' திருடுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்று இந்த ஏழை அகதிகள் பற்றி தாமஸ் மோர் கூறுகிருர். ''எட்டாம் ஹென்ரியின் ஆட்சியில் 72,000 பெரிய சிறிய திருடர்கள் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்கள்'' (Holinshed, *Description of England*, Vol. I, p. 186). எலிசபெத்தின் காலத்தில் ''போக்கிரிகள் வரிசையாகத் தூக்கிலிடப்பட்டனர், ஆண்டுக்கு முன்னூறும் நானூறுமாகத் தூக்கு மரம் பலி கொண்டது'' (Strype, *Annals of the Reformation and Establishment of Religion, and other Various Occurrences in the Church of England during Queen Elizabeth's Happy Reign*, 2 ed., 1725, Vol. II). இதே ஸ்டிரைப்பின் கூற்றுப்படி சோமர்செட் ஷயரில் ஒரே ஆண்டில் 40 பேர் மரண தண்டனை பெற்ருர்கள், 35 திருடர்களின் கைகளில் சூடுபோடப்பட்டது, 37 பேர் கசையடிபட்டனர், 183 பேர் ''என்றுமே திருத்த முடியாத நாடோடிகள்'' என்று விடுவிக்கப்பட்டனர். எனினும் இந்தப் பெரியளவிலான சிறைக் கைதிகள் தொகை உண்மையான குற்றவாளிகள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு கூட இருக்காது,—நீதிபதிகளின் புறக்கணிப்பும், மக்களிடை நிலவும் முட்டாள்த்தனமான இரக்க உணர்வும் இதற்குக் காரணமாகும். இந்த விஷயத்தில் இங்கிலாந்தின் இதர மூவட்டங்கள் சோமர்செட் ஷயரை விடச் சற்றும் மேம்பட்டனவாக இருக்கவில்லை, சிலவற்றில் நிலைமை இன்னும் மோசம் என்கிருர் அவர்.

சிறையில் இருக்கும் போது, நீதிபதிகள் தக்கது என்று கருது மளவுக்குப் பல தடவை கசையடி பெறுவார்கள்... திருத்த முடியாத மற்றும் அபாயகரமான போக்கிரிகளின் இடது தோளில் போக்கிரி என்பதன் முதல் எழுத்துச் சூட்டுக் குறி யாகப் பொறிக்கப்படும் அவர்களுக்குக் கடின உழைப்புத் தரப்படும்; மீண்டும் பிச்சை எடுத்துப் பிடிபட்டால் இரக்க மின்றி மரண தண்டனை வழங்கப்படும். 18ஆம் நூற்றுண்டின் துவக்கம் வரையில் சட்டபூர்வம் கட்டுப்படுத்திய இந்தச் சட்டத்தின் விதிகள் ராணி அன்னுவின் ஆட்சியின் 12ஆவது ஆண்டில் (அத். 23.) மட்டுமே ரத்துச் செய்யப்பட்டன.

17ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் பாரிசில் royaume des truands (நாடோடிகளின் அரசு) நிறுவப்பட்ட போது பிரான்சிலும் இது போன்ற சட்டங்கள் இருந்தன. பதினுரு வது லூயி மன்னன் ஆட்சியின் தொடக்கத்திலுங்கூட (1777, ஜூலை 13 அவசரச்சட்டம்) ஆரோக்கியமுடைய 16 முதல் 60 வயதுக்குட்பட்ட எவரும் பிழைப்பு சாதனமின்றியும் மற்றும் ஏதாவது ஒரு தொழிலை நடத்தாமலும் இருப்பாராஞல் அத்தகையவர் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படுவார். ஐந்தாம் சார்லஸ் நெதர்லந்துக்கு விதித்த சட்டமும் (அக்டோபர் 1537) ஹாலந்தின் மாநிலங்கள் நகரங்களுக்கான முதல் ஆணையும் (1614, மார்ச் 19) ஐக்கிய மாகாணத்தின் ''பிளகாட்''டும் (ஜூன் 25, 1649) இதே போன்ற தன்மை கொண்டவை.

இவ்வாருக, விவசாயி மக்கள் முதலில் தமது நிலத்திலி ருந்து உடைமை பறிமுதல் செய்யப்பட்டு, வீடுகளிலிருந்து விரட்டப்பட்டு, நாடோடிகளாய் மாற்றப்பட்டு பின்னர் கசையடியும் சூட்டு முத்திரையும் பெற்று ஓவ்வாத பயங்கர மான சட்டங்களால் சித்திரவதை செய்யப்பட்டு கூலி அமைப் புக்கு அவசியமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டார்கள்.

சமூகத்தின் ஒரு துருவத்தில், உழைப்பு நிலைமைகள் திர ளாக மூலதனத்தின் உருவில் செறிந்து கிடப்பதும், மறு துரு வத்தில் தமது உழைப்புச் சக்தியைத் தவிர விற்பதற்கு வேறு எதுவுமில்லாத திரளான மனிதர்கள் குவிந்திருப்பதும் மட் டும் போதவில்லை. உழைப்பு சக்தியை அவர்கள் விரும்பியே விற்பனை செய்யும் படி கட்டாயப்படுத்தப்படுவதும் போத

வில்லை. முதலாளித்துவ உற்பத்தியின் முன்னேற்றம், முதலாளித்துவ உற்பத்தி முறையின் நிலைமைகளை இயற்கையின் தானே விளங்குகிற விதிகளே என்று தமது கல்வி, மரபு, பழக்கம் காரணமாகப் பார்க்கும் ஒரு தொழிலாளி வர்க்கத்தை வளர்க்கிறது. முதலாளித்துவ உற்பத்தி நடைமுறை அமைப்பு முழுமையாக வளர்ச்சியடைந்தவுடன் எல்லா எதிர்ப்பையும் தகர்த்து விடுகிறது. ஒரளவு உபரி மக்கள் தொகை இடையறாது பெருகி வருவது உழைப்பின் தரவு மற்றும் தேவையை நெறிப்படுத்தும் விதியையும் அதன் மூலம் கூலியையும் மூலதனத்தின் தேவைக்கு இசைவான தடத்தில் அடக்கி வைத்திருக்கிறது. பொருளாதார உறவுகளின் குருட்டுச் சக்தி முதலாளியிடம் தொழிலாளி ஆட்பட்டிருப்பதை முழுமைப்படுத்துகிறது. பொருளாதார நிலைமைகளுக்குப் புறம்பாகவுள்ள நேரடியான பலப்பிரயோகம் இன்னும் பயன்படுத்தப்படுகிறது என்பது மெய்யே ஆயினும் அது விதிவிலக்காகவே பயன்படுத்தப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகளில் தொழிலாளியை ''உற்பத்தியின் இயற்கை விதிகளுக்கே'', அதாவது மூலதனத்தின் மீதான அவரது சார்பு நிலைக்கே— உற்பத்தி நிலைமைகளிலிருந்தே ஏற்பட்டு அவற்றால் நிரந்தரமாக உத்தரவாதம் செய்யப்படும் சார்பு நிலைக்கே— விட்டுவிடலாம். முதலாளித்துவ உற்பத்தியின் வரலாற்றுப் பிறப்பின் தறுவாயில் நிலைமை வேறுவிதமாக இருக்கும். கூலிகளை ''முறைப்படுத்தவும்'' அதாவது உபரி மதிப்பு உண்டாக்குவதற்குப் பொருத்தமான வரம்புக்குள் கூலிகளை நிர்ப்பந்தமாக வைத்திருக்கவும், வேலைநாளை நீட்டிக்கவும், தொழிலாளியை சகஜமான அளவில் சார்பு நிலையில் வைத்திருக்கவும் வளர்ச்சியுற்றுவரும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு அரசாங்க அதிகாரம் அவசியம், அது அதைப் பயன்படுத்துகிறது. இது புராதனத் திரட்சியின் ஓர் இன்றியமையாத கூறாகும்.

14ஆம் நூற்றாண்டின் பிந்திய பாதியில் தோன்றிய கூலித் தொழிலாளர் வர்க்கம் அந்தக் காலத்திலும் அடுத்த நூற்றாண்டிலும் மக்கள் தொகையில் மிகவும் சிறிய பகுதியாகவே இருந்தது; நாட்டுப் புறத்தில் சுதந்திரமான விவசாயி உரிமையாளர்களாலும், நகர்ப் புறங்களில் கைவினைச் சங்க அமைப்புகளாலும் அதன் நிலைமை நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது. நாட்டுப் புறத்திலும் நகரிலும் எஜமானரும்

தொழிலாளியும் சமூகரீதியில் மிகவும் நெருக்கமாக இருந்தனர். உழைப்பு மூலதனத்துக்குக் கீழடங்கியதாக இருந்தது என்பது சம்பிரதாய அளவில் மட்டுமே— அதாவது உற்பத்தி முறைக்கே இன்னும் திட்டவட்டமான முதலாளித்துவத் தன்மை ஏற்பட்டிருக்கவில்லை. மாறிவரும் மூலதனம் நிரந்தர மூலதனத்தை விடவும் மிகவும் மேலோங்கியிருந்தது. மூலதனம் திரட்டப்படுந்தோறும் கூலி உழைப்பாளிகளுக்கான தேவை வேகமாக அதிகரித்தது, அதே சமயம் கூலி உழைப்பாளர் தரவு மிகவும் மெதுவாகவே பின் தொடர்ந்தது. முதலாளித்துவத் திரட்சி நிதியாக பின்னல் மாற்றப்பட்ட தேசிய விளைபொருளில் பெரும் பகுதி அப்போதும் தொழிலாளியின் பயனீட்டு—நிதிக்குள் போய்க் கொண்டிருந்தது.

கூலித் தொழிலாளர் பற்றிய சட்டமியற்றல் (ஆரம்ப முதலே தொழிலாளியைச் சுரண்டும் நோக்கத்துடனும் அவன் முன்னேறுந்தோறும் தொழிலாளிக்கு எப்போதுமே பகைமையான விதத்திலும்)* இங்கிலாந்தில் மூன்ரும் எட்வர்டின் ஆட்சிக் காலத்தில் 1349ல் இயற்றப்பட்ட தொழிலாளர் சட்டத்தோடு தொடங்கியது. பிரான்சில் 1350ஆம் ஆண்டு அரசாணை ஜான் மன்னர் பெயரால் பிறப்பிக்கப்பட்டது; இதுவும் முன்னதைப் போன்றே உள்ளது. ஆங்கில மற்றும் பிரெஞ்சு சட்டங்கள் இசைந்து இணையாகச் செல்கின்றன, அவை நோக்கத்தில் முற்ருெருமையுடையவை. வேலை நாளைக் கட்டாயமாக நீட்டிப்பதை நோக்கமாகக் கொண்ட தொழிலாளர் சட்டங்கள் பற்றி நான் விளக்க முற்படவில்லை, அவை ஏற்கெனவே (**மூலதனம்,** தொகுதி *1*, அத். X, பிரிவு *5*) விளக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் சட்டம் காமன்ஸ் சபையின் அவசர ஆலோசனையின்படி நிறைவேற்றப்பட்டது. ஒரு டோரி இது பற்றி அப்பாவித்தனமாகக் கூறியதாவது:

---

* ''எஜமானர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் இடையிலான வேற்றுமைகளை முறைப்படுத்த சட்டம் முயன்றபோதெல்லாம் இதன் ஆலோசகர்கள் எஜமானர்களே'' என்கிருர் ஆ. ஸ்மித். ''சட்டங்களின் ஆன்மா என்ருல் அதீ சொத்துரிமை என்று பொருளாகும்'' என்கிருர் லிங்கே.

''முன் நாட்களில் ஏழைகள் தொழில் துறையையும் செல்வத்தையும் அச்சுறுத்தல் செய்யும் அளவில் அத்தகைய உயர்ந்த கூலிகளைக் கோரியிருந்தார்கள். அடுத்தபடி அவர்களது கூலிகள், இன்னொரு வழியில் தொழில் துறையையும் செல்வத்தையும் இதே அளவுக்கோ அல்லது ஒருக்கால் அதிகமாகவோ அச்சுறுத்தும் வகையில் மிகவும் குறைவாக உள்ளன.''*

நகரத்திலும் நாட்டுப் புறத்திலும் செய்யப்படும் நேரக் கூலி வேலைக்கும் நாள் வேலைக்கும் சட்ட மூலம் ஒரு கூலி விகிதப்பட்டியல் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் ஆண்டு முழுவதிலும், நகரத் தொழிலாளர்கள் ''பகிரங்க மார்க்கெட்'' நிலவரப்படியும் கூலிக்கு வேலை செய்ய வேண்டும். சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட கூலிக்கு மேல் அதிகமாகக் கொடுப்பது தடை செய்யப்பட்டிருந்தது. மீறிக் கொடுத்தால் சிறைத் தண்டனை கிடைக்கும்; அதிகக் கூலி கொடுப்பதை விட அதைப் பெறுவது பெரிய குற்றம் எனக் கருதிக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. [இதே போல எலிசபெத்தின் பழகுனர் பற்றிய சட்டம், பிரிவு 18 மற்றும் 19ன் பிரகாரம் அதிகச் சம்பளம் தருபவருக்கு 10 நாள் சிறைத் தண்டனையும், அதிகச் சம்பளம் பெறுபவருக்கு 21 நாட்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.] 1360ஆம் ஆண்டுச் சட்டம் இந்தத் தண்டனைகளை அதிகரித்து, தொழிலாளரிடம் சட்ட விகிதப் படியான கூலிக்கே கட்டாயமாக வேலை வாங்கவும் மறுத்தால் கசையடி போன்ற தண்டனை வழங்கவும் எஜமானர்களுக்கு அதிகாரம் வழங்கியது. கட்டடத் தொழிலாளர்களையும் தச்சுத் தொழிலாளர்களையும் பரஸ்பரம் கட்டுப்படுத்தி வைத்திருந்த இணைப்புகள், ஒப்பந்தங்கள், வாக்குறுதிகள் அனைத்தும் செல்லத்தகாதவை என்று அறிவிக்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டு முதல், தொழிற் சங்கங்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்ட 1825ஆம் ஆண்டு வரையிலும், தொழிலாளர்கள்

---

* [J. B. Byles.] *Sophisms of Free Trade.* By a Barrister. London, 1850, p. 206. அவர் வன்மத்துடன் மேலும் கூறுகிறார்: ''தொழிலதிபருக்காகத் தலையிட நாங்கள் போதியளவு தயாராக இருந்தோம்; தொழிலாளருக்கு வேண்டி இப்போது எதுவும் செய்வதற்கில்லையா?''

சங்கங்களில் சேருவது கடுங்கொடிய குற்றச் செயலாகக் கருதப்பட்டது. 1349 தொழிலாளர் சட்டம் மற்றும் அதிலிருந்த பிறந்த எல்லா விதிகளும் அரசு ஆணை பிறப்பித்து நிர்ணயித்துள்ளது, அதிகப்பட்சக் கூலியே தவிரக் குறைந்த பட்சக் கூலி அல்ல என்று தெளிவாக அறிவித்தன.

16ஆம் நூற்றுண்டில் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாகி விட்டிருந்தது என்பதை நாம் அறிவோம். பணமாகக் கிட்டும் கூலி அதிகரித்தது ஆனால் பணத்தின் மதிப் பிறக்கம், அதன் விளைவாய் பண்டங்களின் விலை உயர்வு இவற்றுக்கு ஏற்ற விகிதத்தில் கூலி உயரவில்லை. அதனால் யதார்த்தத்தில் கூலிகள் குறைந்தன. இருந்தபோதிலும் இவற்றைக் குறைவாகவே வைத்திருப்பதற்கான சட்டங்கள் அமுலில் இருந்தன; இதோடு ''யாருமே வேலைக்கு எடுத்துக் கொள்ள விரும்பாத நபர்கள்'' காதறுக்கப்படுவதும் சூட்டுக் குறி பொறிக்கப்படுவதும் தொடர்ந்து நீடித்தது. எலிசபெத் ஆட்சியின் 5ஆவது ஆண்டில் வெளியிடப்பட்ட பழகுனர் சட்டம் அத்.3,சில கூலிகளை நிர்ணயிக்கவும்,ஆண்டின் பருவம் மற்றும் பண்டங்களின் விலைக்கு ஏற்ப அவற்றை மாற்றிய மைக்கவும் நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கியது. முதலாம் ஜேம்ஸ் இந்தச் சட்டத்தை நெசவாளர்கள், நூற்பாளர்கள் மற்றும் சாத்தியமான எல்லா வகை இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் விஸ்தரித்தார்.* இரண்டாம் ஜார்ஜ் தொழிலாளர் சங்கத்தில் சேருவதை எதிர்க்கும் சட்டத்தை பட்டறைத் தொழில் துறைக்கு விஸ்தரித்தார்.

* முதலாவது ஜேம்ஸின் ஆட்சியின் இரண்டாவது ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம், அத். 6, ஒரு ஷரத்திலிருந்து, சில ஜவுளி உற்பத்தியாளர்கள் நீதிபதிகள் என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரம் காரணமாகத் தமது தொழிற்சாலைகளில் சம்பளங்களின் அதிகார பூர்வக் கூலிவிகிதப் பட்டியலை அமுல் செய்ய ஆணையிட்டார்கள். ஜெர்மனியில் குறிப்பாயும் முப்பதாண்டுப் போருக்குப் பின் கூலிகளைக் குறைவாகவே வைத்திருப்பதற்கான சட்டங்கள் பொதுவாக இருந்தன. ''மக்கள் தொகை குறைந்திருந்த மாவட்டங்களில் வேலையாட்களும், தொழிலாளர்களும் பற்றுக்குறையாக இருப்பது நிலச்சொந்தக்காரர்களுக்கு மிகவும் தொந்தரவாக இருந்தது. தனி ஆண் அல்லது பெண் எவருக்கும் கிராம வாசிகள் அறைகளை வாடகைக்கு விடக் கூடாது என்று தடைவிதிக்கப் பட்டது; அப்படியான தனி ஆட்கள் பற்றி அதிகாரிகளிடம்

பட்டறை உற்பத்தி மிகவும் மேம்பட்டு விளங்கிய கால கட்டத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையானது, கூலி பற்றிய சட்டவிதி முறை அவசியமில்லை, எனவே நடைமுறை சாத்தியமல்ல என்று அதை நிராகரிக்கும் அளவுக்குப் போதிய வலுப்பெற்றிருந்தது. ஆனால் அவசியம் ஏற்படுமானால் பயன் படுத்த வேண்டுமே எனக் கருதி பழைய ஆயுதங்களை இல் லாமற் செய்ய ஆளும் வர்க்கங்கள் விரும்பவில்லை. இன்னும் இரண்டாம் ஜார்ஜின் ஆட்சியின் 8ஆவது ஆண்டில் இயற்றப் பட்ட சட்டம் லண்டனிலும் அதைச் சுற்றிலுமிருக்கும் தையற்தொழிலாளர்களின் தினக் கூலியை பொதுவான துக்க அனுஷ்டிப்பு சம்பந்த வேலைகள் தவிர, 2 ஷில்லிங் $7^1/_2$ பென்சுக்கு மேல் அதிகரிக்கக் கூடாது என்று தடை செய்தது; இன்னும், மூன்றும் ஜார்ஜின் ஆட்சியின் 13ஆவது ஆண்டு சட்டம்,அத்.68 பட்டு நெசவாளர் கூலிகளை முறைப்படுத்தும் உரிமையை நீதிபதிகளுக்கு அளித்தது; இன்னும் 1796ல், கூலிகள் சம்பந்தமான நீதிபதிகளின் உத்தரவு விவசாயத்

---

புகார் செய்யப்படும். வேலையாட்களாக இருக்க அவர்கள் விரும்பாவிடில், நாட் கூலிக்கு விவசாயிகளுக்கு விதைப்பாடு வேலை செய்வது, அல்லது தானியத்தை வாங்குவது விற்பது போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்கள் சிறைக்குள் தள்ளப்படுவார்கள் [*Kaiserliche Privilegien und Sanctionen für Schlesien*, I., 125]. சிறிய ஜெர்மன் ஆளுனர் களின் ஆணைகளில், தனது கஷ்ட நிலைமையை ஏற்றுக் கொள்ள மறுப்போர், மற்றும் சட்டப்படியான கூலியில் திருப்தியுறாதவர்களான கொடிய, திமிரான கீழ் மக்கள் பற்றி மீண்டும் மீண்டும் இந்த நூற்றாண்டு முழுவதிலும் வெறுப் பான ஓலம் கேட்டது. தனிப்பட்ட நிலவுரிமையாளர்கள் அரசு நிர்ணயித்த கூலிவிகிதப் பட்டியலுக்கு மேல் அதிகக் கூலி தருவது தடை செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் போருக்குப் பிந்திய அக்காலத்திய சேவா நிலைமைகள் அக் காலத்துக்கு நூறாண்டுகளுக்குப் பிறகு இருந்ததை விடவும் சில சமயங்களில் நன்றாக இருந்தன. 1652ல் சைலிசியாவில் பண்ணை வேலையாட்களுக்கு வாரம் இரு முறை இறைச்சி கிடைத்தது, ஆனால் நமது நூற்றாண்டில் பல மாவட்டங்களில் அவர்களுக்கு வருடத்தில் மூன்று தடவையே கிடைக்கிறது. மேலும் போருக்குப் பிந்திய கூலி அடுத்து வந்த நூற்றாண் டில் இருந்ததைக் காட்டிலும் உயர்வாக இருந்தது'' (G. Freytag. [*Neue Bilder aus dem Leben des deutschen Volkes*, Leipzig, 1862, S. 35, 36]).

தொழிலாளர்களல்லாதவர்களுக்கும் பொருந்துமா என்பதை முடிவு செய்ய உயர் நீதிமன்றங்களின் இரண்டு தீர்ப்புகள் தேவையாக இருந்தன; இன்னும் 1799ல் ஸ்காட்லந்தின் சுரங்கத் தொழிலாளர்களின் கூலி எலிசபெத்தின் சட்டத் தாலும் 1661 மற்றும் 1671 இரு ஸ்காட்லந்துச் சட்டங்க ளாலும் முறைப் படுத்தப்பட வேண்டும் என்று ஒரு நாடாளு மன்றச் சட்டம் உத்தரவிட்டது. இதற்கிடையில் சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் எவ்வாறு முழுமையாக மாற்றமடைந்து விட்டன என்பதை இங்கிலாந்தின் காமன்ஸ் சபையில் (English Lower House) முன் என்றுமே கேள்விப்பட்டிராத ஒரு நிகழ்ச்சி நிருபித்துக் காட்டியது. இதற்கப்பால் கூலி அறவே உயரக் கூடாது என்று அதிகப்பட்சத்தை நிர்ணயித்து 400 ஆண்டுகளாகச் சட்டமியற்றிய அந்த மன்றத்தில் விட்பிரெட் என்பவர் 1796ல் விவசாயத் தொழிலாளிகளுக்குரிய குறைந்த பட்சக் கூலி சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தார். பிட் இதை எதிர்த்தார் ஆனால் ''ஏழைகளின் நிலைமை மிகவும் வேதனை தருவதே'' என்பதை ஒப்புக்கொண்டார். இறுதியாக கூலியை முறைப் படுத்தும் சட்டங்கள் 1813ல் ரத்துச் செய்யப்பட்டன. முத லாளி தனது ஆலையைத் தனது சொந்தச் சட்டப்படி முறைப் படுத்தி வந்ததாலும், ஏழ்மை வரிகள் மூலம் விவசாயத் தொழிலாளியின் கூலியை இன்றியமையாத அளவுக்குக் குறைந்த பட்சமாக்க முடிந்ததாலும் இவை அபத்தமான முறை கேடுகளாயின. எஜமானுக்கும் தொழிலாளிக்குமிடை யிலான ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்களை ரத்தாக்குவது பற்றி முன் அறிவிப்பு அளித்தல் போன்றவை சம்பந்தப்பட்ட தொழிலாளர் சட்டத்தின் ஷரத்துகள் ஒப்பந்தத்தை மீறும் எஜமான் மீது சிவில் நடவடிக்கை எடுப்பதை மட்டுமே அனுமதித்தன, ஆனால் ஒப்பந்தத்தை மீறும் தொழிலாளி மீது குற்ற நடவடிக்கை எடுக்க அனுமதித்தன. இந்த ஷரத் துக்கள் இன்னும் முழுமையாக அமுலில் உள்ளன.

தொழிற் சங்கங்களை எதிர்த்த காட்டுமிராண்டிச் சட்டங்கள், 1825ல் பாட்டாளி வர்க்கம் மேற்கொண்ட அச் சுறுத்தும் போர்க் கோலத்தின் முன், வீழ்ச்சியடைந்தன. இருப் பினும் அவற்றில் ஒரு பகுதியே வீழ்ச்சியடைந்தது. பழைய சட்டத்தின் சில அழகான பகுதிகள் 1859ல் தான் மறைந்தன.

இறுதியாக, தொழிற் சங்கங்களுக்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்கியது மூலம் 1871, ஜூன் 29ந் தேதிய நாடாளுமன்றச் சட்டம் இந்த வகையான சட்டங்களின் கடைசிச் சுவடுகளை அகற்றுவதாகப் பாவனை செய்தது. ஆனால் அதே தேதியில் இயற்றப்பட்ட இன்னொரு நாடாளுமன்றச் சட்டம் (வன்முறை, அச்சுறுத்தல், வலுவந்தம் பற்றிய குற்றச் சட்டத்தைத் திருத்தும் சட்டம்) மெய்யாகவே முன்பிருந்த நிலைமையை புதிய உருவில் மீண்டும் நிலைநாட்டியது. இந்த நாடாளுமன்றத் திருத்தம் மூலம் ஒரு வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்பின் போது தொழிலாளர் பயன்படுத்தக் கூடிய செயல் முறைகள் எல்லாக் குடிமக்களுக்கும் பொதுவாக உள்ள சட்டங்களிலிருந்து அகற்றப்பட்டு விசேஷக் குற்றச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டன; இதை வியாக்யானம் செய்யும் உரிமை நீதிபதிகள் என்ற முறையில் எஜமானர்களுக்கே போய்ச் சேர்ந்தது. இரண்டாண்டுகளுக்கு முன்னால் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான அசாதாரணமான எல்லாக் குற்றச் சட்டங்களையும் ரத்துச் செய்யக்கோரும் ஒரு மசோதா இதே காமன்ஸ் சபையால், இதே திரு. கிளாட்ஸ்டனால் நன்கறிந்த நேர்மையான முறையில் கொண்டு வரப்பட்டது. ஆனால் இது இரண்டாம் சுற்று விவாதத்திற்கு மேல் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை, இந்த விஷயம் நீடித்துக் கொண்டே போயிற்று, இறுதியாக ''மாபெரும் மிதவாதக் கட்சி'' டோரிகளுடன் கூட்டணி சேர்ந்து அதை ஆட்சிபீடத்தில் அமர்த்திய அதே பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்துத் தாக்குவதற்கான துணிவைப் பெற்றது. இந்த துரோகச் செயலோடு திருப்திப்படாமல், இந்த ''மாபெரும் மிதவாதக் கட்சி'' ''சதிக்கு''[8] எதிரான முன்பிருந்த சட்டங்களைத் தோண்டி எடுத்து அவற்றைத் தொழிலாளர் சங்கங்களுக்கு எதிராகப் பிரயோகிக்கவும் ஆளும் வர்க்கத்திற்குச் சேவை புரிவதில் அகமகிழ்ச்சியுறும் ஆங்கில நீதிபதிகளை அனுமதித்தது. தனது விருப்பத்துக்கு எதிராகவும் வெகு ஜனங்களின் நிர்ப்பந்தத்தின் கீழும் மட்டுமே ஆங்கில நாடாளுமன்றம் வேலை நிறுத்தங்கள் மற்றும் தொழிற் சங்கங்களுக்கு எதிரான சட்டங்களை[9]—500 ஆண்டுகளாகத் தொழிலாளர்களை எதிர்த்த முதலாளிகளின் நிரந்தரத் தொழிற்சங்கம் தானே என்ற நிலையை வெட்கங்கெட்ட தன்முனைவத்துடன் மேற்

கொண்டு அவற்றை விடாமல் வைத்திருந்த ஆங்கில நாடாளு மன்றம்—கைவிட்டது என்பதை நாம் காண்கிறோம்.

புரட்சியின் முதல் புயல்வீச்சின் போதே பிரெஞ்சு பூர் ஷுவாக்கள், தொழிலாளர்கள் அப்பொழுது தான் பெற்றிருந்த சங்கம் சேரும் உரிமையை அகற்றி விடத் துணிந்தார்கள். 1791 ஜூன் 14ந் தேதி பிறப்பித்த ஆணை மூலம் அவர்கள் தொழிலாளர்களின் சங்கங்கள் யாவும் ''சுதந்திரத்துக்கும் மனித உரிமைகள் பிரகடனத்துக்கும் எதிரான ஒரு முயற்சி'' எனவும் மேலும் இது 500 லிவெர்கள் அபராதம், அதோடு ஓர் ஆண்டுக்கு செயலூக்கமுள்ள குடிமகனது உரிமைகள் இழப்பு என்னும் தண்டனையும் வழங்கத்தக்க குற்றம் எனவும் சாற்றினார்கள்.* அரசாங்க நிர்ப்பந்தம் மூலமாக முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான போராட்டத்தை முதலாளிகளுக்கு வசதியான முறையில் வரையறைக்குள் கட்டுப்படுத்தி வைத்த இந்தச் சட்டம், புரட்சிகள் மற்றும் அரச வமிசங்களில் ஏற்பட்ட மாற்றங்களையும் கடந்து நிலவியது. பயங்கர ஆட்சியும் கூட இதை ஒன்றும் செய்யாது விட்டு விட்டது. இது மிகவும் அண்மை

---

* இந்தச் சட்டத்தின் முதல் விதி பின்வருமாறு: ''சமுதாய ரீதியில் ஒரே அந்தஸ்துள்ள, ஒரே தொழிலைச் செய்து வருவோருமான நபர்களின் எல்லா விதமான அமைப்புகளையும் ஒழித்துவிடுவது என்பது பிரெஞ்சு அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையானதால், அத்தகைய அமைப்புக்களை எந்த ஒரு சாக்குப் போக்கின் கீழும், அல்லது எந்த ஒரு வடிவிலும் மீண்டும் நிறுவுவது தடை செய்யப்பட்டுள்ளது.'' நாலாவது விதி கூறுவதாவது: ''ஒரே தொழில், கலை அல்லது கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடிமக்கள் தமது தொழில் துறைச் செயல்பாடு அல்லது வேலையைச் செய்ய மறுப்பதையும் அல்லது ஒரு குறிப்பிட்ட ஊதியத்துக்குத் தான் செய்வோம் என்பதையும் நோக்கமாக்கி தமக்குள் இணக்கமேற்படுத்திக் கொள்வதோ அல்லது பரஸ்பரம் உடன்பாட்டுக்கு வரவோ செய்யும் பட்சம் மேற்குறிப்பிட்ட கூட்டுயோசனை மற்றும் உடன்பாடுகள்... சட்டவிரோதமானவை, சுதந்திரத்தை மீறியவை, மனித உரிமைகள் பிரகடனத்தை மீறியவை என்று கருதப்படும்.'' வேறு சொற்களில் கூறினால் பழைய தொழிற்-சட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டது போன்ற அரசுக்கு எதிரான குற்றமாகக் கருதப்படும் (*Révolutions de Paris*, Paris, 1791, III, p. 523).

யிலேயே குற்றச் சட்டத் தொகுப்பேட்டிலிருந்து அகற்றப் பட்டது. இந்த முதலாளித்துவ திடீர் மாற்றத்திற்குக் கூறப் படும் காரணம் பொருள் நிறைந்ததாகும். இந்தச் சட்டத் தைப் பற்றி அறிவிப்பாளரான ஷப்பெலியெ கூறுவதாவது: ''கூலி விகிதங்கள் இப்போதிருப்பதை விடவும் சிறிது உயர்ந் ததாகத் தான் இருக்க வேண்டும் என்பதையும்... அவை கூலி பெறுபவர்கள் வாழ்க்கைத் தேவைகளின் இல்லாமை காரணமாக முற்றிலும் பிறரை அண்டியிருக்கும் நிலைமை, அதாவது கிட்டத்தட்ட அடிமைத்தனத்துக்கு இணையான நிலைமை ஆகியவற்றிலிருந்து விடுபட்டு நிற்பதற்குப் போதியளவு உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதையும் ஒப்புக்கொண்டாலுங்கூட'' தொழிலாளர்கள் தமது சொந்த நலன்கள் சம்பந்தமாக எந்த விதமான முடிவுக்கும் வருவதற்கோ, அல்லது பொதுவாகச் செயல்பட்டுத் தமது ''கிட்டத்தட்ட அடிமைத்தனத்துக்கு இணையான, முற்றிலும் பிறரை அண்டியிருக்கும் நிலையைக்'' குறைத்துக் கொள் வதற்கோ அனுமதிக்கக் கூடாது; காரணம் இதைச் செய் வது மூலம் அவர்கள் ''தமது முன்னாள் எஜமானர்களான, இன்றைய தொழில்முனைவர்களின் சுதந்திரத்துக்குத்'' தீங்கு விளைக்கிறார்கள், ஏனெனில் கார்ப்பொரேஷன்களின் முன் நாளைய எஜமானர்களது கொடுங் கோன்மையை எதிர்த்து சங்கம் சேருவது, பிரெஞ்சு அரசியல் சட்டம் ஒழித்து விட்ட கார்ப்பொரேஷன்களை மீண்டும் நிலை நாட்டுவதாகும்.*

## முதலாளித்துவ சாகுபடியாளரின் பிறப்பு

சட்டக்காப்பற்ற பாட்டாளிகளது வர்க்கம் வலுவந்த மாக உருவாக்கப்பட்டது, அப்பாட்டாளிகளைக் கூலித் தொழி லாளர்களாக மாற்றிய கொடூரமான கட்டுப்பாடு, தொழி லாளர்கள் சுரண்டப்படும் அளவை அதிகரிப்பது மூலம் மூல தனத் திரட்சியைத் துரிதப்படுத்தப் போலீசை ஏவிவிட்ட

* Buchez et Roux, *Histoire Parlementaire*, t. X, pp. 193-195, passim.

அரசாங்கத்தின் வெட்கக் கேடான செயல் ஆகியவை பற்றி எல்லாம் நாம் கவனமாய் ஆராய்ந்து விட்டோம். இப்போதுள்ள கேள்வி: இந்த முதலாளிகள் ஆரம்பத்தில் எங்கிருந்து உருவாகி வந்தார்கள்? விவசாயி மக்களின் உடைமை பறிமுதல் நேரடியாக பெரிய நில உரிமையாளர்களை மட்டுமே உருவாக்குகிறது, வேறு எவரையுமன்று. சாகுபடியாளரின் பிறப்பைப் பொருத்தவரையில் இதை நாம் படிப்படியாக ஆராயலாம், காரணம் இது பல நூற்றுண்டுகளினூடே பரிணமித்து வருகிற மெதுவான மாற்றப் போக்காகும். பண்ணையடிமைகளின் மற்றும், சுதந்திரமான சிறு நில உரிமையாளர்களின் உடைமை அந்தஸ்து மிகவும் வெவ்வேருனது, எனவே மிகவும் வித்தியாசமான பொருளாதார நிலைமைகளில் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

இங்கிலாந்தில் சாகுபடியாளரின் முதல் வடிவம் மேலாளர் (bailiff) ஆகும். அவர் தானே ஒரு பண்ணையடிமையாக இருந்தவர். அவரது நிலைமை பழைய ரோமன் villicus இனுடையது போன்றதாகும், ஆனல் அவர் செயல்படும் வட்டம் மேலும் குறுகியதாக இருந்தது. 14ஆம் நூற்றுண்டின் இரண்டாம் பாதியில் அவர் ஒரு சாகுபடியாளரால் மாற்றீடு செய்யப்பட்டார், அச்சாகுபடியாளருக்கு நிலவுடைமையாளர் விதைகள், கால்நடை மற்றும் கருவிகளை வழங்கினர். அவரது நிலைமை ஒரு விவசாயியின் நிலைமையிலிருந்து மிகவும் வேறுபட்டதல்ல. ஆனல் அவர் கூலி உழைப்பாளர்களை மேலும் அதிகமாகச் சுரண்டுகிருர். விரைவில் அவர் ஒரு பங்குக் குத்தகைதாரஞக (métayer) அதாவது, அரைச்சாகுபடியாளராய் ஆகிருர். விவசாயத்திற்கு வேண்டிய மூலதனத்தில் ஒரு பகுதியை அவர் முன்னிடுகிருர், மறுபாதியை நிலவுடைமையாளர் முன்னிடுகிருர். இவர்கள் இருவரும் ஒப்பந்த மூலம் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் மொத்த விளைபொருளைப் பங்கிட்டுக்கொள்கின்றனர். இங்கிலாந்தில் குத்தகையின் இந்த வடிவம் விரைவில் மறைந்து முறையான சாகுபடியாளருக்கு (farmer) இடமளிக்கப்பட்டது; அவர் கூலித் தொழிலாளர்களை வேலையிலமர்த்துவது மூலம் தனது சொந்த மூலதனத்தைத் தழைக்கச் செய்கிருர் மற்றும் உபரி விளைபொருளில் ஒரு பகுதியை நிலவுடைமையாளருக்குப் பணமாகவோ, தானியமாகவோ வாரமாகச் செலுத்துகிருர்.

பதினைந்தாம் நூற்றாண்டில், சுதந்திரமான விவசாயியும், தனக்காகவும் அதோடு கூலிக்காகவும் வேலை செய்த பண்ணைத் தொழிலாளியும் தமது சொந்த உழைப்பால் தம்மை வளப்படுத்திக் கொண்டதுவரை, சாகுபடியாளரின் வாழ்க்கைத்தரமும் அவரது உற்பத்தித் துறையும் அந்த அளவுக்கு மோசமானதாகவே இருந்தன. 15ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியில் தொடங்கி 16ஆம் நூற்றாண்டு முழுவதும் (கடைசி பத்தாண்டுகள் தவிர) தொடர்ந்து நீடித்த விவசாயப் புரட்சி விவசாயி வெகுஜனங்களை எவ்வளவு வேகத்தில் வறியவர்களாக்கியதோ அதே வேகத்தில் சாகுபடியாளரைச் செல்வந்தராக்கியது.* பொது நிலங்களை அநீதமாகப் பறித்துக் கொண்டது மூலம், அவர் எவ்விதச் செலவும் இன்றித் தமது கால்நடைகளின் இருப்பைப் பெருமளவு அதிகரித்துக் கொள்ள முடிந்தது, அவை நிலத்தைப் பண்படுத்துவதற்குதவும் உரத்தைப் பெருக்கி வழங்கின.

பதினாறும் நூற்றாண்டில் இதற்கு இன்னொரு முக்கியமான கூறு சேர்க்கப்பட்டது. அந்த சமயத்தில் பண்ணைக் குத்தகைக்கான ஒப்பந்தங்கள் நீண்ட காலத்துக்கு பெரும்பாலும் 99 ஆண்டுகளுக்குச் செய்து கொள்ளப்பட்டன. அரிய உலோகங்களின் மதிப்பின் படிப்படியான வீழ்ச்சி, அதன் விளைவாகப் பணத்தின் மதிப்பிலான வீழ்ச்சி சாகுபடியாளர்களுக்குப் பெருமளவு இலாபகரமாக இருந்தது. மேலே விவரிக்கப்பட்ட சந்தர்ப்ப சூழல்களுக்குப் புறம்பாக, இது கூலிவிகிதங்களைக் குறைத்தது. கூலியின் ஒரு பகுதி இப்போது பண்ணையின் லாபத்தோடு சேர்க்கப்பட்டது. தானியம், கம்பளி, இறைச்சி மட்டுமன்றி எல்லா விவசாயப் பண்டங்களினதும் தொடர்ச்சியான விலை உயர்வு மூலம் அவரது சொந்த முயற்சிகள் எதுவுமின்றியே சாகுபடியாளரின் பண மூலதனம் பெருகியது. அவர் செலுத்தி வந்த வாரம் (பணத்தின் பழைய

---

* *Description of England* என்ற தமது நூலில் ஹாரிசன் கூறுவதாவது: ''பழைய நான்கு பவுன் வாரம் 40 பவுன்களாக மேம்பாடடைய முடிந்ததாயினும், தனது குத்தகைக் கால இறுதியில் ஆறு அல்லது ஏழாண்டுகளுக்கான வாரம் வசூலாகி, 50 அல்லது 100 பவுன்களே பாக்கி நிற்குமாறாலுங்கூட சாகுபடியாளர் தனது லாபம் மிகக் குறைவானது என்று நினைக்கிறார்.''

மதிப்பில் கணக்கிடப்பட்டு) யதார்த்தத்தில் குறைந்தது.* இவ்வாறே அவர்கள் தமது தொழிலாளர்கள் மற்றும் நிலவுடைமையாளர்களுக்குப் பிரதிகூலமாக செல்வந்தர்களா

---

* 16ஆம் நூற்றுண்டில் பணத்தின் மதிப்பிறக்கம் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்கள் மீது செலுத்திய செல்வாக்குப் பற்றி *A Compendious or Briefe Examination of Certayne Ordinary Complaints of Diverse of our Countrymen in these our Days*. By W. S. Gentleman. (London, 1581) என்ற நூலைப் பார்க்கவும். இந்த நூலில் வரும் உரையாடல் இதை ஷேக்ஸ்பியர் எழுதினுர் என்று நீண்ட காலம் மக்கள் கருதும்படி இருந்தது. 1751லும் இது அவரது பெயரால் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் வில்லியம் ஸ்ட்டாஃபோர்ட். இந்நூலின் ஓர் இடத்தில் அறக்காப்பு வீரன் (knight) பின்வருமாறு நியாயம் பேசுகிறுர்.

**அறக்காப்பு வீரன்:** ''அண்டை அயல் வாசியான சமுசாரியே (விவசாயி), திருவாளர் வியாபாரியே, நல்லமனிதரான செம்புகொட்டியே, மற்ற கைவினைஞர்களே, உங்களை நீங்களே நன்ருகப் பாது காத்துக்கொள்ளலாம். ஏனெனில் எல்லாப் பொருட்களுக்கும் முன்னைவிட விலை கூடுதலாக இருப்பதால் நீங்கள் விற்பனை செய்யும் பொருட்களுக்கும் உழைப்புக்கும் விலையை உயர்த்தி விட்டீர்கள். ஆனல் நாங்கள் வாங்க வேண்டிய பொருட்களுக்குக் கூடுதல் விலை தருவதற்கு எங்களிடம் விற்பதற்கோ கூடுதல் விலைபெறுவதற்கோ எதுவுமில்லை.'' இன்னொரு இடத்தில் அறக்காப்பு வீரன் டாக்டரிடம் கேட்கிறுர்: ''நீங்கள் எத்தகையவர்களை இங்கு பொருட்படுத்துகிறீர்கள் என்று தயவு செய்து கூறுங்கள். இதனல் நஷ்டம் வராதவர்கள் யார் என்று கருதுகிறீர்கள்?'' **டாக்டர்:** ''வாங்கியும் விற்றும் வாழும் எல்லோரையும் நான் பொருட்படுத்துகிறேன், காரணம் கூடுதல் விலைக்கு வாங்குவதையே அவர்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்கிறுர்கள். **அறக்காப்பு வீரன்:** ''இவர்களை விட்டால் இதைக் கொண்டு நலனடையும் இன்னொரு வகையினர் யார்?'' **டாக்டர்:** ''பழைய வார விகிதத்தில் சொந்தமாக சாகுபடி செய்ய நிலம் எடுத்துக் கொண்டுள்ள எல்லோரும் நலன் பெறுவர். காரணம் அவர்கள் வாரம் செலுத்துவது பழைய விகிதத்திலும், விற்பனை செய்வது புதிய விகிதத்திலுமாகும், அதாவது நிலத்துக்கு அவர்கள் கொடுக்கும் விலை மலிவானது, ஆனல் அதில் விளையும் பொருட்களை எல்லாம் அவர்கள் அதிக விலைக்கு விற்கிறுர்கள்...'' **அறக்காப்பு வீரன்:** ''இவர்களுக்கு லாபம் கிடைப்பது போலவே, இதனல் கூடுதல் நஷ்ட மடைவது யார்?'' **டாக்டர்:** ''எல்லா உயர் குடிப் பிரபுக்களும் கனவான்களும் தான், திட்டமான வாரம் கொண்டோ உதவிப்

யினர். எனவே, இங்கிலாந்தில் 16ஆம் நூற்றுண்டின் இறுதியில் அந்தக் காலகட்டத்தின் சந்தர்ப்ப சூழல்களைக் கவனித்துப் பார்க்கையில் செல்வந்தர்களான ஒரு முதலாளித் துவச் சாகுபடியாளர் வர்க்கம் இங்கிலாந்தில் உருவாகியதில் வியப்பில்லை.*

பணம் கொண்டோ வாழும் அனைவரும்; சாகுபடி அல்லது வாங்குதல் விற்றல் செயல்களில் ஈடுபடாத எல்லோரும் பாதிக்கப்படுவர்.''

* பிரான்சில், மத்திய காலங்களின் ஆரம்ப பகுதியில் நிலப்பிரபுக்களுக்காகக் கடன் பாக்கிகளை வசூல் செய்து, மேற் பார்வையாளராக இருந்து வந்த régisseur விரைவில் கொடுக் கல் வாங்கலில் (homme d'affaires) ஈடுபட்டவராக மாறி வலுவந்தப் பறிமுதல், ஏமாற்றுதல் மூலம் ஒரு முதலாளி யாக தம்மை வளர்த்துக் கொண்டார். இந்த régisseurs சில சமயம் பிரபுக்குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். உதாரணமாக: ''பெசான்சோனில் கோட்டையை மேற் பார்வை செய்யும் ஜாக் டே தோரே என்ற அறக்காப்பு வீரன் புர்கோன் பிரபுவின் சார்பில் திஜோனில் பொறுப்பு வகிக் கும் தனது புரவலருக்கு மேற்குறிப்பிட்ட கோட்டையிலிருந்து 1359 டிசம்பர் 25 முதல் 1360 டிசம்பர் 28 வரை குத்தகை வசூலித்திருப்பதாக அறிக்கை சமர்ப்பித்தான்.'' (Alexis Monteil. *Traité des Matériaux Manuscrits etc.*, pp. 234, 235). சமுதாய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சிங்கப் பங்கு எவ்வாறு இடைத்தட்டு மனிதனுக்கே கிடைக்கிறது என்பது இங்கு தெளிவாகத் தெரிகிறது. பொருளாதாரத் துறையில் உதாரணமாக, பணம் கொடுக்கல் வாங்கல் செய்வோர் பங்கு மார்க்கெட் சூதாடிகள், வணிகர்கள், கடைக்காரர்கள் சத் தான பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார்கள்; சிவில் சட்ட விஷயங்களில் வழக்குரைஞர் தமது வாடிக்கையாளரைக் கொள்ளையடிக்கிறுர்; அரசியலில் பிரதிநிதி வாக்காளர்களை விட முக்கியமானவர், அமைச்சர் அரசரைவிட முக்கியமான வர்; சமயத்தில் கடவுள் ''இடையீட்டாளரால்'' (mediator) பின்னணிக்குத் தள்ளப்படுகிறுர், இடையீட்டாளரைப் பாதிரிகள் பின்னுல் தள்ளிவிடுகிறுர்கள். இவர்கள்''ஆடுகளுக் கும் நல்ல மேய்ப்பருக்கும்'' இடையிலான தவிர்க்க முடியாத இடைத்தட்டு மனிதர்களாவர். பிரான்சில் இங்கிலாந்தைப் போலவே மாபெரும் பிரபுத்துவ நிலப்பிரதேசங்கள் எண் ணற்ற பல சிறிய துண்டுமனைகளாய்ப் பிரிக்கப்பட்டன. ஆனுல் மக்களுக்கு ஒப்பிட முடியாத அளவுக்கு மிகவும் பாதக மான முறையில் செய்யப்பட்டன. 14ஆம் நூற்றுண்டில் பண்ணைகள் அல்லது வாரக் குடியாண்மைகள் (terriers) தோன்றின. இவற்றின் எண்ணிக்கை இடையருது பெருகி,

## தொழில்துறை மீது விவசாயப் புரட்சி ஏற்படுத்திய செயல் விளைவு. தொழில்துறை மூலதனத்துக்கு உள்நாட்டுச் சந்தை உருவாக்கம்

விவசாயி மக்கள் மீண்டும் மீண்டும் புதிதாக உடைமை பறிமுதல் செய்யப்பட்டதும் வெளியேற்றப்பட்டதும் காரணமாக, கைவினைஞர் சங்கங்களுடன் அறவே தொடர்பில்லாதவர்களும், அவற்றால் எவ்வகையிலும் தடைப்படுத்தப் படாதவர்களுமான திரளான பாட்டாளிகள் நகரத்துத் தொழிற்சாலைகளுக்குக் கிடைத்தனர்; இந்த நல்வாய்ப்பான சூழல் முதியவர் எ. ஆண்டர்சன் (ஜேம்ஸ் ஆண்டர்சன் பெயருடன் குழப்பக் கூடாது) தமது **வாணிக வரலாறு** என்ற நூலில் விதிவசத்தின் நேரடித் தலையீட்டை நம்புமாறு செய்தது. புராதனத் திரட்சி என்ற இந்தக் கூறு பற்றி இன்னும் ஒரு கணம் நின்று யோசிக்க வேண்டும். ஓரிடத்தில் அண்டத்தின் பருப்பொருள் இன்னொரிடத்திலான அதன் அடர்த்திக் குறைவால் திடமுறுவதை ஜாப்ரி செயிண்ட் ஹிலெர் விளக்கியது* போன்று சுதந்திரமான, சுய ஆதரவில் வாழ்ந்த விவசாயிகள் அருகி வந்ததானது தொழில்துறைப் பாட்டாளிகள் பெருகி நெருங்கிச் சேருமாறு செய்தது மட்டுமல்ல. பயிர் செய்வோர் தொகை சிறியதாக இருந்த போதிலும் நிலம் முன் போலவும் அதற்கு மேலதிகமாயும் விளைவைத் தந்தது; நிலச் சொத்துடைமையிலான புரட்சிகர நிலைமைகளைத்

---

100,000ஐ விஞ்சியது. அவை விளை பொருளில் $^1/_{12}$ முதல் $^1/_5$ பங்கு பணமாகவோ தானியமாகவோ வாரம் செலுத்தின. இந்தப் பண்ணைகள் அவற்றின் பிரதேசத்தின் விலைக்கும் பரப்புக்கும் ஏற்ப (இவற்றில் பல மிகச் சில ஏக்கர்களைக் கொண்டவையே) வார நிலம் உள் வார நிலம் என்று நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் இந்தச் சாகுபடியாளர்களுக்கு நிலத்தில் வாழ்ந்திருந்த மக்கள் மீது பலவழிகளில் சட்ட அதிகாரம் இருந்தது; அம்மக்களிடையே நான்கு தரங்கள் இருந்தன. இந்தச் சில்லரை கொடுங்கோலர் கீழ் விவசாயி மக்கள் ஒடுக்கு முறைக்கு ஆளாயினர் என்பது தெரிந்ததே. இன்று நீதிபதிகள் உள்ளிட்டு 4,000 நீதியமைப்புகளே உள்ள பிரான்சில் ஒரு காலத்தில் 1,60,000 நீதிபதிகள் இருந்தார்கள் என்று மாண்டெய் கூறுகிறார்.

* அவரது *Notions de Philosophie Naturelle*, Paris, 1838.

தொடர்ந்து மேம்பட்ட பண்படுத்து முறைகள், மேலதிக மான ஒத்துழைப்பு, உற்பத்தி சாதனங்களின் செறிவு ஆகியவை ஏற்பட்டன; மேலும் விவசாயிக் கூலித் தொழிலாளர்கள் மேலும் முனைப்பான கடின உழைப்பு மேற்கொண்டது மாத்திரமல்ல* அவர்கள் தமக்கெனப் பாடுபட்டு வந்த உற்பத்தித் துறை மேலும் மேலும் சுருங்கி விட்டதும் இதற்குக் காரணமாகும். விவசாயி மக்களில் ஒரு பகுதி விடுவிக்கப் பட்டதோடு, அவர்களது முன்னுள் பிழைப்புச் சாதனங்களும் விடுபட்டு விட்டன. இப்போது அவை மாறத்தக்க மூலதனத்தின் பொருளாயதக் கூறுகளாக உருமாற்றப்பட்டன. உடைமை பறிமுதல் செய்யப்பட்டு அலைவுறுமாறு விடப்பட்ட விவசாயி தனது புதிய எஜமானனுன தொழில்துறை முதலாளியிடமிருந்து அவற்றின் மதிப்பை கூலியின் உருவில் வாங்க வேண்டும். பிழைப்புச் சாதனங்களுக்குப் பொருத்தமானது எதுவோ அது உள்நாட்டு விவசாயத்தைச் சார்ந்து நிற்கும் தொழில் துறையின் மூலப் பொருட்களுக்கும் பொருந்தும். அவை நிரந்தர மூலதனத்தின் கூறுகளாக உருமாற்றப் பட்டன.

இரண்டாம் ஃபிரீட்ரிஹின் காலத்தில் இருந்த வெஸ்ட்ஃபாலிய விவசாயிகளில் சணல் நூற்று வந்தவர்களான ஒரு பகுதியினர் வலுவந்தமாக உடைமை பறிமுதல் செய்யப் பட்டு நிலத்திலிருந்து விரட்டப்பட்டதாகவும், மீதமிருந்த மற்ற பகுதியினர் பெரிய சாகுபடியாளர்களுக்குரிய நாள்-தொழிலாளர்களாக மாற்றப்பட்டதாயும் உதாரணத்திற்காக உத்தேசித்துக் கொள்வோம். அதே சமயம் சணல் நூற்புக்கும் நெசவுக்குமான பெரிய நிறுவனங்கள் தோன்றுகின்றன, இவற்றில் நிலத்திலிருந்து ''விடுவிக்கப்பட்ட'' மனிதர்கள் கூலிக்காக வேலை செய்கிறுர்கள் என வைத்துக் கொள்வோம். சணல் அன்று மேனி அப்படியே காணப்படுகிறது. அதன் ஓர் இழை கூட மாறவில்லை; ஆனுல் அதன் உடலில் ஒரு புதிய சமூக ஆன்மா திடுமென வைக்கப்பட்டுள்ளது. அது இப்போது பட்டறையதிபரின் நிரந்தர மூலதனத்தின் ஒரு பகுதியாகிறது. முன்பு தாமே தமது குடும்பங்களுடன் சேர்ந்து

* இந்த விஷயத்தை சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் வலியுறுத்துகிறுர்.

இதை விளைவித்துச் சில்லரை முறையில் நூற்புச் செய்த சிறு உற்பத்தியாளர்களிடையே இது பங்கிடப்பட்டிருந்தது, இப்போதோ ஒரு முதலாளியின் கையில் செறிந்திருக்கிறது, அவர் தமக்காக நூற்கவும் நெசவு செய்யவும் மற்றவர்களை வேலைக்கமர்த்தியுள்ளார். சணல் நூற்பில் செலவிடப்பட்ட மிகைப்படியான உழைப்பு முன் நாட்களில் பல விவசாயிக் குடும்பங்களுக்கு மிகைப்படியான வருவாயைக் கொண்டு வந்தது அல்லது இரண்டாம் ஃபிரீட்ரிஹ் காலத்தில் பிரஷ்யன் அரச குடும்பத்திற்கான வரியாகப் போய்ச் சேர்ந்தது. ஆனால் இது இப்போது ஒரு சில முதலாளிகளுக்கு லாபமாகத் திரண்டு குவிகிறது. முன் நாட்களில் நாடு முழுவதும் பரவலாகச் சிதறிக் கிடந்த நூற்புக்கதிர்களும் தறிகளும் இப்போது ஒரு சில பெரிய தொழிற் கூடங்களில், தொழிலாளர்கள் மற்றும் மூலப் பொருட்களுடன் சேர்ந்து, நிரப்பப்பட்டுக் கிடக்கின்றன. நூற்பாளர்கள் நெசவாளர்களின் சுதந்திரமான வாழ்க்கைக் குரிய சாதனங்களாக இருந்த இந்த நூற்புக்கதிர்கள், தறிகள் மூலப் பொருள்கள் ஆகியவை அவர்களிடம் உத்தரவு போட்டு, அவர்களிடமிருந்து கூலி கொடுபடாத உழைப்பை உறிஞ்சிப் பெறுவதற்கான சாதனங்களாக உருமாற்றப்பட்டுள்ளன.* பெரிய பட்டறைகளையும் பெரிய பண்ணைகளையும் பார்க்கும் போது அவை பல சிறிய உற்பத்தி மையங்களை ஒன்றுயச் சேர்த்ததால் தோன்றியவை என்பதும், பல சிறிய சுதந்திரமான உற்பத்தியாளர்களை உடைமை பறிமுதல் செய்ததன் மூலம் கட்டப்பட்டவை என்பதும் எவருக்கும் புரிவதில்லை. இருப்பினும் இந்தப் புறத்தோற்றம் நிதானமான பார்வையாளர்களை ஏமாற்றவில்லை. புரட்சியின் சிங்கமான மிராபோவின் காலத்தில் பெரிய பட்டறைகள் manufactures réunies (பட்டறைகளின் கூட்டு அமைப்பு) என்று — நிலங்கள் கூட்டிச் சேர்க்கப்படுவதை

---

* முதலாளி கூறுகிறார்: ''எனக்கு ஊழியம் செய்யும் கவுரவத்தை உங்களுக்கு வழங்க நான் தயார் ஆனால் ஒன்று, உங்களை நெறியாண்மை செய்யும் பொறுப்பை மேற்கொள்வதால் எனக்கேற்படும் சிரமத்துக்கு பிரதிபலனாக உங்களிடம் ஏதெல்லாம் இன்னும் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் என் வசம் ஒப்படைத்து விட வேண்டும்'' (J. J. Rousseau. *Discours sur l'Économie Politique*).

நாம் குறிப்பிடுவது போன்று—அழைக்கப்பட்டு வந்தன. மிராபோ கூறுவதாவது:

''ஒரு நெறியாளரின் கீழ் நூற்றுக் கணக்கான மனிதர்கள் வேலே செய்யும் மாபெரும் பட்டறைகள் மீது நாம் கவனம் செலுத்துகிறோம். இவை பொதுவாக manufactures réunies (ஒன்றிணைந்த பட்டறைகள்) என்று அழைக்கப்படுகின்றன. தனியாகவும் சொந்தப் பொறுப்பிலும் பெருமளவிலான தொழிலாளர்கள் வேலே செய்யும் பட்டறைகள் மிக அரிதாகவே கவனிக்கப்படுகின்றன; அவை மற்ற வற்றிலிருந்து வெகு தொலேவில் இட அமைவு பெற்றுள்ளன. இது மிகவும் பிசகானது, காரணம் இவைதான் தேசிய வளமையின் உண்மையிலேயே முக்கியமான பகுதியாயிருக்கின்றன. பெரிய பட்டறைகள் (ஒன்றிணைந்த பட்டறைகள்) ஒன்றிரண்டு தொழில் முனைவர்களை அதிசயிக்கத்தக்க வகையில் செல்வந்தர்களாக்கலாம் ஆனால் தொழிலாளர்கள் நாட்கூலிக்காரர்களாகவே இருப்பர், கூடுதலாயோ குறைவாகவோ ஊதியம் பெறுவர், நிறுவனத்தின் சாதனையில் அவர்களுக்கு எவ்விதப் பங்கும் இருக்காது. ஒன்றிணைக்கப்படாத பட்டறையில் (manufacture séparée) இதற்கு நேர்மாறாக, யாரும் செல்வந்தராக மாட்டார்கள், ஆனால் பல தொழிலாளர்கள் வசதியாக இருப்பார்கள்; சேமித்துவைப்பவர்களும் சுருசுருப்பானவர்களும் சிறு மூலதனம் திரட்டிவைக்க முடியும், குழந்தைப் பேறு, நோய் நொடி இவற்றுக்கென தமக்கும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் சிறிது மீத்து வைக்க முடியும். சேமிப்பு வைக்கிற சுருசுருப்பான தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்கும், காரணம் அவர்கள் நல்ல நடத்தை, செயலூக்கம் ஆகியவை தமது நிலேமைகளை முக்கியமாயும் மேம்படுத்திக் கொள்வதற்கான சாதனங்கள் என்பதைக் காண்பர், மற்றும் கூலியில் சிறு உயர்வு பெறுவது எதிர்காலத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் உடையதாகாது என்பதையும் இதன் விளேவாக மக்கள் சற்றே நல்ல நிலேயில் வாழ வகை செய்யலாம் அதுவும் இக்காலத்தில் மட்டுமே என்பதையும் காண்பர்... சில தனி நபர்களின் பெரிய தொழிற்கூட நிறுவனங்கள் தொழிலாளர் நலனுக்கு என அன்றாட ஊதியம் தந்து தனிப்பட்ட நபர்களேச் சற்றே வசதியாக இருக்க உதவலாம், ஆனால் அவை என்றுமே அரசுகளின் கவனத்தைக் கவரும் தகுதியுள்ளனவல்ல. பெரும்பாலும் சிறு நிலங்களில் விவசாயத்தையும் இணைத்துள்ள சிறிய தொழிற் கூடங்கள் மட்டுமே சுதந்திரமானவை.''*

* மிராபோ, மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி III, பக்கங்கள் 20-109. தனியான தொழிற் கூடங்கள் ''இணைக்கப்

விவசாயி மக்களில் ஒரு பகுதி உடைமை பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டது, தொழிற் துறை மூலதனத்துக்கு தொழிலாளர்கள் அவர்களது பிழைப்புச் சாதனங்கள், உழைப்பதற்கான கருவிகள் ஆகியவற்றைத் தாராளமாக வழங்க வகை செய்தது, மட்டுமன்றி உள்நாட்டுச் சந்தையையும் அது உருவாக்கியது.

சிறு விவசாயிகளைக் கூலித் தொழிலாளர்களாகவும், அவர்களது பிழைப்புச் சாதனங்களையும் மற்றும் உழைப்புச் சாதனங்களையும் மூலதனத்தின் பொருளாயதக் கூறுகளாகவும் மாற்றிய நிகழ்ச்சிகள் அதே சமயம் மூலதனத்துக்கு ஓர் உள்நாட்டு மார்க்கெட்டையும் உருவாக்கின. முன்நாட்களில் விவசாயிக் குடும்பங்கள் பிழைப்புச் சாதனங்களையும் மூலப் பொருட்களையும் உற்பத்தி செய்தன, அவற்றில் பெரும் பகுதியைத் தாமே பயன்படுத்தின. இந்த மூலப் பொருட்களும் பிழைப்புச் சாதனங்களும் இப்போது பண்டங்களாகி விட்டன; பெரிய சாகுபடியாளர் அவற்றை விற்பனை செய்கிறார்; பட்டறைகளில் தமது மார்க்கெட்டைக் காண்கிறார். நூல், துணி, முரட்டுக் கம்பளி ஆகியவை முன்பு ஒவ்வொரு விவசாயிக் குடும்பத்துக்கும் கிட்டி வந்தன — அவற்றின் கச்சாப் பொருட்கள் அவற்றின் உபயோகத்துக்காகவே நூற்றும் நெசவு செய்யப்பட்டும் வந்தவை—இப்போது அவை பட்டறைத் தொழிற் பொருட்களாக மாற்றப் படுகின்றன, நாட்டுப்புற மாவட்டங்கள் இப்பொருட்களுக்கு மார்க்கெட்டாய் அமைந்துள்ளன. இதுகாறும் பரவலான கைவினைஞர்கள் தமது சிதறலான வாடிக்கையாளர்களாகக் கொண்டிருந்த, சொந்தப் பொறுப்பில் வேலை செய்யும் சிறு உற்பத்தியாளர்கள் இப்போது தொழிற்துறை மூலதனம்* ஏற்பாடு செய்துள்ள பெரிய மார்க்கெட்டில் தாமே ஒருமுகப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு, சுய ஆதரவில் நின்ற விவசாயிகளை

---

பட்டவை''யை விடவும் அதிகச் சிக்கனமானவை உற்பத்தித் திறனுடையவை என்று கருதுகிறார், மற்றும் பிந்தியவை அரசினால் இறக்குமதி செய்யப்பட்ட வெறும் செயற்கையான அமைப்புகளே என்று காண்கிறார்; மாகண்டத்தில் பெரும் பகுதியில் நிலவிய பட்டறைத் தொழிலின் நிலைமையே இதை விளக்கும்.

* ''இதர வேலைகளின் மத்தியில் கிட்டும் இடைவேளைகளில் இருபது பவுண்டு கம்பளி, ஓர் ஆண்டில் ஒரு தொழி

உடைமை பறிமுதல் செய்வதும் அவர்களது பிழைப்புச் சாதனங்களிடமிருந்து அவர்களைப் பிரிப்பதோடும் சேர்ந்து கிராமப்புறத்து குடிசைத் தொழில் அழிக்கப்படுகிறது. பட்டறைத் தொழிலும் விவசாயமும் பரஸ்பரம் பிரிவினையுறும் போக்கு உருவாகிறது. கிராமப்புறத்து குடிசைத் தொழில் அழிக்கப்பட்டால் மட்டுமே ஒரு நாட்டின் உள்நாட்டு மார்க்கெட்டுக்கு முதலாளித்துவ உற்பத்தி முறைக்குத் தேவையான அளவு விரிவும் உறுதியும் கைவரப் பெறும்.

இருப்பினும், பட்டறைத் தொழில் காலகட்டம் என்று சரியாகவே இவ்வாறு அழைக்கப்படுகிற கட்டம் இந்த மாற்றத்தை அடிப்படையாகவும் பூரணமாகவும் நிறைவேற்றுவதில் இன்னும் வெற்றியடையவில்லை. பட்டறைத் தொழில் எனப்படுவதானது தேசிய உற்பத்தித் துறையின் ஒரு பகுதியையே வென்று கைக்கொண்டுள்ளது, இறுதி அடித்தளமாக நகரப்புறத்துக் கைவினைத் தொழில்களையும், கிராமப்புற மாவட்டங்களின் குடிசைத் தொழிலையுமே அது எப்போதும் சார்ந்திருக்கிறது என்பதை நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும். ஏதாவது ஒரு வடிவில், குறிப்பிட்ட பிரிவுகளில், ஒரு சில இடங்களில் இது இவற்றை அழிக்குமானால், வேறு ஓரிடத்தில் இவற்றை மீண்டும் வேண்டியழைக்கிறது, காரணம் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை மூலப் பொருட்களைத் தயார் செய்ய இவை தேவைப்படுகின்றன. எனவே அது சிறிய கிராமவாசிகளின் ஒரு புதிய வர்க்கத்தினை உருவாக்குகிறது, இவர்கள் நிலத்தில் பயிர் செய்வதை ஒரு துணைத் தொழிலாக வைத்துக் கொண்டே தொழில் துறை உழைப்பை முக்கிய

---

லாளியின் குடும்பத்துக்கு உடையாக, குடும்பத்தின் சொந்த உழைப்பினால் ஓசைப்படாமல் மாற்றப்படுகிறது. இது விளம்பரப்படுத்தப்படுவதில்லை. ஆனால் இதையே மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்து, ஆலைக்கு அனுப்பிவைத்து, பிறகு தரகுகாரரிடமும் பிறகு விற்பனையாளரிடமும் அனுப்பும் போது மாபெரும் வாணிக இயக்கமே நடந்து விடுகிறது, இதில் ஈடுபடுத்தப்பட்ட பெயரளவிலான மூலதனம் அதன் மதிப்பை இருபது மடங்காகப் பெருக்கிக் கொள்கிறது... இவ்வாறாக துயர மிக்க ஆலைத் தொழில் மக்கள் தொகையை புல்லுருவிகளான கடைக்காரவர்க்கத்தை, கற்பனையான ஒரு வாணிக, பணம் சார்ந்த மற்றும் நிதி அமைப்பை தொழிலாளி வர்க்கம் ஆதரிக்கும்படி ஏற்பட்டது.'' (David Urquhart, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 120).

பணியாகக் காண்கின்றனர்; உற்பத்தி செய்த பொருட்களை இவர்கள் பட்டறை அதிபர்களுக்கு நேரடியாகவோ அல்லது வியாபாரிகள் மூலமோ விற்பனை செய்கிறார்கள். இது ஆங்கில வரலாற்று மாணவருக்கு முதலில் புதிராகத் தோன்றும் ஒரு புலப்பாட்டின் பிரதான காரணமல்லாவிடினும் அதன் ஒரு காரணமாகும். 15ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியிலிருந்து முதலாளித்துவ சாகுபடிமுறை நாட்டுப்புற மாவட்டங்களுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கிறதெனவும் விவசாயிகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் எழும் புகார்கள் ஒரு சில இடைவேளைகளில் தவிர மற்றபடி தொடர்ந்து இருந்து வருவதையும் இம்மாணவர் காண்கிறார். மறு புறம் இந்த விவசாயிகள் எண்ணிக்கையில் குறைந்த போதிலும் எப்போதும் மோசமான நிலைமைகளின் கீழ் இருந்த போதிலும் மீண்டும் இத்துறைக்குத் திரும்பி வருவதை அவர் எப்போதும் காண்கிறார்.* இதன் பிரதான காரணம்: இங்கிலாந்து ஒரு காலத்தில் பிரதானமாயும் தானியமே விளைத்தது, இன்னொரு காலத்தில் பிரதானமாயும் கால்நடை வளர்ப்பையே மேற்கொண்டது, இவை மாறி மாறி நிகழ்ந்தன, இவற்றோடு விவசாயி தனிப்பட நடத்தும் உற்பத்தியின் அளவு ஏறியும் குறைந்தும் வந்தது. நவீனத் தொழில்துறை மட்டுமே, மற்றும் இறுதியாக முதலாளித்துவ பாணி விவசாயத்தின் நிலையான அடித்தளமான யந்திரங்களின் தரவே, விவசாயி மக்களில் மிகப் பெரும்பாலோரைத் தீவிரமாயும் உடைமை பறிமுதல் செய்து, விவசாயத்துக்கும் கிராமியக் குடிசைத் தொழிலுக்குமிடையான பிரிவினையை முழுமை செய்கிறது; இந்தக் குடிசைத் தொழிலின் வேர்களாக இருக்கும் நூற்பு மற்றும் நெசவை அது கல்லியெறிகிறது**. எனவே இது முதல் தடவையாகத் தொழில்துறை

---

* இதில் கிராம்வெலின் காலம் ஒரு விதிவிலக்காக இருந்தது. குடியரசு நீடித்த வரை எல்லாத் தரத்தவருமான ஆங்கில வெகுஜனங்கள் டியூடர் வமிச மன்னர்களின் கீழ் அவர்கள் வீழ்ச்சியடைந்த இழிந்த நிலையிலிருந்து மீண்டும் உயர்ந்து வந்தார்கள்.

** யந்திரங்கள் புகுத்தப்பட்டதோடும், சரியான பட்டறைத் தொழிலில் இருந்தும், கிராமிய மற்றும் குடிசைத் தொழில்கள் அழிக்கப்பட்டதிலிருந்தும் நவீன கம்பளித்

முதலாளிகளுக்காக உள்நாட்டு மார்க்கெட் முழுவதையும் வென்று பிடிக்கிறது.*

---

தொழில் உதித்தெழுந்துள்ளது என்பதை டக்கெட் அறிந்திருந்தார் (Tuckett, மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி I, பக்கம் 144).''ஏரும் நுகமும் 'கடவுளர் கண்டுபிடித்த புதுமைகள், வீரர்களின் வாழ்க்கைத் தொழில்'; தறியும், கதிரும், நூற்புக் கழியும் மரபில் எவ்வகையிலும் குறைந்த பெருமையுடையனவல்ல. நூற்புக் கழியையும் ஏரையும், குதிரையும் நுகத்தையும் முறித்தால் ஆலைகளும், ஏழை விடுதிகளும், கடனும், நெருக்கடியும், இரு பகைமைத் தேசங்களான, விவசாய தேசமும் வாணிக தேசமும் கிடைக்கும்'' (David Urquhart, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 122). இப்போது இங்கு காரி வருகிறார், இங்கிலாந்து மற்ற நாடுகள் ஒவ்வொன்றையும் வெறும் விவசாய தேசமாக மாற்ற முயல்கிறது, அவற்றின் பட்டறை உற்பத்தியாளராகத் தன்னை வைத்திருக்க முயல்கிறது என்று நியாயமாகவே இங்கிலாந்தினை நோக்கிக் கூக்குரலிடுகிறார். இந்த வழியில் துருக்கி நாசமாக்கப்பட்டது என்று பாவனை செய்கிறார். காரணம் ''நிலவுரிமையாளர்களும் அதில் பிழைப்பு நடத்தியவர்களும் ஏருக்கும் தறிக்கும், சம்மட்டிக்கும் பரம்புக்கும் இடையே இயல்பான நேச அணியை உருவாக்குவதன் மூலம் தம்மைத் தாமே வலுப்படுத்திக் கொள்ள இங்கிலாந்து என்றுமே இடந்தரவில்லை'' (*The Slave Trade*, பக்கம் 125). உர்க்ஹார்ட் துருக்கியின் நாசத்திற்கு முக்கிய காரணமாக இருந்த நபர்களில் ஒருவர் என்பது அவரது கூற்று; அங்கு உர்க்ஹார்ட் இங்கிலாந்தின் நலன் கருதி சுதந்திர வாணிகம் பற்றிப் பிரசாரம் நடத்தினார். இதனிடையில் மிகப் பெரிய ருஷ்ய ஆதரவாளரான காரி பிரிவினை நிகழ்ச்சிப் போக்கை எது துரிதப் படுத்துகிறதோ அதே காப்பு முறையினைக் கொண்டு அதைத் தடை செய்ய விரும்புகிறார் என்பது தான் விசித்திரம்.

* மில், ரோஜர்ஸ், கோல்ட்வின், ஸ்மித், ஃபாசெட் போன்ற பரோபகார ஆங்கிலப் பொருளாதார நிபுணர்களும், ஜான் பிரைட் கூட்டத்தைப் போன்ற மிதவாதப் பட்டறை அதிபர்களும் கடவுள் கெயினிடம் ஆபெலைப் பற்றி விசாரித்தது போன்று, ஆங்கில நிலவுடைமையாளரான உயர்குடி வகுப்பினர்களிடம் நிலம் வைத்திருந்த நமது ஆயிரக்கணக்கான விவசாயிகள் எங்கே? என்று கேட்கிறார்கள். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? அந்த நிலம் வைத்திருந்த விவசாயிகளை நாசம் செய்து தானே. சுதந்திரமான நெசவாளர்கள், நூற்பாளர்கள் மற்றும் கைவினையாளர்கள் எங்கே என்று நீங்கள் மேலும் கேட்பதற்கென்ன?

# தொழில்துறை முதலாளியின் பிறப்பு

தொழில்துறை முதலாளியின் பிறப்பு* சாகுபடியாளர் பிறப்பைப் போன்று இத்தகைய படிப்படியான முறையில் இயங்கிச் செல்லவில்லை. பல சிறிய கைவினைச்சங்க தலைமை யாளர்களும், இன்னும் அதிகமான எண்ணிக்கையில் இருந்த சிறிய கைவினைஞர்கள் அல்லது கூலித் தொழிலாளர்களுங் கூட தம்மைத் தாமே சிறிய முதலாளிகளாக உருமாற்றிக் கொண்டிருந்தார்கள்; மற்றும் கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதை மேலும் தொடர்ந்து விரிவுபடுத்தியும் அதற்கிணையாக மூலதனத்தைத் திரட்டியும் முற்றும் வளர்ச்சியடைந்த முதலாளிகளாகவே உருமாற்றிக் கொண்டார்கள். முதலாளித்துவ உற்பத்தியின் தொடக்க நிலையில் மத்திய காலத்திய நகரங்களின் தொடக்க நிலையில் போன்று பல விஷயங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. நகரங்களுக்குத் தப்பியோடி வந்த பண்ணையடிமைகளில் யார் எஜமான் யார் பணியாள் என்ற பிரச்சினை அவர்கள் தப்பியோடி வந்த தேதி முன்பா பின்பா என்பதையொட்டியே பெரும் பகுதி நிர்ணயிக்கப்பட்டது. இந்த முறையின் நத்தை வேகம், 15 ஆம் நூற்றுண்டின் இறுதியில் மாபெரும் கண்டுபிடிப்புக்களால் உருவாக்கப்பட்ட புது உலக மார்க்கெட்டின் வாணிகத் தேவைகளுடன் எவ்வகையிலும் பொருந்தியுதாக இல்லை. ஆனுல் மத்திய காலங்கள் இரு தனிச்சிறப்புடைய வடிவங்களிலான மூலதனத்தை வழங்கியுள்ளன; இவை ஆக வித்தியாசமான பொருளாதார-சமூக உருவாக்கங்களில் முதிர்ச்சியடைகின்றன, மற்றும் இவை முதலாளித்துவ உற்பத்தி முறையின் சகாப்தத்திற்கு முன்னுல் எதார்த்தமான மூலதனமாக—கடுவட்டியாளர் மூலதனம் மற்றும் வர்த்தகர் மூலதனம் என்று கருதப்பட்டன.

''இன்று சமுதாயத்தின் செல்வம் முழுவதும் முதலில் முதலாளியின் கைகளில் உடைமையாகச் செல்கிறது... அவர்

* இங்கு தொழில்துறை முதலாளிகள் விவசாயத்துறை முதலாளிகளிடமிருந்து வேறுபட்டுள்ளனர். ''பொருளாதார வகை'' என்ற பொருளில் சாகுபடியாளர் பட்டறை அதிபரைப் போலவே ஒரு தொழில்துறை முதலாளியாவார்.

நிலவுடைமையாளருக்கு அவருக்குரிய குத்தகையை, தொழிலாளிக்கு அவரது கூலியை, வரி மற்றும் சமய வரியாக வசூலிப்பவர்களிடம் அவர்களது உரிய பங்கைச் செலுத்துகிறார், மற்றும் உழைப்பின் வருடாந்த உற்பத்திப் பொருளில் ஒரு பெரிய பங்கினை, உண்மையில் ஆகப் பெரிதான பங்கினை தொடர்ச்சியாகப் பெருக்கப்படும் பங்கினைத் தமக்கென வைத்துக் கொள்கிறார். இந்த உடைமைக்கான உரிமையை எந்த ஒரு சட்டமும் அவருக்கு அளிக்காவிடினும், முதலாளி இப்போது சமுதாயச் செல்வமனைத்தின் முதல் உரிமையாளர் என்று கூறலாம்... மூலதனத்தின் மீது வட்டியை வருவாயாக எடுத்துக் கொள்வது மூலம் இந்த மாற்றம் செயல்படுத்தப்பட்டது... எனவே ஐரோப்பாவின் சட்டக்கர்த்தாக்கள் அனைவரும் இதைச் சட்டங்கள் மூலம், கடுவட்டியை எதிர்த்த சட்டங்கள் மூலம், தடை செய்ய முயன்றார்கள் என்றால் அது சற்றேறவிந்தையான செயலே... நாட்டின் செல்வம் அனைத்தின் மீதும் முதலாளிக்கு அதிகாரம் உண்டு என்றால் அது சொத்துரிமையில் ஏற்பட்டுள்ள ஒரு முழுமையான மாற்றமாகும். இது எந்தச் சட்டத்தின் படி அல்லது எந்தச் சட்டத் தொடரின் படி செயல்படுத்தப்பட்டது?''*

புரட்சிகள் சட்டங்களால் செய்யப்படுவதில்லை என்பதை இந்த நூலாசிரியர் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

கடுவட்டி மற்றும் வாணிகம் மூலம் உருவான பண மூலதனம் தொழில்துறை மூலதனமாக மாறுவதை நாட்டுப்புறங்களில் நிலப்பிரபுத்துவ அரசியல் சட்டமுறையும் நகரப்புறங்களில் கைவினைஞர் சங்க அமைப்புகளும் தடை செய்தன.** நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு கலைவுண்டதோடும், நாட்டுப்புற மக்கள் உடைமை பறி முதல் செய்யப்பட்டு அவர்களில் ஒரு பகுதி வெளியேற்றப்பட்டதோடும் இந்தத் தளைகள் மறைந்தன. புதிய பட்டறைகள் கடலோரத் துறைமுகங்களிலும், பழைய நகராட்சிக் கழகங்கள் மற்றும்

---

* *The Natural and Artificial Right of Property Contrasted*, லண்டன், 1832, பக்கங்கள் 98-99. பெயர் அறியாத நூலின் ஆசிரியர்: தி. ஹாட்ஸ்கின்.

** வியாபாரி எவரும் பட்டறை அதிபராக வருவதைத் தடை செய்து சட்டமியற்றக் கோரி 1794 லேயே லீட்ஸ் நகரத்தைச் சேர்ந்த சிறு துணி உற்பத்தியாளர்கள் நாடாளுமன்றத்துக்குத் தூதுக் குழு அனுப்பியிருந்தார்கள் (Dr. Aikin, *Description of the Country from 30 to 40 Miles round Manchester*, London, 1795).

கைவினைஞர் சங்கங்களின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட உள்நாட்டு இடங்களிலும் நிறுவப்பட்டன. எனவே இந்தப் புதிய தொழில் துறையின் இளம் அரங்கத்தை எதிர்த்து இங்கிலாந்தின் corporate towns (கூட்டுநிர்வாக நகரங்கள் கடுமையான போராட்டத்தை நடத்த இதுவே காரணம்.

அமெரிக்காவில் தங்கமும் வெள்ளியும் கண்டுபிடிக்கப் பட்டது, அங்கிருந்த ஆதிகுடிகள் பூண்டோடு அகற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, சுரங்கங்களில் புதையுண்டு போனது, கிழக்கிந்தியத் தீவுகளைப் படையெடுத்துப் பிடித்துச் சூறை யாடத் தொடங்கியது, கருப்புத் தோல் மக்களைப் பிடித்து அடிமைகளாக விற்பனை செய்ய வாணிப வேட்டையாளர் கள் ஆப்பிரிக்காவை மனிதக் கூண்டாக்கியது—இவை எல் லாம் முதலாளித்துவ உற்பத்தி சகாப்தத்தின் பூத்து மலர்ந்த புலர்காலையைக் குறித்தன. இந்தக் காவியபாணி நிகழ்ச்சி கள் புராதனத் திரட்சியின் வேகத்தை அதிகரித்த பிரதான அம்சங்களாக விளங்கின. அவற்றின் அடிச்சுவட்டில் வரு கிறது ஐரோப்பிய நாடுகளின் வாணிகப் போர், உலகமே இதற்கான அரங்கமாயிற்று. ஸ்பெயினிடமிருந்து விடுபட நெதர்லந்து செய்த புரட்சியுடன் இது துவங்குகிறது, இங்கி லாந்தின் ஜாக்கொபின்-எதிர்ப்புப் போரில் பிரம்மாண்ட அளவுக்கு வளர்கிறது, சீனாவை எதிர்த்த அபின் யுத்தங் களில் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

புராதனத் திரட்சியின் வேகத்தை அதிகரித்த கூறுகள் இப்போது கிட்டத்தட்ட கால வரிசைப்படி குறிப்பாக ஸ்பெ யின், போர்ச்சுகல், ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய பல நாடுகளில் பரவியிருந்தன. இங்கிலாந்தில் இவை 17ஆம் நூற்றூண்டின் இறுதியில் காலனிகள், தேசியக்கடன், நவீன வரிவிதிப்பு முறை மற்றும் காப்புச் சலுகை அமைப்பு ஆகியவற்றைத் தழுவிய ஒரு முறையான இணைப்பாக வந்து சேர்ந்தன. இந்த முறைகள் ஓரளவுக்கு மிருகத்தனமான பலப்பிரயோகத்தைச் சார்ந்திருக்கின்றன, இதற்கு உதா ரணம், காலனியாதிக்க அமைப்பு. ஆனல் அவை, வெப்ப மூடு தோட்ட மாதிரியில், நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றும் நிகழ்ச்சி முறையை அவசரப்படுத்தவும், இந்த மாற்றத்திற்கான கால அளவைச் சுருக்கவும் சமுதாயத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட

ஸ்தாபன சக்தியான அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன் படுத்துகின்றன. பலப்பிரயோகம் என்பது புதிய சமுதாய அமைப்பைக் கருவில் கொண்டுள்ள பழைய சமுதாய அமைப்பு ஒவ்வொன்றுக்குமான மருத்து வச்சியாகும். அது தானே ஒரு பொருளாதார சக்தியாகும்.

கிறித்தவ காலனி முறை குறித்து கிறித்தவம் பற்றிய விசேஷ ஆராய்ச்சிகள் புரிந்துள்ள ஹௌவிட் கூறுவதாவது:

''கிறித்தவ இனம் என்று அழைக்கப்படுவோர் உலகின் எல்லாப் பிராந்தியங்களிலும் தம்மால் கீழடக்க முடிந்த எல்லா மக்களினங்கள் மீதும் புரிந்துள்ள காட்டுமிராண்டிச் செயல்கள் மற்றும் வெறித்தனமான அட்டூழியங்களுக்கு நிகராக வேறு எந்த இனத்தாலும் அது எவ்வளவு குரூரமான, எவ்வளவு படிப்பில்லாத, இரக்கம் வெட்கம் ஆகியவற்றில் நெறிகெட்டதாக இருந்த போதிலும் உலகில் ஒரு காலத்திலும் செய்யப்படவில்லை.''*

ஹாலந்தின் காலனி ஆட்சி நிர்வாகத்தின் வரலாறு—17ஆம் நூற்றுண்டில் ஹாலந்தே தலைமை முதலாளித்துவ தேசமாக இருந்தது—''வஞ்சனை, லஞ்சம், படுகொலை மற்றும் இழிதகைமையின் மிகவும் அசாதாரணமான உறவுகளின் வரலாருக இருந்தது.''** ஜாவாவுக்கு அடிமைகளைப் பெறுவதற்காக அவர்கள் செலிபிஸ் தீவில் வாழ்ந்த மனிதர்களைத் திருடிச் செல்லும் முறையைக் கையாண்டதை விட அவர்

---

* William Howitt, *Colonization and Christianity. A Popular History of the Treatment of the Natives by the Europeans in all their Colonies*, London, 1838, p. 9. அடிமைகள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதற்கு சார்ல் கோம்தின் நல்ல தொகுப்பு உள்ளது. Charles Comte, *Traité de la Législation*, zème éd., Bruxelles, 1837. இந்த விஷயத்தை விவரமாகப் படித்தாராய்ந்தால் தான் முடிந்த இடத்தில் எல்லாம் முதலாளி வர்க்கம் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி தன்னைத் தானேயும், தொழிலாளிகளையும் எந்த நிலைக்கு ஆளாக்குகிறது என்பதையும் தனது சொந்த உருவுக்கு ஏற்ப உலகத்தை வடிவமைத்துக் கொள்ள என்ன செய்கிறது—என்பதையும் காணலாம்.

** Thomas Stamford Raffles, late Lieut.-Gov. of that Island. *The History of Java*, London, 1817.

களது தனி இயல்பைக் காட்டிய செயல் வேறு எதுவுமில்லை. இந்த நோக்கத்துக்காக மனிதர்களைத் திருடுவோர் பயிற்றுவிக்கப்பட்டார்கள். திருடுபவர், துவிபாஷி, விற்பனையாளர் ஆகியோரே இந்த வாணிகத்தில் பிரதான கையாட்கள், உள்நாட்டு மன்னர்களே பிரதான விற்பனையாளர்கள். திருடிச் செல்லப்பட்ட இளைஞர் அடிமைக் கப்பல்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான வயது முதிர்ச்சியடையும் வரையில் செலிபிசிலிருந்த இரகசியச் சிறைகளில் அடைக்கப்பட்டுக் கிடந்தனர். அதிகார பூர்வமான ஓர் அறிக்கை கூறுவதாவது:

''உதாரணமாக மகாசார் என்னும் இந்த ஒரு நகரம் முழுதிலும் இரகசியச் சிறைகள் நிரம்பிக் கிடக்கின்றன. ஒன்றை விட ஒன்று மிகவும் கோரமாகக் காணப்படும்; அவற்றில் துரதிருஷ்டசாலிகளான நபர்கள், பேராசை, கொடுங்கோன்மைக்குப் பலியானவர்கள் விலங்குகள் பூட்டப்பட்டு நெருக்கமாக அடைபட்டுக் கிடக்கிறார்கள்; தமது குடும்பங்களிலிருந்து பலாத்காரமாகப் பிய்த்திழுக்கப்பட்டிருக்கிறார்கள்.''

மலாக்காவை அடைவதற்காக டச்சுக்காரர்கள் போர்ச்சுகீசிய கவர்னரை லஞ்ச மூலம் வசப்படுத்தினார்கள். அவர் அவர்களை 1641ல் இந்த நகரத்துக்குள் வர அனுமதித்தார். துரோகத்துக்கு விலையாக அவர் கேட்டிருந்த 21,875 பவுனைக் கொடுக்காமல் ''தவிர்ப்பதற்காக'' அவர்கள் அவரது வீட்டுக்குள் உடனடி விரைந்து சென்று அவரைக் கொலை செய்தார்கள். அவர்கள் கால்வைத்த இடமெல்லாம் நாசமும், மக்களைக் கொன்றழித்தலும் தொடர்ந்தன. ஜாவாவின் மாகாணங்களில் ஒன்றான பன்யுவாங்கியில் 1750ல் 80,000 மக்கள் இருந்தார்கள், 1811ல் 8,000 பேரே இருந்தனர். பிடித்தமான வாணிகம்!

ஆங்கிலேயர்களின் கிழக்கு இந்தியக் கம்பெனி[10] கிழக்கு இந்தியாவில் அரசியல் ஆட்சி நடத்தியதோடு, தேயிலை வர்த்தகத்திலும், பொதுவாகச் சீனவுடனான வர்த்தகத்திலும், ஐரோப்பாவிலிருந்து பொருட்களைக் கொண்டு வருவதிலும், ஐரோப்பாவுக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதிலுமான போக்குவரத்திலும் தனி ஏகபோகம் பெற்றிருந்தது. ஆனால் இந்தியாவின் கரையோர வர்த்தகம், மற்றும்

தீவுகளுக்கிடையிலான வர்த்தகம், அதோடு இந்தியாவின் உள்நாட்டு வர்த்தகம் இந்தக் கம்பெனியின் உயர் அதிகாரிகளின் ஏகபோகமாக இருந்தது. உப்பு, அபின், வெற்றிலை மற்றும் இதர பண்டங்களிலான ஏகபோக உரிமைகள் வற்றாத செல்வ ஊற்றுகளாக விளங்கின. இந்த அதிகாரிகள் தாமே விலைகளை நிர்ணயித்து துரதிருஷ்ட இந்தியர்களை இஷ்டப்படி சூறையாடினார்கள். இந்தத் தனியார் வாணிக நடவடிக்கையில் கவர்னர் ஜெனரலும் பங்கெடுத்தார். அவருக்கு வேண்டப்பட்டவர்கள் கன்ட்ராக்டுகளைப் பெற்றார்கள், அவற்றின் நிபந்தனைகளின் கீழ் இரசவாதிகளைவிடக் கெட்டிக்காரர்களாக இருந்த இவர்கள் ஒன்றுமில்லாமலே தங்கம் சம்பாதித்தார்கள். ஒரே நாளில் முளைக்கும் காளான்களைப் போன்று மாபெரும் சொத்துக்கள் தோன்றின; ஒரு ஷில்லிங்குகூட முன்பணமாக வைக்காமல் புராதனத் திரட்சி தொடர்ந்தது. வாரன் ஹாஸ்டிங்ஸ் வழக்கில் இத்தகைய சம்பவங்கள் மொய்த்துக் கிடக்கின்றன. இதோ ஓர் உதாரணம்: அபின் தயாரிக்கும் மாவட்டத்திலிருந்து மிகவும் தொலைவிலான இந்தியாவின் பகுதி ஒன்றுக்கு அரசுப் பணி மேற்கொண்டு சென்ற சலிவன் என்பவருக்கு, அவர் புறப்படும் தருணத்தில், அபினுக்கான ஒரு கன்ட்ராக்டு கொடுக்கப்பட்டது. சலிவன் தனது கன்ட்ராக்டை பின் என்பவருக்கு 40,000 பவுனுக்கு விற்றார், அதை பின் அதே நாளில் 60,000 பவுனுக்கு விற்றார். இறுதியாக இதை வாங்கிக் கன்ட்ராக்டை நிறைவேற்றிய நபர் தமக்கு அமோகமான லாபம் கிட்டியதாகக் கூறினார். கம்பெனியும் அதன் அதிகாரிகளும் 1757க்கும் 1766க்குமிடையே இந்தியர்களிடமிருந்து பரிசுகளாக 60,00,000 பவுன் பெற்றதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பட்டியலில் தகவல் தரப்பட்டுள்ளது. 1769க்கும் 1770க்குமிடையில் ஆங்கிலேயர் அரிசி முழுவதையும் வாங்கி வைத்து நம்பமுடியாத பெரும் அநியாய விலைக்கன்றி மற்றபடி விற்பனை செய்ய மறுத்தது மூலம் ஒரு பஞ்சத்தை உற்பத்தி செய்தார்கள்.*

* 1866ஆம் ஆண்டில் ஒரிசா மாகாணத்தில் மட்டுமே பத்து லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் பட்டினியால் செத்தார்கள். இருந்த போதிலும் பட்டினி கிடக்கும்

ஏற்றுமதி வர்த்தகமே கதி என்ருகி விட்ட மேற்கிந்தியத் தீவுகள் போன்ற தோட்டப்பயிர்-காலனிகளிலும், மக்கள் தொகை பெருத்த,செல்வமிக்க மெக்சிகோ, இந்தியா போன்ற சூறையாடப்பட்ட நாடுகளிலும் ஆதிக் குடிகள் இயல்பாகவே மிகவும் பயங்கரமாக நடத்தப்பட்டார்கள். ஆனுல் காலனி கள் என்று சரியாகவே அழைக்கப்பட்ட இடங்களிலும் புரா தனத் திரட்சியின் கிறித்தவத் தன்மை எவ்வித மாற்றமும் அடையவில்லை. புரோட்டஸ்டென்ட் சமயத்தின் இந்த நிதானமான உயர்திற அறிஞர்கள், நியூ இங்கிலாந்தின் கடுந் தூய்மை சீர்திருத்தவாதிகள (the Puritans), 1703ல் தமது சட்ட மன்றத்து ஆணைகள் மூலம் ஒவ்வொரு செவ்விந்தியக் குடுமித் தோலுக்கும் பிடித்துக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு செவ் விந்தியனுக்கும் 40 பவுன் விலை நிர்ணயித்திருந்தார்கள்: 1720ல் ஒவ்வொரு குடுமித்தோலுக்கும் 100 பவுன் விலை யாக நிர்ணயிக்கப்பட்டது; மசாச்சுசெட் வளைகுடா பிரதேசத் தில் ஒரு குலமரபினை கலகக்காரர்கள் என்று பிரகடனம் செய்த பிறகு நிர்ணயிக்கப்பட்ட விலைகள் பின்வருமாறு: 12 வயதும் அதற்கு அதிகமான ஆணின் குடுமித்தோல் விலை 100 பவுன் (புதிய செலாவணி), ஆண் கைதியின் விலை 105 பவுன், பெண் கைதி குழந்தைக் கைதி 55 பவுன், பெண்கள் மற்றும் குழந்தைகளின் குடுமித்தோலுக்கு விலை 50 பவுன். சில பத்தாண்டுகளுக்குப் பிறகு, காலனி அமைப்பு, அமெரிக் காவில் குடியேறிய பக்திமான்களான மூத்த யாத்திரிகர்களது பின்சந்ததிகள் மீது பழிவாங்கியது; அவர்கள் இதற்கிடை யில் ராஜத்துவேஷிகளாகி விட்டனர். ஆங்கிலேயர் தூண்டு தலின் பேரிலும் ஆங்கிலேயரிடமிருந்து பணம் வாங்கியும் செவ்விந்தியர் தம் கோடரிகளுக்கு அவர்களை இரையாக் கினர். பிரிட்டிஷ் நாடாளுமன்றம் வேட்டைநாயும் குடுமித் தோலை உரிப்பதும் ''தனது கரங்களில் கடவுளும் இயற்கை யும் வழங்கிய சாதனங்கள்'' என்று பிரகடனப்படுத்தியது.

காலனி அமைப்பு, வெப்ப மூடுதோட்டம் போன்று, வாணிகத்தையும் கப்பல் போக்கு வரத்தையும் கனியவைத்

---

மக்களுக்கு வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களை மிகை விலைக்கு விற்பனை செய்து இந்தியக் கஜானுவைச் செழுமைப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன.

தது. லூதரின் ''ஏகபோக சங்கங்கள்'' மூலதனக் குவிதலுக்கு மிகவும் வலிமை வாய்ந்த நெம்புகோல்களாக இருந்தன. காலனிகள் புது வளர்ச்சி பெற்ற பட்டறைகளின் பண்டங்களுக்குக் சந்தையையும்; இச்சந்தையின் ஏகபோக மூலம் மேலும் அதிகரித்த திரட்சிக்கும் வகை செய்தன. ஐரோப்பாவுக்கு வெளியே பகிரங்கச் சூறை, அடிமைப்படுத்தல் மற்றும் கொலை மூலம் கவர்ந்து பெறப்பட்ட செல்வங்கள் தாய் நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மூலதனமாக மாற்றப்பட்டன. காலனி அமைப்பை முழுமையாக வளர்த்திருந்த ஹாலந்து ஏற்கெனவே 1648ல் அதன் வாணிகப் பெருமையின் உச்சியில் நின்றது.

அது, ''கிழக்கிந்திய வர்த்தகத்தையும், ஐரோப்பாவின் தென் மேற்குக்கும் வட கிழக்குக்கும் இடையிலான வாணிகத்தையும் கிட்டத்தட்ட முழுமையாகத் தன்னிடம் வைத்திருந்தது. இதன் மீன்பிடித் துறை, கப்பற்துறை, பட்டறை உற்பத்தி ஆகியவை வேறு எந்த நாட்டிலும் இருந்த அவற்றைவிட விஞ்சியதாக இருந்தன. இந்தக் குடியரசின் ஒட்டுமொத்த மூலதனம் ஐரோப்பாவின் இதர பகுதிகள் எல்லாம் சேர்ந்து வைத்திருந்ததைக் காட்டிலும் ஒருவேளை அதிக முக்கியமானதாகும்.''

1648க்குள் ஐரோப்பாவின் இதர பகுதிகள் அனைத்திலுமான மக்களைக் காட்டிலும் ஹாலந்து மக்கள் அதிகக் கொடுமையாக ஒடுக்கப்பட்டார்கள், மிகையாக வேலை வாங்கப்பட்டார்கள், மேலும் அதிக ஏழைகளானார்கள் என்பதை இதோடு சேர்க்க மறந்து விடுகிறார் குலிஹ்.

இன்று தொழில்துறையில் தனி முதல் ஆதிக்கம் என்றால் வர்த்தகத்தில் தனி முதல் ஆதிக்கம் என்று பொருளாகும். மறுபுறம் பட்டறைத் தொழில் என்று சரியாகவே அழைக்கப்படும் காலகட்டத்தில் வர்த்தகத் தனி முதல் ஆதிக்கமே தொழில்துறைக்கு உயர் முக்கியத்துவத்தைத் தருகிறது. அந்தக் காலத்தில் காலனி அமைப்பு வகித்த அதி முக்கியமான பாத்திரத்தை இது குறிக்கிறது. ஐரோப்பாவின் பழைய கடவுள்களுடன் அக்கம் பக்கமாக வழிபாட்டு மேடையில் நின்றிருந்த ''இந்த விசித்திரமான கடவுள்'' அரியதோர் நாளில் அவர்களை எல்லாம் தள்ளி உதைத்து விரட்டி ஓட்டி

விட்டார். உபரி மதிப்பை உருவாக்குவதே மனித குலத்தின் ஏக லட்சியமும் முடிவும் என்று பிரகடனம் செய்யப்பட்டது.

பொதுக் கடன் அமைப்பு அதாவது தேசியக் கடன்களின் முறை பட்டறைத் தொழில் காலகட்டத்தின் போது பொதுவாக ஐரோப்பாமுழுதிலும் வியாபித்திருந்தது, இதன் தோற்றத்தை மிகவும் முன்பாகவே, மத்திய காலங்களிலேயே நாம் ஜினேவா மற்றும் வெனிஸ் நகரங்களில் காண முடிந்தது. காலனி அமைப்பும் அதனுடன் சேர்ந்த கடல் வாணிகம் மற்றும் வர்த்தகப் போர்களும் இதை வளர்க்கும் கேந்திரங்களாக உதவின. இவ்வாருக இது முதலில் ஹாலந்தில் வேரூன்றியது. தேசியக் கடன்கள் அதாவது அரசாங்கத்தின்—அதன் வடிவம் எதேச்சாதிகார, அரசியல் சட்ட அல்லது குடியரசு அமைப்பு கொண்ட எதுவாக இருப்பினும் சரி—பராதீனம் தனது முத்திரையைக் கொண்டு முதலாளித்துவ சகாப்தத்தைக் குறித்தது. இன்றைய மக்களின் கூட்டு உடைமைகளுக்குள் உண்மையில் இடம் பெறும் தேசியச் செல்வத்தின் ஒரே பகுதி அவர்களது தேசியக் கடனாகும்.* எனவே இதன் அவசியப் பின்விளைவாக, ஒரு நாடு எத்துணை ஆழமாகக் கடனில் இருக்கிறதோ அந்தளவுக்கு அதிகச் செல்வந்த நாடாகிறது என்ற நவீன போதனை எழுந்தது. பொதுக் கடன் மூலதனத்தின் நம்பிக்கைக் கோட்பாடாகி விடுகிறது. தேசியக் கடன் திரட்டல் பெருகுந்தோறும், தேசியக் கடன்மீதான நம்பிக்கையின்மை பரிசுத்த ஆவிக்கு எதிரான தெய்வநிந்தனையின் இடத்தைப் பெறுகிறது, இது மன்னிக்க முடியாதது.

தேசியக் கடன் புராதனத் திரட்சியின் ஆக வலிமை வாய்ந்த நெம்புகோல்களில் ஒன்ருக ஆகிவிடுகிறது. மந்திரக் கோலால் தட்டுண்டது போன்று இது வறட்டுப் பணத்திற்கு உற்பத்தி செய்யும் சக்தியை வழங்கி தொழில் துறை அல்லது கடுவட்டித் தொழிலில் இது ஈடுபடுத்தப்படுவதில் பிரிக்க வொண்ணுத வகையில் நேரக் கூடியதான தொந்தரவுகள் மற்றும் அபாயங்களுக்குத் தன்னைத் தானே இடர்ப்படுத்திக் கொள்ளும் அவசியம் இல்லாமலே அதை மூலதனமாக

* இங்கிலாந்தில் எல்லாப் பொது அமைப்புகளும் ''மன்னருக்குரியவை'' என்று பெயரிடப்படுவதாக விலியம் காபெட் கூறுகிருர், இதனை ஈடு செய்யும் முறையில் ''தேசியக்'' கடன் இருக்கவே செய்கிறது.

மாற்றுகிறது. அரசாங்கக் கடன் திரட்டுவோர் உண்மையில் எதையும் கையிலிருந்து கொடுத்து விடுவதில்லை, ஏனெனில் கடனாகத் தரப்பட்ட தொகை எளிதில் மாற்றத்தக்கதான பொதுக் கடன் பத்திரங்களாக உருமாற்றப்படுகின்றது, இத் தொகை இவர்களது கரங்களில் ரொக்கப் பணம் போன்று தொடர்ந்து செயல்படுகிறது. ஆனால், ஆண்டு தோறும் வட்டி பெறும் சோம்பேறி வர்க்கம் இவ்வாறு சிருஷ்டிக்கப்படுகிறது மற்றும் அரசுக்கும் நாட்டுக்குமிடையிலான இடைத்தட்டுக் காரர்களான பணம் கொடுக்கல் வாங்கல் செய்வோர் நொடி யில் குபேரர்களாகி விடுகின்றனர் என்பது தவிர—ஒவ்வொரு தேசியக் கடனின் கணிசமான பகுதியும் வரி வசூலிக்கும் இடைத்தட்டுக்காரரர், வர்த்தகர்கள், தனிப்பட்ட பட்டறைய திபர்களுக்கு வானத்திலிருந்து விழுந்த மூலதனம் போலச் சேவை புரிகிறது என்பது தவிர—இதற்கும் மேலதிகமாக தேசியக் கடன்தொகையானது கூட்டுப் பங்கு நிறுவனங்கள் உதயமாவதற்கும், எல்லாவிதமான பேர முயற்சிகளுக்கும், செலாவணி பங்கு வாணிகங்களுக்கும், சுருங்கக் கூறின் பங்கு மார்க்கெட் சூதாட்டம் மற்றும் நவீன வங்கி ஆதிக்கத்துக் கும் வகை செய்கிறது.

அவை தோன்றிய கட்டத்தில் தேசியப் பட்டப் பெயர் களைச் சூட்டிக் கொண்ட இந்தப் பெரிய வங்கிகள் தனிப் பட்ட வர்த்தகச் சூதாடிகளின் சங்கங்களாகவே இருந்தன; அவர்கள் அரசுக்கு ஆதரவாக நின்றார்கள், தாம் அடைந்த தனிச் சலுகைகள் காரணமாக அரசாங்கத்துக்குப் பணம் கொடுக்கும் நிலையில் இருந்தார்கள். எனவே தேசியக் கடனின் திரட்சிக்கு உறுதியான அளவுகோல், இந்த வங்கிகளின் பங்கு களின் தொடர்ச்சியான அதிகரிப்பே. 1694ல் இங்கிலாந்து வங்கி நிறுவப்பட்டதோடு அவை தமது முழு வளர்ச்சியை எட்டின. இங்கிலாந்து வங்கி அரசுக்கு 8சதவிகித வட்டிக்குப் பணம் கடனாக வழங்கியதோடு தன் பணியைத் துவங்கியது; அதே சமயம் இதற்கு நாடாளுமன்றம் அதே மூலதனத் திலிருந்து பணம் அடித்து அதையே மறுபடியும் மக்க ளுக்கு பாங்கு நோட்டுகள் வடிவில் கடன் கொடுப்பதற்கு அதிகாரத்தை வழங்கியது. இந்த நோட்டுக்களைப் பயன் படுத்தி உண்டியல்களுக்குப் பணம் கொடுக்கவும், பண்டங்க ளுக்கு முன்பணம் தரவும், அரிய உலோகங்களை வாங்கவும்

இந்த வங்கி அனுமதிக்கப்பட்டது. விரைவிலேயே வங்கி தானு கவே உருவாக்கிய இந்த நோட்டுக்கள் இங்கிலாந்து வங்கி அரசாங்கத்துக்கு வழங்கிய கடனுக்கும், அரசின் கணக்கில் கொடுபட்ட தொகைக்கும் பொதுக் கடனுக்குச் செலுத்திய வட்டிக்கும் பயன்படுத்தப்பட்ட முத்திரை நாணயமாயிற்று. இந்த வங்கி ஒரு கையால் கொடுத்து அதைவிட அதிகமாக இன்னொரு கையால் வாங்கிக் கொண்டது என்பது மட்டும் போதாமல், அவ்வாறு வாங்கும் போதுங்கூட முன் பணமாகத் தரப்பட்ட கடைசி ஷில்லிங் வரையில் நாட்டுக்கு நிரந்தரமான கடன்வழங்கும் நிறுவனமாக அது நீடித்தது. படிப்படியாக இது தவிர்க்க முடியாத வகையில் நாட்டின் உலோகச் சேமத்தின் ஏனமாகவும் எல்லா வாணிகக் கடன் களின் ஈர்ப்பு மையமாகவும் ஆகியது. இந்த வங்கி ஆதிக்கக் குழு, பணம் கொடுக்கல் வாங்கல் செய்வோர், வட்டிவாங்கி சுகஜீவனம் நடத்துவோர், இடைத்தரகர்கள், பங்குலாப வேட்டைக்காரர்கள் ஆகியவர்களின் கூட்டம் திடீரென எழுந்ததால் அவர்களது சம காலத்தவர்கள் மீது என்ன விளைவு ஏற்பட்டது என்பதை அந்தக் காலத்திய நூல்கள், உதாரணமாக பாலிங்பிரோக்கின் நூல்கள் நிரூபித்துக் காட்டின.*

தேசியக் கடனுடன் கூடவே ஒரு சர்வதேசக் கடன்வசதி அமைப்பும் உதித்தது, இது பெரும்பாலும் இந்த அல்லது அந்த மக்களின் புராதனத் திரட்சியின் மூலாதாரங்களில் ஒன்றை அடிக்கடி மறைத்துவைக்கிறது. இவ்வாறாக வெனி சின் திருட்டு முறையின் நீசத்தனங்கள் ஹாலந்தின் மூலதனச் செல்வத்தின் இரகசிய அடிப்படைகளில் ஒன்றாக இருந்தது. ஹாலந்துக்கு வெனிஸ், தனது நசிவு காலத்தில் பெருந் தொகையான பணம் கடனாகத் தந்திருந்தது. ஹாலந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நிலவிய உறவுகளும் இத்தகைய வையே. 18ஆம் நூற்றாண்டின் துவக்கத்துக்குள்ளேயே டச்சுப் பட்டறைத் தொழில்களை இங்கிலாந்து பெருமளவு

* ''தார்த்தாரியர்கள் இன்று மீண்டும் ஐரோப்பாவைப் படையெடுத்துப் பிடிக்கும் பட்சத்தில் நம்மிடையில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்வோரின் பங்கு என்ன என்பதை அவர்களுக்கு விளக்குவது மிகவும் கடினமாகும்'' (Montesquieu, *Exprit des loix*, éd. Londres, 1769 t. 4, p. 33).

விஞ்சி விட்டது. ஹாலந்து வாணிகத்திலும் தொழில் துறையிலும் மேம்பட்ட ஆற்றல் கொண்ட தேசமாக இருந்த நிலை போய்விட்டது. எனவே 1701 முதல் 1776 வரையில் அதன் பிரதான அலுவல்களில் ஒன்று, அதன் மாபெரும் போட்டி நாடான இங்கிலாந்துக்கு மிகப்பெரும் தொகைகளிலான மூலதனத்தைக் கடனாக வழங்குவது என்பதாகவே இருந்தது. இதே காரியம் தான் இன்று இங்கிலாந்துக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் இடையே நடைபெற்று வருகிறது. எங்கிருந்து பிறந்தது என்பதற்கு எவ்வித அத்தாட்சியும் இன்றி இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோற்றமளிக்கும் மூல தனத்தில் பெரும் பகுதி நேற்று இங்கிலாந்தில் குழந்தைகளின் குருதியிலிருந்து எடுத்த மூலதனமாக இருந்ததேயாகும்.

தேசியக் கடன் பொது வருவாயின் ஆதரவு பெறுவதாலும்—இந்த வருவாயிலிருந்து வட்டித் தொகை ஆகியவற்றின் கொடுப்பல்களை ஆண்டுதோறும் செலுத்த வேண்டியிருப்பதாலும்—நவீன வரிவிதிப்பு முறை தேசியக் கடன்கள் அமைப்புக்கு இன்றியமையாத நிரப்புக் கூறாக இருந்தது. இந்தக் கடன் திரட்டல், வரிசெலுத்துவோர் உடனடியாக எண்ணிப்பார்க்க முடியாத நிலையில் அரசு அசாதாரணமான செலவினங்களைச் சமாளிக்க உதவுகிறது, ஆனால் இதன் பின் விளைவாக வரிகள் உயர்த்தப்படுவது அவசியமாகிறது. மறுபுறம் ஒன்றுக்குப்பின் ஒன்றாகப் பெற்ற கடன்கள் திரட்சியடைவது காரணமாக வரிகள் அதிகரிக்கப்படுவது, புதிய அசாதாரணச் செலவுகளுக்காக புதிய கடன்களை நாடும்படி அரசை எப்போதும் கட்டாயப்படுத்துகிறது. ஆக அவசியமான பிழைப்புச் சாதனங்கள் மீது வரி போடுவதை (இதன் மூலம் அவற்றின் விலைகளை அதிகரிப்பதை) சுழலச்சாகக் கொண்ட நவீன வரிவருவாய் அமைப்பு தனக்குள் சுயவளர்ச்சியின் கரு மூலங்களை உடையதாய் இருக்கிறது. அமித-வரிவிதிப்பு தற்செயலானதல்ல, மாறாக அது ஒரு கோட்பாடாகும். எனவே இந்த முறை முதன் முதலாகத் துவக்கி வைக்கப்பட்ட ஹாலந்தில் மாபெரும் தேசபக்தரான டிவிட் என்பவர் தமது Maxims[11] இதுவே கூலித் தொழிலாளியை அடக்க ஒடுக்கமாய், சிக்கனமாய், சுருசுருப்பாய் இருக்கும்படி செய்யவும் மற்றும் அவன் மீது மிகையான உழைப்பைச் சுமத்தவுமான ஆகச் சிறந்த முறை என்று புகழ்மாலை

பாடினார். கூலித் தொழிலாளர்கள் மீது இம்முறை செலுத்திய நாசகரச் செல்வாக்கை விடவும் நமக்கு அதிக அக்கறைக் குரியதாக இருப்பது இதன் விளைவாக விவசாயிகள், கைவினைஞர்கள், சுருங்கக் கூறின் கீழ் நிலை நடுத்தர வர்க்கத்தின அனைவரின் உடைமைகளும் பலவந்தமாகப் பறிமுதல் செய்யப்பட்டதேயாகும். இதைக் குறித்து முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களிடையில் கூட இரண்டு வெவ்வேறு கருத்துக்களில்லை. இதன் உடைமை பறிமுதல் திறன் இதன் அங்கப்பகுதியாக அமைந்துள்ள காப்பு முறை காரணமாக மேலும் அதிகரித்தது.

செல்வத்தை மூலதனமாக மாற்றுவதிலும், வெகு ஜனங்களின் உடைமையைப் பறிமுதல் செய்வதிலும் இந்தப் பொதுக் கடனும் அதோடு இசைந்த வரிவருவாய் அமைப்பும் வகிக்கும் மாபெரும் பங்கினைக் கண்டு கோபட், டபிள்டே மற்றும் இதர எழுத்தாளர்கள், இன்றைய மக்களின் அவல நிலைக்கு அடிப்படைக் காரணம் இதுவே என்ற தவறான முடிவுக்கு வந்துள்ளனர்.

காப்பு முறை என்பது, பட்டறையதிபர்களை உற்பத்தி செய்வதற்கும், சுதந்திரமான தொழிலாளர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கும், உற்பத்திக்கும் பிழைப்புக்குமான தேசிய சாதனங்களை மூலதனமாக மாற்றுவதற்கும், மத்திய கால உற்பத்தி முறையிலிருந்து நவீன உற்பத்தி முறைக்கு மாறிச் செல்லும் கட்டத்தைப் பலவந்தமாகச் சுருக்குவதற்குமான ஒரு செயற்கையான சாதனமாகும். இந்தப் புதுப்புனைவின் உரிமைக் காப்பு குறித்து ஐரோப்பிய நாடுகள் ஒன்றையொன்று பிய்த்துப் பிடுங்கிக் கொண்டன; உபரி மதிப்பைப் பெறுவோரின் சேவையில் இறங்கியவுடனேயே, இந்த நோக்கத்தை நாடித் தமது சொந்த மக்களையே —காப்பு வரிகள் மூலம் மறைமுகமாயும் ஏற்றுமதி வரிகள் மூலம் நேரடியாயும் சூறையாடுவதோடு அவை நிற்கவில்லை. அவை தமது சார்பு நாடுகளில் எல்லாத் தொழில்களையும் வலுவந்தமாக வேரோடு பறித்தெறிந்தன. உதாரணம்: இங்கிலாந்து அயர்லந்தின் கம்பளி உற்பத்தித் தொழிலை அழித்தது. ஐரோப்பா கண்டத்தில் கோல்பர்டின் உதாரணத்தைப் பின்பற்றி இந்த செயல் முறை மேலும் எளிதாக்கப் பட்டது. இங்கு ஆரம்ப தொழில்துறை மூலதனத்தின் ஒரு பகுதி அரசாங்கக் கஜானாவிலிருந்து நேரடியாக வந்தது.

''ஏன்'' என்று கூக்குரலிடுகிறார் மிராபோ, ''போருக்கு முந்திய சாக்சனியின் பட்டறைத் தொழிலுற்பத்தியின் புகழுக்கான காரணம் தேடி அவ்வளவு தூரம் ஏன் போக வேண்டும்? மன்னர்கள் பெற்ற 180,000,000 கடன்கள்!''*

காலனி அமைப்பு, பொதுக் கடன்கள், பளுவான வரிகள், காப்பு முறை, வாணிகப் போர்கள் ஆகிய உண்மையான பட்டறைத் தொழில் உற்பத்திக் காலகட்டத்தின் இந்தக் குழந்தைகள் நவீனத் தொழில் துறையின் பாலப் பருவத்தில் பிரம்மாண்டமாக அதிகரிக்கும். இதன் பிறப்பு பிரம்மாண்டமான அளவில் குழந்தைகளைக் களவாடுவதுடன் ஆரம்பமாகும். மன்னரின் கடற்படை போல ஆலைகளுக்கான ஆட்களும் பலவந்தமாகத் திரட்டப்பட்டனர். 15ஆம் நூற்றாண்டின் இறுதி மூன்று பத்தாண்டுகள் தொட்டு அவரது சொந்தக் காலகட்டம் வரையில் நிலத்திலிருந்து விவசாயி மக்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்ட கொடுமைகள் கண்டு தெவிட்டிப் போன சர் எஃப்.எம்.ஈடன் முதலாளித்துவ விவசாயத்தை நிறுவவும், ''சாகுபடி நிலத்துக்கும் மேய்ச்சல் நிலத்துக்குமிடையே உரிய விகிதாசாரத்தை'' ஏற்படுத்தவும் ''இன்றியமையாத'' இந்த வளர்ச்சிப் போக்கில் சுய திருப்தியுடன் பெரு மகிழ்ச்சி கொள்கிறார். ஆனால் பட்டறைத் தொழில் சுரண்டலை ஆலைத் தொழில் சுரண்டலாக மாற்றுவதற்கும் மூலதனத்துக்கும் உழைப்புச் சக்திக்கும் இடையில் ''உண்மை உறவினை'' நிலைநாட்டுவதற்கும் குழந்தைகளைத் திருடுதல் மற்றும் குழந்தைகளின் அடிமைத்தனம் அவசியமா என்பது குறித்து அவர் இதே பொருளாதார நுண்ணறிவைக் காட்டவில்லை. அவர் கூறுகிறார்:

''பட்டறைத் தொழிலை வெற்றிகரமாக நடத்தும் பொருட்டு, ஏழைக் குழந்தைகளைத் தேடி வீடுகள் மற்றும், வேலைவிடுதிகளை உடைத்துச் சோதனையிட வேண்டுமா, அவர்களை இரவு நேரங்களில் பெரும் பகுதி முறைபோட்டு வேலை செய்ய வைத்து, எல்லோருக்கும் இன்றியமையாத இளைஞருக்கு மிகவும் அவசியமான ஓய்வைப் பறிக்க வேண்டுமா, வெவ்வேறு வயதும் விருப்பங்களும் உடைய ஆண்

---

* மிராபோ, மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி VI, பக்கம் 101.

பெண் இருபாலினரும் சேர்த்து வைக்கப்பட்டு அவர்கள் வைக்கப்பட்டுள்ள தன்மையால் ஒழுக்கக் கேடும் சிற்றின்ப வெறியும் ஏற்படும்படி செய்ய வேண்டுமா, இது தனிப்பட்ட வர் வாழ்க்கை நலன் அல்லது தேசிய வாழ்க்கை நலனைப் பெருக்குமா? இது பொது மக்கள் கவனித்து ஆய்ந்து பார்க்கத் தகுதிவாய்ந்த ஒரு விஷயமாகக் கூடுமல்லவா?''* ''டெர்பி ஷயர், நாட்டிங்காம் ஷயர், மேலும் குறிப்பாக லங்கா ஷயர் மாவட்டங்களில் புதிதாகப் புனையப்பட்ட யந்திரங்கள் நீர் விசைச் சக்கரத்தை உருளச் செய்யும் ஆற்றலுடைய ஆறு களின் பக்கத்தில் கட்டப்பட்டுள்ள பெரிய தொழிற்சாலை களில் பயன்படுத்தப்பட்டன'' என்று கூறுகிறார் ஃபீல்டென். ''நகரங்களிலிருந்து தொலைவிலிருந்த இந்த இடங்களில் ஆயிரக்கணக்கான வேலையாட்கள் திடீரென்று தேவைப் பட்டார்கள், குறிப்பாயும் லங்கா ஷயர், அது வரையில் ஒப்பு நோக்கில் சிறிய மக்கள் தொகையே கொண்டதாய் ஜனநட மாற்ற மற்றதாய் இருந்தபடியால் இப்போது அதற்கு வேண் டியதெல்லாம் மக்கள் பெருக்கமே. சிறு குழந்தைகளின் சிறிய சுறுசுறுப்பான விரல்களே மிகவும் அதிகமாக வேண்டப் பட்டதால் லண்டன், பிர்மிங்ஹாம் ஆகியவற்றின் பல்வேறு வட்டார வேலைவிடுதிகளிலிருந்து பழகுனர்களைத் திரட்டிப் பெறும் வழக்கம் திடீரென உதித்தது. பல பல ஆயிரக் கணக்கான இந்தச் சின்னஞ் சிறு மகிழ்ச்சி காணாத ஜீவன்கள் 7 முதல் 13 அல்லது 14 வயது வரை எட்டியவர்கள் வட பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். எஜமானர் அவர்களை ஆலைக்கருகிலுள்ள 'பழகுனர் விடுதியில்' தங்கவைத்துத் தமது பழகுனர்களுக்கு உணவும் உடையும் அளிப்பது வழக்கமாக இருந்தது. வேலைகளைக் கவனிக்க வேண்டி மேலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் பெறும் சம்பளம் அவர் கள் கிட்டிகட்டி வாங்கும் வேலையின் அளவின் விகிதாசாரத் தில் இருந்த படியால் அவர்கள் இச்சிறுவர்களைக் கசக்கிப் பிழிந்து அதிகமான வேலை வாங்குவதில் அக்கறை கொண் டிருந்தார்கள். இதன் விளைவு துன்புறுத்தலே என்பது கண்கூடு. பல பட்டறைத் தொழில் மாவட்டங்களில் குறிப்பாக நான் பிறந்த மாவட்டமான லங்கா ஷயரில் பட்டறைகளின் எஜமானர்களிடம் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள தீங்கு கருதா உற்றார் உறவோரற்ற இந்த ஜீவன்கள் நெஞ்சையுருக் கத்தக்க கொடுமைகளுக்கு இலக்காக்கப் பட்டார்கள்; மிகு உழைப்பால் அவர்கள் சாவின் விளிம்புக்கு சரியுமளவுக்குத் தொல்லைப்படுத்தப்பட்டார்கள்... கசையடி பெற்றார்கள்; அப்பட்டமான கொடுமையினை கூவிச் சொல்லும் வகையில்

---

* ஈடன், மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி I, பகுதி II, அத்தியாயம் I, பக்கம் 421.

சித்திரவதை செய்யப்பட்டார்கள். பெரும்பாலும் பட்டினி போடப்பட்டு எலும்பும் தோலுமாக இருந்த அவர்கள் கசையடி கொடுக்கப்பட்டு வேலைவாங்கப்பட்டனர்... சிலர் தற்கொலை செய்து கொள்ளுமளவுக்குத் துன்புறுத்தப்பட்டனர்... பொது மக்களின் கண்ணில் படாதவையாக இருந்த டெர்பிஷயர், நாட்டிங்ஹாம் ஷயர் மற்றும் லங்கா ஷயரின் எழில் கொஞ்சும், கற்பனைக் காவியப் பின்னணியுடைய பள்ளத்தாக்குகள் சித்திரவதையின், பல படுகொலைகளின் துயரார்ந்த தனியிடங்களாயின. பட்டறையதிபர்களின் லாபங்கள் அமோகமாக இருந்தன. இது அவர்களுக்குத் திருப்தியளிப்பதற்கு மாறாக மேலும் லாபப் பேராசையைத் தூண்டியது. எனவே அவர்கள் வரையறை என்ற சாத்தியக்கூறே இல்லாத அளவுக்கு லாபம் அடைவதற்கான ஒரு வழிதுறையினைக் கையாளத் தொடங்கினார்கள், அதாவது ''இரவு வேலை'' எனப்படும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்கள். இதன்படி பகல் பூராவும் வேலை வாங்கி ஒரு பகுதியினரைச் சோர்வடையச் செய்துவிட்டு இரவு முழுதும் வேலைசெய்வதற்கு இன்னொரு பகுதியைத் தயாராக வைத்திருந்தார்கள். இதன் மூலம் இரவு வேலைப் பகுதியினர் இப்போதுதான் விடுத்துச் சென்ற படுக்கைகளில் பகல் வேலைப் பகுதியினர் படுக்கச் செல்வர், அதேபோன்று காலையில் பகல் வேலைப் பகுதியினர் எழுந்தவுடன் அவர்கள் பயன்படுத்திய படுக்கைகளில் இரவு வேலைக்காரர்கள் மறுபடியும் வந்து படுப்பார்கள். லங்கா ஷயரில் படுக்கைகள் எப்போதுமே ஆளின்றித் தண்மை பெற்றுவிடுவதில்லை என்பது பொது மரபாகிவிட்டது.''*

---

* John Fielden, *The Curse of the Factory System*, London, 1836, pp. 5, 6. ஆலை முறையின் முந்திய இழிபழி பற்றி Dr. Aikin, *(1795)* மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் *219* மற்றும் Gisborne, *Enquiry into the Duties of Men*, *1795*, தொகுதி II ஐப் பார்க்க. நீராவி எஞ்சின் ஆலைகளை நாட்டுப்புற நீர் வீழ்ச்சிகள் இருந்த இடத்திலிருந்து நகரங்களின் நடுப்பகுதிக்கு மாற்றி நிறுவிய பொழுது ''மெட்டான'' உபரி மதிப்பு தயாரிப்பாளர் வேலைவிடுதிகளிலிருந்து அடிமைகளைத் தேடிப்பெறும் கட்டாயமின்றிக் குழந்தை உழைப்பாளர்கள் தயாராகக் கிடைப்பதைக் கண்டார்கள். சர்.ஆர். பீல் (''நேர்மை வாத அமைச்சர்'' என்ற சொற்பிரயோகத்தின் மூலவர்) *1815*ல் நாடாளுமன்றத்தில் குழந்தைகளின் பாதுகாப்புக்கான தமது மசோதாவைக் கொண்டுவந்தார், அப்பொழுது ''புல்லியன் (தங்கப்பவுன்) கமிட்டியின்'' முக்கிய உறுப்பினரும் ரிக்கார்டோவின் நெருங்கிய நண்பருமான பிரான்சிஸ் ஹோர்னர் காமன்ஸ் சபையில் கூறியதாவது: ''ஓர் ஓட்டாண்டியான ஒருவரின் சொத்து வகைகளுடன்

பட்டறைத் தொழில் காலகட்டத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சியடைந்ததோடு ஐரோப்பாவின் பொதுஜன அபிப்பிராயம் அதன் வெட்கத்தின், மனச் சாட்சியின் கடைசி மீதமிச்சத்தையும் இழந்து விட்டது. முதலாளித்துவ திரட்சிக்கு சாதனமாக உதவிய எல்லா இழிபழிகளையும் குறித்து இந்த நாடுகள் வக்கிரமாகத் தற்பெருமை பேசின. உதாரணத்துக்கு மதிப்புக்குரிய அ. ஆண்டர்சன் எழுதிய அப்பாவித்தனமான Annals of Commerce படித்துப் பார்க்கவும். இதில் உட்ரெஹ்த் சமாதானத்தின் போது இங்கிலாந்து, அசியெந்தோ உடன்பாடு மூலம்[12] அது காறும் ஆப்பிரிக்காவுக்கும் ஆங்கில மேற்கு இந்தியத் தீவுகளுக்குமிடையே, ஆப்பிரிக்காவுக்கும் ஸ்பானிய அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்றுவந்த நீக்ரோ வாணிகத்தை நடத்துவதற்குரிய தனியுரிமையை ஸ்பானியரிடமிருந்து வலுவந்தமாகப் பெற்றதை ஆங்கில ராஜதந்திரத்தின் வெற்றி என இந்த வரலாற்றுப்பதிவேடுகள் எக்காளமூதின. இதன் மூலம் இங்கிலாந்து ஸ்பானிய அமெரிக்காவுக்கு 1743 வரை ஆண்டுக்கு 4,800 நீக்ரோக்களை விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றது. இது பிரிட்டனின் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஓர் அதிகாரபூர்வப் போர்வையினைத் தந்தது. அடிமை

---

குழந்தைகளின் ஒரு கும்பலை (இந்தச் சொல்லைப் பயன்படுத்த முடியுமானால்) விற்பனைக்காக வைத்திருந்ததும், அவர்கள் சொத்தின் ஒரு பகுதியாகப் பகிரங்கமாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்ததும் இகழார்ந்த செயல்களாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக கிங்ஸ் பெஞ்சு நீதிமன்றத்தின் முன்பாக மிகவும் கொடூரமான ஒரு சம்பவம் கொண்டுவரப் பட்டது. லண்டனில் ஒரு வட்டாரத்தில் ஒரு பட்டறையதிபரிடம் பழகுனர்களாகச் சேர்ந்திருந்த பல பையன்கள் இன்னொருவருக்கு மாற்றித் தரப்பட்டார்கள். இங்கே அவர்கள் முழுப் பட்டினியால் தவித்ததைக் கருணையுள்ள சில நபர்கள் காண நேர்ந்தது. நாடாளுமன்றக் கமிட்டியில் இருந்த பொழுது இன்னொரு சம்பவம், மேலும் கோரமான ஒரு சம்பவம் அவருக்குத் தெரியவந்தது... அதாவது சில ஆண்டுகள் முன்பு ஒரு லண்டன் வட்டாரத்துக்கும் ஒரு லங்காஷயர் பட்டறையதிபருக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டிருந்தது; இதன்படி ஒவ்வொரு 20 ஆரோக்கியமான குழந்தைகளுக்கு ஒரு முட்டாள் குழந்தை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.''

வாணிகத்தால் லிவர்பூல் கொழுத்த செல்வம் திரட்டியது. புராதனத் திரட்சிக்கான அதன் முறை இதுவாகவே இருந்தது. இன்றும்கூட லிவர்பூலின் ''கௌரவ சமுதாயம்'' அடிமை வர்த்தகத்தின் துதிப்பாடல் இசைக்கிறது. இது ஏற்கெனவே மேற்கோள் காட்டப்பட்ட (1795) அய்க்கினின் நூலைப் பார்க்க: ''இது லிவர்பூலின் வர்த்தகத்தைச் சிறப்பித்துக் காட்டிய அந்த தீர சாகச உணர்வுடன் சென்று பொருந்தி, அதன் இன்றைய சுபிட்ச நிலைக்குத் துரிதமாகக் கொண்டு சென்றுள்ளது; கப்பல் தொழில் துறைக்கும் கப்பலோட்டிகளுக்கும் பரந்த வேலை வாய்ப்புக்களை வருவித்துள்ளது, நாட்டின் பட்டறைத் தொழில் பொருட்களுக்கான தேவையை பெருமளவுக்கு அதிகரித்தது'' (பக்கம் 339). 1730ல் அடிமை வாணிகத்துக்காக லிவர்பூல் 15 கப்பல்களையும், 1751ல் 53 கப்பல்களையும், 1760ல் 74 கப்பல்களையும், 1770ல் 96 கப்பல்களையும், 1792ல் 132 கப்பல்களையும் பயன்படுத்தியது.

பருத்தித் தொழில் இங்கிலாந்தில் குழந்தைகள்-அடிமை முறையினைப் புகுத்தியதென்றால், அது, அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஏறத்தாழ தந்தை வழியிலான முந்திய அடிமை முறையினை ஒரு வாணிக முறைச் சுரண்டலாக உருமாற்றுவதற்கு ஊக்கமளித்தது. உண்மையில் ஐரோப்பாவில் இருந்த கூலித் தொழிலாளர்களின் மூடித்திரையிடப்பட்ட அடிமை முறைக்கு ஒரு தங்குதளமாக புதிய உலகின் அப்பட்டமான மற்றும் நேரான அடிமை முறை தேவைப்பட்டது.*

முதலாளித்துவ உற்பத்தி முறையின் ''நிரந்தரமான இயற்கை விதிகளை'' நிலைநாட்டவும் தொழிலாளர்களுக்கும் வேலை நிலைமைகளுக்கும் இடையிலான பிரிவினை நடைமுறையை முழுமைப் படுத்தவும், ஒரு துருவத்தில் உற்பத்தி மற்றும் பிழைப்பின் சமுதாய சாதனங்களை மூலதனமாகவும் மறு துருவத்தில் மக்கள் திரளைக் கூலித் தொழிலாளர்களாக

---

* 1790ல் ஆங்கில மேற்கிந்தியத் தீவுகளில் ஒரு சுதந்திர மனிதனுக்குப் பத்து அடிமைகள், பிரெஞ்சுப் பகுதியில் 1சுதந்திர மனிதனுக்கு 14 அடிமைகள், டச்சுப் பகுதியில் 1சுதந்திர மனிதனுக்கு 23 அடிமைகள் என்ற விகிதத்தில் இருந்தனர் (Henry Brougham, *An Inquiry into the Colonial Policy of the European Powers*, Edinburg, 1803, Vol. II, p. 74).

வும், நவீன சமுதாயத்தின் செயற்கைப் பொருளான ''சுதந்திரமான உழைக்கும் ஏழை மக்களாகவும்''—மாற்றவும் வேண்டி எவ்வளவோ பல முயற்சிகள் செய்யப்பட்டன.*

---

* கூலித் தொழிலாளர் என்ற ஒரு வர்க்கம் எடுப்பான அளவினை எட்டிய பொழுது முதலே ஆங்கில சட்டங்களின் ''உழைக்கும் ஏழை மக்கள்'' என்ற சொற்றொடர் இடம் பெற்றுவிட்டது. இந்தச் சொற்றொடர் ஒரு புறம் ''சோம்பேறி ஏழை மக்கள்'', பிச்சைக்காரர்கள் போன்றோருக்கு எதிராகவும் மறுபுறம் இறக்கை பிடுங்கப்படாத புறுக்களாக இன்னும் தமது உழைப்புச் சாதனங்களை வைத்திருக்கும் இதர தொழிலாளர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகிறது. சட்ட புத்தகத்திலிருந்து இது அரசியல் பொருளாதாரத்துக்கும் கடந்து சென்றது; கல்பேபர், ஜே. சைல்ட் ஆகியோர் தொடங்கி ஆடம் ஸ்மித்தும்,ஈடனும் அதை தமது நூல்களில் பயன்படுத்தலாயினர். இதற்குப் பிறகு ''கழித்துக் கட்டத்தக்க அரசியல் இழிசொல்காரரான'' எட்மண்ட் பெர்க்''உழைக்கும் ஏழை மக்கள்''என்ற சொல்லை''கழித்துக் கட்டத்தக்க அரசியல் இழிசொல்'' என்று கூறி பொழுது அவரது நல்லெண்ணத்தினை எவரும் நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆங்கில ஆதிக்கக் கும்பலின் காசை வாங்கிச் செயல்பட்ட இந்த முகஸ்துதியாளர் பிரெஞ்சுப் புரட்சியின் பால் ஒரு கற்பனவாதப் புகழ்பாடியாகத் தற்காலிகமாகச் செயல்பட்டார், இதே போன்று அமெரிக்கக் கொந்தளிப்பின் போது வட அமெரிக்கக் காலனிகளிடம் காசுவாங்கி மிதவாதிகளை ஆங்கிலேய ஆதிக்க கும்பலை நோக்கி முடுக்கி விட்டார்; உண்மையில் அவர் அப்பட்டமான கொச்சை பூர்ஷுவா ஆவார். ''வாணிகச் சட்டங்கள் இயற்கையின் சட்டங்கள் எனவே கடவுளின் சட்டங்கள்'' (E. Burke, *Thoughts and Details on Scarcity*, London, 1800, pp. 31, 32). கடவுளின் மற்றும் இயற்கையின் விதிகளுக்கு மெய்யாக நடந்து அவர் தம்மை எப்போதுமே நல்ல சந்தையில் விற்பனை செய்து கொண்டதில் வியப்பென்ன. இந்த எட்மண்ட் பெர்க்கின், அவரது மிதவாத காலத்திய மிகவும் நல்ல சித்திரம் ஒன்றை டக்கரின் நூல்களில் காணலாம். டக்கர் ஒரு சமய குருவானவர் மற்றும் ஒரு டோரியாக இருந்தார். ஆனல் மற்றபடி மதிப்புக்குரிய மனிதர், திறமையான அரசியல் பொருளாதார நிபுணர். ''வாணிகச் சட்டங்களைப்'' பக்திபூர்வம் நம்புவதும் இழிதகைமையான ஒழுக்கப் பேடிமையும் இன்று ஆட்சி செய்யும் சூழ்நிலைமையில் பெர்க் போன்று அவர்களது பின் வாரிசுகளிடமிருந்து ஒரு விஷயத்தில்—திறமையில் மட்டுமே வேறுபடும் பேர் வழிகளை மீண்டும் மீண்டும் சாயம்

பணமானது ஓழியெர் கூற்றுப்படி ''உலகில் ஒரு கன்னத்தில் பிறவிக் கூருன இரத்தக் கறையுடன் வருகிறது''* என்ருல் மூலதனம் தலைமுதல் கால்வரை ஒவ்வொரு மயிர்க் கண்ணிலிருந்தும் இரத்தமும் சகதியும் இடைவிடாது சொட்டச் சொட்ட வருகிறது.**

## முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுத்துறைப் போக்கியல்பு

மூலதனத்தின் புராதனத் திரட்சி அதாவது அதன் வரலாற்றுத்துறையிலான பிறப்பு எவ்வாறு பரிணமிக்கிறது? அடிமைகளும் பண்ணையடிமைகளும் உடனடியாகக் கூலித்

---

வெளுக்கக் காட்ட வேண்டுவது எமது கடப்பாடான கடமையாகும்.

* Marie Augier, *Du crédit public*, Paris, 1842.

** ''மூலதனம் என்பது கொந்தளிப்பையும் மற்றும் பூசலையும் தவிர்க்க முயல்கிறது, பயந்தாங்கொள்ளியானது என்று *Quarterly Reviewer* சஞ்சிகை ஆசிரியர் கூறுகிருர். ஆனுல் இது விஷயத்தை முழுமையாகக் கூறுவதாகாது. முன்னுளில் கூறப்பட்டது போல இயற்கை சூன்யத்தை வெறுத்தது போன்று மூலதனம் லாபமே இல்லை அல்லது குறைந்த லாபம் என்பதைத் தவிர்க்கவே விரும்புகிறது. போதிய லாபம் பெறும் போது மூலதனம் மிகவும் துணிவுடன் இருக்கிறது. ஒரு 10 சதவிகித லாபமே எங்கு வேண்டுமாயினும் மூலதனம் ஈடுபடுத்தப்படுவதை உத்தரவாதம் செய்யும், 20 சதவிகித லாபம் என்ருல் அது நிச்சயமாயும் ஆர்வத்துடன் முன்வரும் 50 சதவிகித லாபம் நேரடியான துடுக்குத் தனத்தை ஏற்படுத்தும், 100 சதவிகித லாபம் என்றவுடன் மனிதச் சட்டங்கள் அனைத்தையும் மிதித்துத் துவைக்க அது ஆயத்தமாகிவிடும், 300 சதவிகித லாபம் என்ருலோ அது எந்தக் குற்றச்செயல் புரியவும் தயங்காது, இதன் உரிமையாளர் தூக்கிலிடப்பட நேரினும் அதற்கும் துணியுமளவு எந்த அபாய நேர்வையும் எதிரிடத் தயாராக இருக்கும். கொந்தளிப்பும் பூசலும் லாபத்தைக் கொண்டு வருமானுல் அது அவை இரண்டையுமே தாராளமாக ஊக்குவிக்கும். கள்ளக் கடத்தலும் அடிமை-வாணிகமும் இங்கு கூறப்பட்டுள்ள அனைத்தையும் பெருமளவு நிரூபித்துக் காட்டிவிட்டன'' (T. J. Dunning, *Trades' Unions and Strikes*, London, 1860, pp. 35-36).

தொழிலாளர்களாக மாறுவதோ, அவ்வாறு கேவலம் வடிவில் மட்டுமேயான மாறுதலோ அல்ல என்ற அளவுக்கு இது நேரடி உற்பத்தியாளர்களின் உடைமை பறிமுதல் என்று மட்டுமே, அதாவது உரிமையாளரின் உழைப்பை அடிப்படையாக்கிய தனியார் உடைமை கலைக்கப்படும் என்றே பொருள்படும்.

சமுதாய மற்றும் கூட்டுச் சொத்துக்கு முரண்நிலை என்ற முறையிலான தனியார் சொத்து, உழைப்புச் சாதனங்களும் உழைப்புக்கான புறநிலைமைகளும் அங்கு தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றனவோ எங்கு மட்டுமே நிலவுகிறது. இந்தத் தனிப்பட்ட நபர்கள் உழைப்பவர்களா அல்லது உழைக்காதவர்களா என்பதை அனுசரித்துத் தனிச் சொத்தின் தன்மையில் வேறுபாடு ஏற்படும். முதல் தோற்றத்தில் இது முன்வைக்கும் எண்ணற்ற சாயல்கள் இந்த இரு கடைக்கோடிகளுக்கும் இடையில் கிடக்கும் இடைப்பட்ட கட்டங்களுக்கு இசைவானதாகும்.

உழைப்பவனது உற்பத்தி சாதனங்களைக் கொண்ட தனிச் சொத்தே சிறு தொழில்துறைக்கான விவசாயத் தொழில், அல்லது பட்டறைத் தொழிலுக்கான அல்லது இரண்டுக்குமான அடித்தளமாகும்; சிறு தொழில்துறையே சமுதாய உற்பத்தியின் வளர்ச்சிக்கும் மற்றும் தொழிலாளி தன்னுடையதான சுதந்திரமான தனித்துவத்தின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத நிபந்தனையாகும். இந்தச் சிறிய முறையிலான உற்பத்தியானது, அடிமை முறை, பண்ணையடிமை முறை, மற்றும் இதர சார்பு நிலைகளிலும் நிலவுகிறது என்பது கண்கூடு. ஆனால் தொழிலாளி தனது சொந்த உற்பத்தி சாதனங்களின் தனி உரிமையாளராய் எங்கு அவற்றைத் தானே இயக்குவிக்கிறானோ—எங்கு பயிர் செய்யும் நிலத்தைத் தானே விவசாயி உடைமையாகக் கொண்டிருக்கிறானோ, எங்கு கலை நுணுக்க அறிஞராய்க் கருவியைக் கையாளும் கைவினைஞர் கருவியை உடமையாய்க் கொண்டிருக்கிறாரோ—அங்கு மட்டுமே இது செழுமையுறுகிறது, ஆற்றல் முழுவதையும் கட்டவிழ்த்து விடுகிறது, அதன் தகுதியான சாஸ்த்ரிய வடிவை அடைகிறது.

இந்த உற்பத்தி முறை நிலத்தைப் பகுதிகளாகப் பிரிப்பதையும் இதர உற்பத்தி சாதனங்களை எங்கும் பரவச் செய்

வதையும் முன்னனுமானிக்கிறது. இந்த உற்பத்தி சாதனங்கள் ஒருமுகப்படுவதை இது விலக்குவது போலவே, இது ஒத்துழைப்பையும், ஒவ்வொரு தனி உற்பத்தி நடைமுறைக்குள் ளுமான உழைப்புப் பிரிவினையையும், சமுதாயம், இயற்கை சக்திகள் மீது கட்டுப்பாடு செலுத்தியும் அவற்றைப் பயனுள்ள முறையில் பிரயோகிப்பதையும், சமுதாய உற்பத்தி சக்திகளின் கட்டற்ற வளர்ச்சியையுங்கூட விலக்குகிறது. இது குறுகிய ஏறத்தாழ ஆதிகால வரம்புகளுக்குட்பட்டு இயங்கி வரும் ஒரு சமூக அமைப்புக்கும், ஓர் உற்பத்தி முறைக்கும் மட்டுமே இணைவொத்ததாகும். இதனை நிரந்தரமாக்குவது என்பது பெக்குயோர் சரியாகவே கூறுவது போன்று ''சர்வப் பொதுவான அற்பத்தனம் நடமாட ஆணைபிறப்பிப்பதாகும்''. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இது தனது சொந்த அழிவுக்கான பொருளாயதக் கூறுகளைப் பிறப்பிக்கிறது. அந்தத் தருணம் முதல் சமுதாயத்தின் உள்ளத்தில் புதிய சக்திகள் மற்றும் புதிய பேரார்வங்கள் உதித்தெழுகின்றன; ஆனால் பழைய சமுதாய அமைப்பு அவற்றுக்குத் தளையிட்டுக் கீழடக்கி வைக்கிறது. இதைக் கட்டாயம் ஒழித்துக் கட்ட வேண்டும், இது ஒழித்துக்கட்டப்படுகிறது. இதன் ஒழித்துக்கட்டல், தனிப்பட்ட உடைமையிலும் எங்கும் சிதறியும் கிடக்கும் உற்பத்தி சாதனங்களை சமூக ரீதியில் ஒருமுகப் பட்டதாக்குதல், பலரது அற்பமான உடைமையினைச் சிலரது மிகப் பெரிய உடைமையாக்குதல், நிலத்திலிருந்தும், பிழைப்புச் சாதனங்களிலிருந்தும், உழைப்புச் சாதனங்களிலிருந்தும் மிகப் பெருவாரியான மக்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்தல்,—இவ்வாறு பெருந்திரளான மக்களின் உடைமைகளை அச்சந்தரும் வகையில் வேதனை தரும் முறையில் பறிமுதல் செய்தலே மூலதனத்தின் வரலாறுக்குப் பீடிகையாக அமைகிறது. இதில் வரிசையான பல பலப்பிரயோக முறைகள் உட்படும், அவற்றுள் மூலதனத்தின் புராதனத் திரட்சியின் முறைகள் போன்று சகாப்தம் சிருஷ்டிப்பனவற்றை மட்டுமே நாம் இங்கு குறிப்பாக எடுத்து விளக்கியுள்ளோம். நேரடி உற்பத்தியாளர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்ததானது, மிகவும் இகழார்ந்த, மிகவும் படுமோசமான, ஆகக் கீழ்த்தரமான, மிகவும் கேவலமான, அளவுக்கு வெறுக்கத்தக்க உணர்ச்சிகளின் தூண்டுதலின் கீழ்

ஈவிரக்கமற்ற பழி வெறியுடன் நிறைவேற்றப்பட்டது. தனிமைப்பட்ட சுதந்திரமான உழைக்கும் தனிநபர் தனது உழைப்பு நிலைமைகளுடன் சேர்ந்து கலந்திணைதலை அடிப்படையாக்கிய சுய-சம்பாத்தியமான தனியார் சொத்து முதலாளித்துவத் தனிச் சொத்தினால் அகற்றப்படுகிறது; இது பெயரளவில் கட்டற்ற உழைப்பைச் சுரண்டுவதன் மீது, அதாவது கூலி உழைப்பின் மீது நிலை கொள்கிறது.*

இந்த மாறுதல் நிகழ்ச்சிப் போக்கு பழைய சமூகத்தை அடி முதல் முடிவரைப் போதியளவு சிதைவுறச் செய்தவுடன், உழைப்பவர்கள் பாட்டாளிகளாக மாற்றப்பட்டு அவர்களது உழைப்புச் சாதனங்கள் மூலதனமாக மாற்றப்பட்டவுடன் முதலாளித்துவ உற்பத்தி முறை தன் சொந்தக் கால்களிலேயே நிற்கும் நிலை ஏற்பட்டவுடன், உழைப்பு, மேலும் சமூகத்தன்மை பெறுவதும், நிலம் மற்றும் இதர உற்பத்தி சாதனங்கள் சமூகத்தால் பயன்படுத்தப்படும் வகையில் மேலும் மாற்றமடைவதும் அதாவது பொது உற்பத்தி சாதனங்களாவதும், தனிச் சொத்துரிமையாளர் உடைமை மேலும் பறிமுதல் செய்யப்படுவதும் ஒரு புதிய வடிவத்தினை மேற்கொள்கிறது. இப்போது உடைமை பறிமுதல் செய்யப்பட வேண்டியவர் தனக்காகவே பாடுபடும் தொழிலாளியல்ல மாறாகப் பல தொழிலாளர்களைச் சுரண்டி வரும் முதலாளியேயாகும்.

இந்த உடைமை பறிமுதல், முதலாளித்துவ உற்பத்தியினுடைய உள்ளார்ந்த விதிகளின் செயல்பாட்டால், மூலதனம் மையப்படுத்தப்படுவதால் நிறைவேற்றப்படுகிறது. ஒரு முதலாளி எப்போதும் பலரைக் கொல்கிறார். இந்த மையப்படுத்தலுடன் அல்லது பல முதலாளிகள் சிலரால் உடைமை பறிமுதல் செய்யப்படுவதுடன் கரம் கோர்த்து நின்று என்றும் விரிவடைந்துவரும் அளவில் உழைப்பு-நடைமுறையின் கூட்டுறவு வடிவம், உணர்வு பூர்வமான விஞ்ஞானத்

* ''நாம் இன்று முற்றிலும் புதியதான ஒரு சமூக அமைப்புக்குள் பிரவேசித்திருக்கிறோம்... ஒவ்வொரு வகையான உழைப்பிலிருந்தும் ஒவ்வொரு வகையான சொத்துடைமையையும் பிரித்தெடுக்க நாம் விரும்புகிறோம்'' (Sismondi. *Nouveaux Principes de l'Economie Politique*, t. 2, [Paris, 1827], p. 434.)

தின் தொழில்நுட்பப் பிரயோகம், நிலத்தை முறைப்படி பயிர்செய்தல், உழைப்புக் கருவிகளைப் பொதுவாக மட்டுமே பயன்படுத்தத்தக்க உழைப்புக் கருவிகளாக மாற்றுதல், எல்லா உற்பத்தி சாதனங்களையும் இணைக்கப்பெற்ற சமூகமயமாக்கப்பட்ட உழைப்பில் உற்பத்தி சாதனங்களாகப் பயன்படுத்துவது மூலம் அவற்றைச் சிக்கனப்படுத்தல், உலக மார்க்கெட் என்னும் வலைக்குள் அனைத்து மக்களையும் சிக்க வைத்தல், ஆகியவையும் இவற்றுடன் கூடவே முதலாளித்துவ ஆட்சியின் சர்வதேசியத் தன்மையும் வளர்கின்றன. இந்த மாறுதல் நடைமுறையின் சாதகங்களை அநீதமாகப் பறித்து ஏகபோகமாக்கிக் கொள்ளும் மூலதனத்தின் பெருஞ்செல்வர்கள் எண்ணிக்கை இடையறாது குறைந்து வருவதோடு கூடவே, அவலநிலை, ஒடுக்குமுறை, அடிமைத்தனம், இழிவு, சுரண்டல் ஆகியவை பெருமளவில் பெருகுகின்றன; இதோடு கூடவே எண்ணிக்கையில் எப்போதும் அதிகரித்துவருவதும் முதலாளித்துவ உற்பத்தி நடைமுறையின் ஏற்பாடு காரணமாகவே கட்டுப்பாடும் ஒற்றுமையும் பூண்டதாய் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படும் வர்க்கமுமான தொழிலாளி வர்க்கத்தின் வெறுப்பெதிர்ப்பும் வளர்ந்து முன்னேறுகிறது. மூலதனத்தின் ஏகபோகம், அதோடு கூடவே உதித்தெழுந்து, அதோடு கூடவே மற்றும் அதன் கீழிலேயே செழுமையடைந்த உற்பத்தி முறையின் மீது ஒரு தளையாகிறது. உற்பத்தி சாதனங்களை மையப்படுத்துவதும் மற்றும் உழைப்பைச் சமூகமயமாக்குவதும் அவை தமது முதலாளித்துவப் புறப்போர்வையுடன் ஒவ்வாமற்போகும் ஒரு கட்டத்தை இறுதியில் வந்தடையச் செய்யும். இந்தப் புறப்போர்வை கிழிந்து சின்னாபின்னமாகும். முதலாளித்துவத் தனிச் சொத்தின் சாவுமணி முழங்குகிறது. உடைமை பறிமுதல் செய்தவர்கள் உடைமை பறிமுதல் செய்யப்படுகின்றனர்.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவான முதலாளித்துவச் சுவீகரிப்பு முறை முதலாளித்துவத் தனிச் சொத்தை உருவாக்குகிறது. உரிமையாளரின் உழைப்பின் மீது ஆதாரமாக்கப்பட்ட தனிப்பட்ட தனியார் சொத்தின் முதல் நிலைமறுப்பாகும் இது. ஆனால் முதலாளித்துவ உற்பத்தி ஓர் இயற்கை விதியின் வசப்படாத தன்மையுடன் தனது சொந்த நிலைமறுப்பினை ஈன்றெடுக்கிறது. இது நிலைமறுப்பின்

நிலைமறுப்பாகும். இது உற்பத்தியாளருக்கு தனிச் சொத்துடைமையை மீண்டும் நிலைநாட்டுவதில்லை, ஆனால் முதலாளித்துவ சகாப்தத்தின் தேட்டங்களை, அதாவது கூட்டுறவையும், நிலத்திலும் உற்பத்தி சாதனங்களிலுமான பொதுவான உரிமையையும் அடிப்படையாக்கிய தனி நபரின் சொத்தை அவருக்கு அளிக்கிறது.

ஏற்கெனவே சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தியில் நடைமுறையில் நிலை கொண்டுள்ள முதலாளித்துவ தனிச் சொத்தை சமூகவுடைமையாக்கப்பட்ட சொத்தாக மாற்றமுறச் செய்வதை விட தனிநபர் உழைப்பிலிருந்து எழும் சிதறலான தனிச் சொத்து முதலாளித்துவத் தனிச் சொத்தாக மாற்றமடைவது இயல்பாகவே ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகமாக நீண்டகாலமெடுக்கும், வன்முறையான, இடர்ப்பாடான ஒரு நிகழ்ச்சிப் போக்காகும். முந்திய நிகழ்வு ஒரு சில அநீதமாகக் கைப்பற்றுதல் செய்யும் பேர்வழிகள் பெருந்திரளான மக்களால் உடைமை பறிமுதல் செய்யப்படுவதாகும்; பிந்திய நிகழ்வு பெருந்திரளான மக்கள் ஒரு சில அநீதமான கைப்பற்றுவோர்களால் உடைமை பறிமுதல் செய்யப்படுவதாகும்.*

---

* "பூர்ஷ்வா வர்க்கம் தன் வசமின்றியே சாதிக்கிற தொழில் முன்னேற்றமானது, போட்டி காரணமாகத் தொழிலாளரிடையே ஏற்பட்டிருந்த சிதறுபாட்டிற்குப் பதிலாக, சங்க அமைப்பு காரணமாக அவர்களிடையே புரட்சிகரமான ஒருமைப்பாடு ஏற்படச் செய்கிறது. எனவே, பூர்ஷ்வா வர்க்கம் பொருட்களை உற்பத்தி செய்து சுவாதீனப்படுத்திக் கொள்வதற்காகவுள்ள அஸ்திவாரத்துக்கே, நவீனத் தொழில் வளர்ச்சி குழி பறிக்கிறது. எனவே, எல்லாவற்றுக்கும் மேலாக, பூர்ஷ்வா வர்க்கம் எதை உற்பத்தி செய்கிறது? தனக்குச் சவக்குழி தோண்டுகிறவர்களையே. அதன் வீழ்ச்சி, பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி ஆகிய இரண்டுமே தவிர்க்க முடியாதவையாகும்... இப்போது பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிரே நிற்கும் எல்லா வர்க்கங்களிலேயும் பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் உண்மையில் புரட்சிகரமான வர்க்கமாகும். மற்ற வர்க்கங்கள் எல்லாம் நவீன இயந்திரத் தொழில் முறையின் முன்னே மட்கிப் போய் இறுதியிலே மறைந்தொழிகின்றன; பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் இயந்திரத் தொழில் முறைக்கே சிறப்பான, அதன் கருவிலே தோன்றிய விளைபொருளாகும்... கீழ்த்தர மத்திய வர்க்கத்தினர், சிறு பட்டறை

# காலனி அமைப்பின் நவீன தத்துவம்*

உற்பத்தியாளரின் சொந்த உழைப்பை ஆதாரமாகக் கொண்ட ஒன்று மற்றவர்களின் உழைப்பை ஈடுபடுத்துவதை ஆதாரமாகக் கொண்ட இன்னொன்று என இரு மிக வெவ் வேறு வகையான தனிச் சொத்துப் பற்றிக் கோட்பாடு விஷயத்தில் அரசியல் பொருளாதாரம் போட்டுக் குழப்புகிறது. பிந்தியது முந்தியதன் நேரடியான முரண்நிலை என்பதையும் அதன் சமாதி மீது மட்டுமே முற்ற முழுமையாக வளர்கிறது என்பதையும் அரசியல் பொருளாதாரம் மறந்து விடுகிறது.

அரசியல் பொருளாதாரத்தின் தாயகமான மேற்கு ஐரோப்பாவில், புராதனத் திரட்சியின் நடைமுறை கிட்டத் தட்ட நிறைவேறிவிட்டது. இங்கு முதலாளித்துவ ஆட்சி ஒன்று தேசியப் பொருளுற்பத்தியின் துறை முழுவதையும் நேரடியாக வென்று கைப்பற்றிவிட்டது, அல்லது, பொருளா தார நிலைமைகள் குறைவாக வளர்ச்சி பெற்றுள்ள இடங் களில், காலங் கடந்த உற்பத்தி முறையைச் சேர்ந்ததா யினும், அதனுடன் படிப்படியான சீரழிவில் தொடர்ந்து அக்கம்பக்கமாக நிலவும் அந்த சமுதாய அடுக்குகளை மறைமுக

---

உற்பத்தியாளன், கடைக்காரன், கைத்தொழில் செய்பவன், விவசாயி, இவர்களெல்லோரும் பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்துப் போரிடுகிறார்கள். எதற்காக? மத்திய வர்க்கத் தின் கூறுகள் என்ற முறையில் தங்கள் உயிர்நிலையை அழி விலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக. ஆகவே, அவர்கள் புரட்சிகரமான தன்மை பெற்றவர்களல்ல: பழமைப் பிடிப் புள்ளவர்கள். அது மட்டுமல்ல, அவர்கள் பிற்போக்கான வர்களும்கூட; ஏனெனில் அவர்கள் சரித்திரத்தின் சக்கரங் களைப் பின்னோக்கி உருட்டிவிட முயற்சிக்கின்றனர்.'' (கார்ல் மார்க்ஸ் பிரெடெரிக் எங்கெல்ஸ், **கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை**, மாஸ்கோ, 1972, பக்கங்கள் 60,61,64.)

* இங்கு நாம் குறிப்பிடுவது உண்மையான காலனிகள், கன்னி நிலங்கள், சுதந்திரமான குடியேற்றக்காரர்களால் காலனிகளாக்கப்பட்டவை. அமெரிக்க ஐக்கிய நாடு பொரு ளாதார ரீதியில் ஐரோப்பாவின் ஒரு காலனியே. மேலும் அடிமை முறை ஒழிக்கப்பட்டதால் முந்திய நிலைமைகள் முழுமையாக மாற்றப்பட்டதான பழைய தோட்டப்பகுதி களும் இந்த வகை இனத்தில் சேரும்.

மாகக் கட்டுப்படுத்துகிறது. இந்தத் தயார் நிலையிலுள்ள முதலாளித்துவ உலகின் மீது முதலாளித்துவத்துக்கு முந்தியதான உலகிலிருந்து மரபுரிமையாகப் பெற்ற சட்டம் மற்றும் சொத்துரிமை பற்றிய கருத்துப் படிவங்களை அரசியல் பொருளாதார வல்லுனர் எந்தளவு மேலதிகமான அக்கறை மிகுந்த பற்றுர்வத்தோடும் மிகப்பெரிய பக்திபரவசத்தோடும் பிரயோகிக்கிருரோ அந்தளவுக்கு அதிக உரத்த குரலில் அவரது சித்தாந்தத்தினை எதிர்த்துச் செயலுண்மைகள் கூக்குரலிடுகின்றன.

காலனிகளில் நிலைமைகள் வேறுவகையாக உள்ளன. அங்கு எல்லாவிடங்களிலும் முதலாளித்துவ ஆட்சி உற்பத்தியாளரின் எதிர்ப்போடு மோதுகிறது; தனது சொந்த உழைப்பு நிலைமைகளுக்கு உரிமையாளர் என்ற முறையில் இந்த உற்பத்தியாளர், அந்த உழைப்பை முதலாளியைச் செழுமைப்படுத்துவதற்குப் பதிலாகத் தம்மையே செழுமைப் படுத்திக்கொள்ள ஈடுபடுத்துகிருர். இந்த நேருக்கு நேர் எதிரான பொருளாதார அமைப்புகளின் முரண்பாடு, இங்கு நடைமுறையில் அவற்றினிடையிலான ஒரு போராட்டத்தில் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறது. எங்கு, முதலாளிக்குத் தனது தாய்-நாட்டின் ஆட்சி அதிகாரத்தின் பின்பலம் இருக்கிறதோ அங்கு அவன் உற்பத்தியாளரின் சுதந்திரமான உழைப்பை அடிப்படையாக்கிய பொருளுற்பத்தி மற்றும் சுவீகரிப்பு முறைகளை பலப்பிரயோகம் மூலம் அகற்றித்தள்ள முயல்கிருன். மூலதனத்தின் முகஸ்துதியாளரான அரசியல் பொருளாதாரவாதியைத் தாய்-நாட்டில் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அதன் நேர் எதிரான முறையுடன் தத்துவார்த்த முற்ருருமை இருப்பதாகப் பறைசாற்றும்படி கட்டாயப்படுத்தும் அதே நலன்தான் காலனிகளில் மனச்சாட்சிக்கு மதிப்புவைத்து இரு உற்பத்தி முறைகளின் பகைமை பற்றி உரக்கப் பறைசாற்றுமாறு கட்டாயப்படுத்துகிறது. இந்த நோக்கத்துடன் தான் அவர் உழைப்பின் சமூக உற்பத்தி சக்தியின் வளர்ச்சி, கூட்டுறவு, உழைப்புப் பிரிவினை, பெரு வீதத்தில் இயந்திரங்களை உபயோகித்தல் ஆகியவை, தொழிலாளர்களை உடைமை பறிமுதல் செய்யாமலும் இதற்குப் பொருத்தமாக அவர்களது உற்பத்தி சாதனங்களை மூலதனமாக மாற்ருமலும் சாத்திய

மாகாது என்று நிரூபிக்கிறார். தேசியச் செல்வம் எனப்படுவதன் நலனை முன்வைத்து அவர் மக்களின் வறுமையை உறுதிப் படுத்த வேண்டிச் செயற்கையான வழிவகைகளை நாடுகிறார். இங்கு அவரது கண்துடைப்புக் கவசம் மக்கிப்போன தாய்ச்சி மரம் போலத் துண்டு துண்டாக நொறுங்கி அழிகிறது.

காலனிகள் பற்றிப் புதிதாக எதையும் கண்டுபிடிக்கா விடினும்*, காலனிகளில் தாய்-நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி நிலைமைகள் என்ன என்பதன் உண்மையைக் கண்டு பிடித்த மாபெரும் பெருமை இ.ஜி. வேக்ஃபீல்டுக்கு உரிய தாகும். காப்பு முறை அதன் துவக்க கட்டத்தில்** தாய்-நாட்டில் செயற்கையாக முதலாளிகளை உற்பத்தி செய்வதற்கு முயன்றதைப் போலவே, இங்கிலாந்து சில காலத்துக்கு நாடாளுமன்றச் சட்டங்கள் மூலம் அமுல் நடத்த முயன்ற வேக்ஃபீல்டின் காலனியமைப்புத் தத்துவமும், காலனிகளில் கூலித் தொழிலாளர்களை உற்பத்தி செய்ய முயன்றது. இதை அவர் ''திட்டமிட்ட காலனியமைத்தல்'' என்று அழைக் கிறார்.

முதலாவதாக, காலனிகளில் பண உருவிலான சொத்து, பிழைப்புச் சாதனங்கள், இயந்திரங்கள் மற்றும் இதர உற்பத்தி சாதனங்களை ஒருவர் வைத்திருந்தாலும், தொடர்பாட்டு நபரான—கூலித்தொழிலாளி—தன் சொந்த விருப்பப் படி தன்னைத்தானே விற்றுக் கொள்ளும் கட்டாயத்திற்குள் ளான இன்னொரு நபரின் இல்லாக்குறை அவருக்கு இருக்கு மானால் அவரை முதலாளி என்று முத்திரை குத்த முடியாது என்பதை வேக்ஃபீல்டு கண்டுபிடித்தார். மூலதனம் என்பது ஒரு பொருளல்ல, மாறாகப் பொருட்களின் இடைச்சாதனம் மூலமாக மனிதர்களிடையே நிலைநாட்டப்படும் ஒரு சமுதாய

---

* நவீன காலனியமைப்புப் பற்றிய வேக்ஃபீல்டின் ஒரு சில காட்சித் துணுக்குகள் (physiocrat) மிராபோ பெரே யாலும், நில ஆதிக்க வாதிகளாலும் இதற்கு மிகவும் முன்ன தாக ஆங்கிலப் பொருளியல் நிபுணர்களாலும் முழுமையாக முன்னறியப்பட்டிருந்தன.

** பின்னால் இது சர்வதேசப் போட்டிப் போராட்டத் தில் ஒரு தற்காலிகத் தேவையாகிவிட்டது. ஆனால் இதன் உத்தேசம் எதுவாக இருந்த போதிலும் இதன் விளைவுகள் ஒன்றாகவே நீடித்து நிலவின.

உறவாகும் என்று அவர் கண்டுபிடித்தார்.* திரு பீல் என்பவர் இங்கிலாந்திலிருந்து மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள ஸ்வான் நதி என்னுமிடத்துக்கு 50,000 பவுன் மதிப்புள்ள பிழைப்புச் சாதனங்கள் மற்றும் உற்பத்தி சாதனங்களைத் தம்முடன் எடுத்துச் சென்றார். இது தவிர முன்யோசனையுள்ள திரு பீல் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த 3,000 ஆடவர், மகளிர், குழந்தைகளையும் தம்முடன் கொண்டுவந்தார். தாம் சேர வேண்டிய இடத்தைச் சென்றடைந்தவுடன் ''திரு பீல் தமது படுக்கையை விரிக்கவோ, ஆற்றிலிருந்து தனக்குத் தண்ணீர் கொண்டுவரவோ ஒரு வேலையாளின்றித் தவித்தார்''** என்று ஓலமிடுகிறார் வேக்ஃபீல்டு. துரதிருஷ்டமுடைய பீல், ஸ்வான் நதிக்கு ஆங்கில உற்பத்தி உறவுகளைத் தவிர மற்ற எல்லாவற்றையும் வழங்கியிருந்தார்!

வேக்ஃபீல்டின் பின்வரும் கண்டுபிடிப்புகளைப் புரிந்து கொள்வதற்காக இரண்டு பூர்வாங்கக் குறிப்புகளைத் தருகிறோம்: உற்பத்தி சாதனங்களும் பிழைப்புச் சாதனங்களும் உற்பத்தியாளரின் நேரடிச் சொத்தாக இருக்கும் வரை அவை மூலதனமல்ல என்பதை நாமறிவோம். அவை தொழிலாளியைச் சுரண்டும் சாதனமாயும் அவனை ஆட்படுத்தும் சாதனமாயும் ஒரே சமயத்தில் சேவை புரியும் சந்தர்ப்பச் சூழல்களின் கீழ் மட்டுமே மூலதனமாகின்றன. ஆனால் அரசியல் பொருளியலாளர் மூளையில் அவற்றின் இந்த முதலாளித்துவ

* ''நீக்ரோ இனத்தவர் நீக்ரோ இனத்தவர்தான். குறிப்பிட்ட சில உறவுகளில் தான் அவர் அடிமையாகின்றார். ஒரு பருத்தி நூற்பு ஜென்னியானது பருத்தி நூற்கும் ஓர் இயந்திரமே ஆகும். குறிப்பிட்ட சில உறவுகளில் தான் அது மூலதனம் ஆகிறது. இந்த உறவு முறைகளிலிருந்து தனியே துண்டிக்கப்பட்டபின் அது மூலதனமாய் இருப்பதில்லை—எப்படித் தங்கம் தானாகவே பணமாகி விடுவதில்லையோ அல்லது எப்படிச் சர்க்கரையே சர்க்கரையின் விலையாகி விடுவதில்லையோ அதே போல. மூலதனமும் உற்பத்தியின் ஒரு சமூக உறவாகும். இது உற்பத்தியின் வரலாற்று முறை உறவாகும்'' (கார்ல் மார்க்ஸ், *Lohnarbeit und Kapital. Neue Rheinisch Zeitung*, இதழ் 266, ஏப்ரல் 7, 1849 [கா. மார்க்ஸ், கூலியுழைப்பும் மூலதனமும், மாஸ்கோ 1974, பக்கங்கள் 41, 42]).

** E. G. Wakefield, *England and America*, Vol. II, London, 1833, p. 33.

ஆன்மா அவற்றின் பொருளாயத சாரத்தோடு மிகவும் நெருக்கமாக இணைபிரியாது பிணைக்கப்பட்டிருப்பதால் அவர் அவற்றை எல்லாச் சந்தர்ப்பச் சூழலிலும், அவை இதற்கு நேர் எதிரானதாக இருக்கும் போது கூட மூலதனம் என்று பெயரிட்டழைக்கிருர். இவ்வாறுள்ளது வேக்ஃபீல்டின் விவகாரம். இதுமட்டுமல்ல: தமது சொந்தப் பொறுப்பில் வேலை செய்துவரும் பல சுதந்திரமான தொழிலாளர்கள் உற்பத்தி சாதனங்களைத் தனிப்பட்ட சொத்தாக பிரித்துக் கொள்வதை மூலதனத்தின் சமமான பிரிவினை என்றழைக்கிருர். அரசியல் பொருளியலாளர் நிலை நிலப்பிரபுத்துவ சட்ட நிபுணர்களைப் போன்றதாகும். பிந்தியவர்கள் முற்றிலும் பணம் சம்பந்தமான உறவுகள் மீது நிலப்பிரபுத்துவச் சட்டம் வழங்கிய முத்திரைகளை ஒட்டினுர்கள்.

வேக்ஃபீல்டு கூறுகிருர்: ''சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும் மூலதனத்தின் சமமான பங்கைக் கைகளில் வைத்திருப்பதாக உத்தேசித்துக் கொள்வோமாஞல் தனது கரங்களால் பயன்படுத்தக் கூடியதை விட அதிக மூலதனத்தைத் திரட்ட எந்த ஒரு மனிதனுக்கும் உள்நோக்கம் இருக்காது. இந்த நிலைமை ஓரளவுக்குப் புதிய அமெரிக்கக் குடியேற்றங்களில் காணப்படுகிறது, இங்கு நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற அடங்கா ஆர்வம் காரணமாகக் கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளிகள் வர்க்கம் நிலவுவது தடை செய்யப்படுகிறது.''*

அதனுல், உழைப்பாளி தனக்கென திரட்டிக் கொள்ள முடியும் வரை,— அவன் தனது உற்பத்தி சாதனங்களை தன்னிடம் வைத்திருக்கும் காலம் வரை இதை செய்ய முடியும்,—முதலாளித்துவ திரட்சியும், முதலாளித்துவ உற்பத்தி முறையும் சாத்தியமல்ல. இவற்றுக்கு இன்றியமையாததாக இருக்கும் கூலி உழைப்பாளர் வர்க்கம் இல்லை. அப்படியாஞல் பழைய ஐரோப்பாவில், உழைப்பாளி தனது வேலை நிலைமைகளிலிருந்து எவ்வாறு உடைமை பறிமுதல் செய்யப்பட்டான், அதாவது எவ்வாறு மூலதனமும் கூலி உழைப்பும் சகவாழ்வு வாழும் நிலையும் உருவாக்கப்பட்டது? முற்றிலும் நூதனமான வகைப்பட்ட சமுதாய ஒப்பந்தத்தால் இது ஏற்பட்டது.

* அதே நூல், தொகுதி I, பக்கம் 17.

''மூலதனத் திரட்டலை ஊக்குவிக்க... மனிதகுலம் ஒரு எளிய உத்தியைக் கடைப்பிடித்திருந்தது''. இது ஆதாமின் காலமுதலே அவர்களது வாழ்நிலையின் ஏகமும் இறுதியுமான முடிவாக அவர்களது கற்பனையில் ஊடாடியது: ''அவர்கள் தம்மைத்தாமே மூலதனத்தின் உரிமையாளர்களாயும், உழைப்பின் உரிமையாளர்களாயும் பிரித்துக் கொண்டார்கள்... இந்தப் பிரிவினை, உடன்பாட்டின் மற்றும் ஒன்றுசேர்தலின் விளைவாகும்.''* சுருங்கக் கூறின்: ''மூலதனத் திரட்சியின்''சிறப்பைக் கருதி பெருந்திரளான மனிதகுலம் தன்னைத் தானே உடைமை பறிமுதல் செய்து கொண்டது. இந்தத் தன்னல மறுப்பு வெறியின் இயல்பூக்கம் குறிப்பாயும் காலனிகளில் மிக விரைவாகப் பரவும் என்று எவரும் கருதலாம்; அங்கு மட்டுமே ஒரு சமுதாய ஒப்பந்தத்தை ஒரு கனவிலிருந்து ஓர் எதார்த்த சாதனையாக மாற்றக் கூடிய மனிதர்களும் நிலைமைகளும் காணக்கிடக்கின்றன. அப்படியானல் ''திட்டமிட்ட காலனியமைத்தல்'' அதன் எதிர்நிலையான தன்னியல்பான, முறைப்படுத்தப்படாத காலனியமைத்தலை மாற்றீடு செய்யுமாறு அழைக்கப்படுவதேன்? ஆனல்—ஆனல்—

''அமெரிக்க ஒன்றியத்தின் வடக்கு மாநிலங்களில் மக்களில் பத்தில் ஒரு பகுதியினராவது கூலி வேலைத் தொழிலாளர் என்ற வகையின் கீழ் வருவார்களா என்பது சந்தேகம்.... இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கம் மக்களில் பெரும் பகுதியாகும்.**

இல்லை, மூலதனத்தின் மகிமைக்காக சுய-உரிமையைப் பறிமுதல் செய்து கொள்ளும் இயல்பூக்கம் உழைக்கும் மனிதர்களிடை மிகவும் குறைவாகவே நிலவுவதால் அடிமைத்தனமே காலனிச் செல்வத்தின் ஒரே இயற்கை அடித்தளமாகும் என்று வேக்ஃபீல்டே ஒப்புக் கொள்கிறர். அவரது ''திட்டமிட்ட காலனி அமைத்தல்'' pis aller (தவிர்க்க முடியாத தீமை), ஏனெனில், மூலதனம் துரதிருஷ்டவசமாக அடிமைகளுடன் செயல்படவில்லை மாருக சுதந்திர மனிதர்களுடன் செயல்பட வேண்டியிருந்தது.

---

* அதே நூல், தொகுதி I, பக்கம் 18.
** அதே நூல், பக்கங்கள் 42, 43, 44.

செயின்ட் டொமிங்கோவில் முதலில் குடியேறிய ஸ்பானியர்கள் ஸ்பெயினிலிருந்து தொழிலாளர்களைப் பெறவில்லை. தொழிலாளர்கள் இல்லாமையால் அவர்களது மூலதனம் அழிந்திருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம் ஒவ்வொரு தனிநபரும் தன் சொந்தக் கரங்களால் பயன்படுத்தக் கூடிய அளவுக்குச் சிறிய தொகையாக விரைவில் குறைந்து போயிருக்க வேண்டும். ஆங்கிலேயர் நிறுவிய கடைசிக் காலனியான ஸ்வான் நதிதீரக் குடியிருப்பில் இது மெய்யாகவே நிகழ்ந்தது—அங்கு விதைகள், கருவிகள் மற்றும் கால் நடைகளடங்கிய பெருமளவான மூலதனம் அவற்றைப் பயன் படுத்துவதற்குக் கூலித் தொழிலாளர்கள் இல்லாததால் அழிந்து போயிற்று. அங்கே தனிப்பட்ட எந்த ஒரு நபரும் தனது சொந்தக் கரங்களால் பயன்படுத்தக் கூடிய பணத் தொகைக்கு மேல் வைத்திருக்க முடியவில்லை.*

நிலத்திலிருந்து பெருந்திரளான மக்களை உடைமை பறிமுதல் செய்யப்பட்டதே முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடித்தளமாக அமைந்தது என்பதை நாம் கண்டோம். இதற்கு நேர்மாறாக, நிலத்தில் பெரும்பாலான பகுதி இன்னும் பொதுச் சொத்தாக இருப்பது, மற்றும் அங்கே குடியேறியுள்ள ஒவ்வொருவரும் அதில் ஒரு பகுதியைத் தனது சொந்தச் சொத்தாகவும் தனிப்பட்ட உற்பத்தி சாதனமாகவும், இந்தச் செயல்பாட்டில் பின்னால் குடியேறியவர்களுக்கு எவ்விதக் குந்தகமும் இன்றியும், மாற்றிக் கொள்ள முடியும் என்பதில் தான் சுதந்திரக் காலனியின் சாரம் அடங்கியுள்ளது.** இதுவே, காலனிகளின் சுபிட்சத்தினதும் மற்றும் மூலதனம் நிறுவப்படுவதற்கு எதிர்ப்புக் காட்டும் அவற்றின் மாறாத துர்ப்பழக்கத்தின் இரகசியமாகும்.

''எங்கு நிலம் மிகவும் மலிவாக இருக்கிறதோ, எல்லா மனிதர்களும் சுதந்திரமாக இருக்கிறார்களோ, எங்கு ஒருவர் விரும்பும் பட்சத்தில் தனக்கென ஒரு துண்டு நிலத்தை எளிதில் பெற முடியுமோ, அங்கு விளைவில் தொழிலாளிக் குரிய

---

* இதே நூல், தொகுதி II, பக்கம் 5.

** ''நிலம் காலனிகள் அமைப்பதற்கான ஒரு மூலக்கூறு ஆக வேண்டுமாயின் அது தரிசாக மட்டுமன்றி, தனியார் சொத்தாக மாற்றக் கூடியதான பொதுச் சொத்தாகவும் இருக்க வேண்டும்'' (அதே நூல், தொகுதி II, பக்கம் 125).

பங்கினை வைத்துப் பார்க்கும் போது உழைப்பு மிகவும் அதிக விலையுடைதாக இருப்பது மட்டுமன்றி, என்ன விலை கொடுத்தாலும் கூட்டான உழைப்பைப் பெறுவது கடினமாக உள்ளது.''*

காலனிகளில் உழைப்பின் சூழல்களில் இருந்தும் அவற்றின் வேரான நிலத்திலிருந்தும் தொழிலாளியைப் பிரித்து நிறுத்தும் நிலை இன்னும் ஏற்படவில்லை, அவ்வாறு ஏற்பட்டாலும் அது அங்குமிங்குமாக மட்டுமோ அல்லது மிகவும் குறுகிய அளவிலோ நிலவுகிறது, எனவே விவசாயம் தொழில்துறையிடமிருந்து பிரிக்கப்படுவதோ, விவசாயிகளின் குடிசைத் தொழில் அழிக்கப்படுவதோ நிகழவில்லை. அப்படியானால் மூலதனத்துக்கான உள்நாட்டு மார்க்கெட் எங்கிருந்து வரும்?

''அமெரிக்காவில் அடிமைகளும் மற்றும் குறிப்பிட்ட தொழில் நிலையங்களில் மூலதனத்தையும் உழைப்பையும் இணைக்கும் அவர்களது அதிபர்களும் தவிர மக்கள் தொகையில் எந்த ஒரு பகுதியும் முழுமையாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. நிலத்தில் சாகுபடி செய்யும் சுதந்திரமான அமெரிக்கர்கள் வேறு பல தொழில்களை மேற்கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் பயன்படுத்தும் தட்டுமுட்டு மற்றும் கருவிகளில் ஒரு பகுதியை அவர்கள் பொதுவாகச் செய்து கொள்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் தமது சொந்த வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள், தமது சொந்தத் தொழிலின் உற்பத்திப் பொருட்களை எத்தனை தொலைவிலிருப்பினும் சரி, அங்குள்ள மார்க்கெட்டுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அவர்கள் நூற்பாளர்களாயும் நெசவாளர்களாயும் உள்ளனர், சோப்பு மற்றும் மெழுகு திரிகள் செய்கின்றனர், பலர் தமது சொந்த உபயோகத்துக்கான காலணிகளையும் துணிகளையும் செய்துகொள்கின்றனர். அமெரிக்காவில் நிலத்தில் சாகுபடி செய்வது ஒரு கருமான், மில் நடத்துபவர், அல்லது ஒரு கடைக்காரரின் சார்நிலைத் தொழிலாகவே பெரும்பாலும் உள்ளது.''**

இது போன்ற விசித்திரமான மக்கள் இருக்கும் போது முதலாளிகளுக்கு ''நுகர் பொருள் தவிர்ப்புத்துறை'' எங்கே இருக்கும்?

---

* அதே நூல், தொகுதி I, பக்கம் 247.
** அதே நூல், பக்கங்கள் 21, 22.



...MARA PUBLIC LIBRA...
5 MAR 1985

முதலாளித்துவ பொருளுற்பத்தி கூலித் தொழிலாளிகளைக் கூலித் தொழிலாளிகளாகவே இடைவிடாமல் புனருற்பத்தி செய்வது மட்டுமல்ல, மூலதனத் திரட்சியின் விகிதாசாரத்திற்கு ஏற்ப எப்போதும் கூலித் தொழிலாளர்களின் உபரி ஜனத்தொகையையும் ஓரளவு உற்பத்தி செய்கிறது என்பதில் தான் அதன் மாபெரும் நேர்த்தி அடங்கியுள்ளது. இவ்வாறு, உழைப்பின் தரவு மற்றும் தேவை பற்றிய விதி பாதிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ளது, கூலிகளின் ஏற்ற இறக்கம் முதலாளித்துவச் சுரண்டலுக்குத் திருப்திகரமான வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது, இறுதியாக தொழிலாளி முதலாளியை சமுதாயரீதியில் சார்ந்து நிற்பது என்ற இன்றியமையாத தேவை அடையப்பெற்றுள்ளது; ஐயத்திற்கிடமில்லாத இந்தச் சார்பு உறவினை, தாய்-நாட்டிலிருந்து கொண்டு ஓர் அரசியல் பொருளாதார நிபுணர், சுயதிருப்தியுடன் விற்போர் வாங்குவோருக்கு இடையிலான, மூலதனம் என்ற பண்டத்தின் உரிமையாளர் மற்றும் உழைப்பு என்னும் பண்டத்தின் உரிமையாளர் என்று சம அளவில் சுதந்திரமான பண்டங்களின் உரிமையாளர்களாயிருப்போரிடையிலான கட்டற்ற ஒப்பந்தமாகக் காட்டி உருமாறுட்டவித்தை செய்ய முடியும். ஆனால் காலனிகளில் இந்த அழகான கற்பனை சின்னாபின்னமாக்கப்படுகிறது. இங்கு முற்ற முழு மக்கள் தொகை தாய்-நாட்டைக் காட்டிலும் மிக அதிக விரைவாக அதிகரிக்கிறது, காரணம் தயார் நிலையிலுள்ள வயது வந்தோராகவே பல தொழிலாளர்கள் இந்த உலகினுள் பிரவேசிக்கின்றனர், எனினும் தொழிலாளர் மார்க்கெட்டில் இருப்பு எப்போதும் குறைவாகவே உள்ளது. உழைப்பின் தரவு மற்றும் தேவை விதி தகர்ந்து போகிறது. ஒரு புறத்தில் பழைய உலகம் சுரண்டலிலும் ''நுகர் பொருள் தவிர்ப்பிலும்'' பேராசை கொண்ட தாய் மூலதனத்தை இடையறாது போட்டவண்ணம் உள்ளது, மறுபுறம் கூலித் தொழிலாளிகள் கூலித் தொழிலாளிகளாகவே புனருற்பத்தி செய்யப்படுவது மிகவும் முறைகெட்டதான ஓரளவுக்கு வெல்லற்கரியதான தடைகளுடன் மோதுகிறது. மூலதனத் திரட்சிக்கு விகிதாசாரத்தில் அளவுக்கு மேல் மிகையாக இருக்கும் கூலித் தொழிலாளர் உற்பத்தி என்னவாகிறது? இன்றைய கூலித் தொழிலாளி நாளை தனக்காக

மட்டுமே பாடுபடும் ஒரு சுதந்திரமான விவசாயி அல்லது கைவினைஞனுகிறுன். அவன் தொழிலாளி மார்க்கெட்டிலிருந்து மறைந்துவிடுகிறுன் ஆனுல் வேலை விடுதிக்குள் செல்வதில்லை. கூலித் தொழிலாளர்களை, மூலதனத்திற்கு உழைக்காமல், மாருகத் தமக்காகவே உழைத்து, முதலாளித்துவ கனவான்களைச் செல்வந்தர்களாக்குவதற்குப் பதில் தம்மைத்தாமே செல்வந்தர்களாக்கிக் கொள்ளும் சுதந்திரமான உற்பத்தியாளர்களாகச் செய்யும் இந்த இடையருத மாற்றம் தொழிலாளர் மார்க்கெட் நிலைமைகள் மீது மிகவும் விபரீதமான எதிர்விளைவுகளைக் கொண்டுவருகிறது. கூலித் தொழிலாளியைச் சுரண்டும் அளவு மிகக் கேவலமான வகையில் குறைந்து போகிறது என்பது மட்டுமல்ல. இதோடு சேர்ந்து கூலித் தொழிலாளி, சார்பு நிலை உறவுடன் கூடவே ஒரு மெட்டான முதலாளியை தான் சார்ந்து நிற்கிறேன் என்ற உணர்வையும் இழந்து விடுகிறுன். எனவே இந்த வசதிக்கேடுகள் அனைத்தும் எழுகின்றன. அவற்றை இவ்வளவு வலிவுடனும் இவ்வளவு சொல் வன்மையுடனும் இவ்வளவு பரிதாபகரமாகவும் சித்தரிக்கிருர் நமது இ. ஜி. வேக்ஃபீல்டு.

கூலித் தொழிலாளர்கள் உறுதியாகவும், முறையாகவும், வேண்டுமளவுக்கும் கிடைப்பதில்லை என்று அவர் புகார் செய்கிருர். ''தொழிலாளர் தரவு எப்போதும் சிறியளவில் மட்டுமன்றி நிச்சயமற்றதாயும் இருக்கிறது.''*

''முதலாளியும் தொழிலாளியும் தமக்கிடையே பிரித்துக் கொள்ளும் உற்பத்திப் பொருள் ஏராளமாக இருந்த போதிலும், தொழிலாளி மிகவும் பெரிய ஒரு பங்கை எடுத்துக் கொள்வதால் அவனே விரைவில் ஒரு முதலாளியாகி விடுகிறுன்... ஆனுல் நீண்ட காலம் உயிர் வாழ்கிறவர்களிலும்கூட மிகச் சிலரே பெரும்திரளான செல்வத்தைத் திரட்ட முடியும்.''**

தமது உழைப்பின் பெரும்பகுதிக்கு முதலாளிகள் ஊதியம் தராது தவிர்ப்பதை தொழிலாளர்கள் மிகவும் உறுதியுடன் அனுமதிக்க மறுக்கிருர்கள். தனது சொந்தக் கூலித் தொழிலாளர்களைத் தனது சொந்த மூலதனத்தோடு ஐரோப்

* அதே நூல், தொகுதி II, பக்கம் 116.
** அதே நூல், தொகுதி I, பக்கம் 131.

பாவிலிருந்து இறக்குமதி செய்யுமளவுக்கு முதலாளி தந்திரசாலியாக இருப்பினும் அதனால் அவருக்கு எவ்விதப் பயனும் இல்லை.

அவர்கள் ''கூலிக்காக வந்த தொழிலாளர்களாக இருக்கும் நிலை சடுதியில் முடிந்து போய் சுதந்திரமான நிலச் சொந்தக்காரர்களாய், உழைப்பு மார்கெட்டில் தமது முன்னாள் எஜமானர்களுடன் போட்டியிடுவோர்களாய் ஆகின்றனர்.''*

இந்தப் பயங்கரத்தை எண்ணிப் பாருங்கள்! இந்த அருமையான முதலாளி தனது சொந்த நல்ல பணம் கொண்டு தனது சொந்தப் போட்டியாளர்களை ஐரோப்பாவிலிருந்து முழுமையாக இறக்குமதி செய்திருக்கிறான்! உலகத்துக்கு முடிவு வந்துவிட்டது! காலனிகளில் கூலித் தொழிலாளர்கள் எல்லா சார்பு நிலையும், சார்பு நிலை பற்றிய சகல உணர்வும் இன்றி இருக்கிறார்களே என்று வேக்ஃபீல்டு ஓலமிடுவதில் அதிசயம் எதுவுமில்லை. அவரது சீடரான மெரிவேல் கூறுவதாவது:

காலனிகளில் உயர் சம்பளவிகிதங்கள் காரணமாக ''மிக மலிவான விலைக்குக் கிட்டத்தக்க மேலதிகமான கீழ்ப்படிதலுள்ள தொழிலாளர்களை அவசரமாகப் பெறும் விருப்பம் இருக்கிறது. அவர்கள் முதலாளிகளுக்கு முன்பு நிபந்தனைகளை வைப்பதற்கு மாறாக முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்கத் தயாராகவுள்ள ஒரு வர்க்கமாக இருக்க வேண்டும்... பழைய நாகரிக நாடுகளில் தொழிலாளி கட்டற்றவனாக இருந்த போதிலும் இயற்கையின் விதி காரணமாக முதலாளியைச் சார்ந்திருக்கிறான்; காலனிகளில் இந்தச் சார்பு நிலை செயற்கையான முறைகளால் உருவாக்கப்பட வேண்டும்.''**

---

* அதே நூல், தொகுதி II, பக்கம் 5.

** Merivale, *Lectures on Colonization and Colonies*, London, 1841-1842, Vol. II, pp. 235-314 passim. அமைதியான கட்டற்ற-வர்த்தக ஆதரவாளரும் கொச்சையான பொருளியலாளருமான மோலினாரி கூறுகிறார்:

''அடிமை முறை ஒழிக்கப்பட்ட போதிலும், கட்டாய உழைப்புத் தொழிலாளருக்கு மாற்றீடாக அதே அளவுக்கு சுதந்திரத் தொழிலாளர் நியமிக்கப் பெற்றிராத காலனிகளில் நாம் அன்றாடம் கண் முன் கண்டு கொண்டிருப்பதற்கு நேர் எதிரான சில நடக்கக் கண்டோம். சாமான்யத் தொழி

வேக்ஃபீல்டின் கூற்றுப்படி காலனிகளில் நிலவும் இந்த துரதிருஷ்டவசமான நிலைமைகளின் இப்போதைய பின்விளைவு என்ன? உற்பத்தியாளர்களையும் மற்றும் தேசியச் செல்வத்தினையும் ''சிதறடிக்கும் காட்டுமிராண்டிப் போக்கு'' ஆகும்.* தமது சொந்தப் பொறுப்பில் வேலை செய்துவரும் எண்ணற்ற உரிமையாளர்களிடையே உற்பத்தி சாதனங்களைப் பங்கு

---

*லாளர்கள் அங்கு எவ்வாறு தொழிலதிபர்களைச் சுரண்டுகிறார்கள், உற்பத்தியில் தமக்குச் சட்டப்படி உரியதான பங்கை விட மிகவும் உயர்வான கூலி விகிதத்தை அவர்கள் கோருகிறார்கள் என்பதைக் கண்டோம். உயர்ந்த கூலி விகிதத்தை வழங்கத்தக்க விதத்தில் உயர்ந்த விலைக்குச் சர்க்கரையை விற்பதற்கான சாத்தியக்கூறு இல்லாமையால் தோட்ட முதலாளிகள் வேறு வழியின்றி முதலில் அவர்களது லாபத்திலிருந்தும், பின்னர் மூலதனத்திலிருந்தும் பணம் எடுத்து நஷ்டத்தைச் சமாளிக்க வேண்டியுள்ளது. பல தோட்ட முதலாளிகள் இவ்வாறு நொடித்துப் போனார்கள், மற்றவர்கள் தவிர்க்க முடியாத வகையில் ஓட்டாண்டிகளாவதிலிருந்து தப்பத் தம் ஆலைகளை மூடிவிட்டார்கள்... மக்களின் பல தலைமுறைகள் அழிவதை விட மூலதனத் திரட்சியில் ஒரு பகுதியை இழப்பது மேல் என்பதில் ஐயமில்லை'' (மொலினாரிக்குத் தான் எத்தனை தாராள மனது!); இதை விட நல்லது இரண்டும் அழியாதிருப்பதல்லவோ''* (Molinari, *அதே நூல், பக்கங்கள் 51, 52). திரு மொலினாரியே, திரு மொலினாரியே, ஐரோப்பாவில் தொழிலாளியின் நியாயமான பங்கை தொழிலதிபரும், மேற்கிந்தியத் தீவுகளில் தொழிலதிபருக்குரிய நியாயமான பங்கைத் தொழிலாளியும் வெட்டிக் குறைக்க முடியுமானால் பத்துக் கட்டளைகளுக்கும், மோசஸ் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கும், தரவு மற்றும் தேவையின் விதிக்கும் என்ன நேரும்? இந்த ''நியாயமான பங்கு'' என்பது என்ன என்று தயவு செய்து விளக்குவீர்களா? ஐரோப்பாவில் அதை வழங்கும் விஷயத்தில் முதலாளி அன்றாடம் பிழை செய்து வருகிறார் என்பதை நீங்களே எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். அங்கே தொலைவில் முதலாளிகளைச் ''சுரண்டுவதில்'' தொழிலாளர்கள் ''அப்பாவிகளாய்'' இருக்கும் காலனிகளில், மற்ற எல்லாவிடங்களிலும் தானாகவே செயல்பட்டுவரும் தரவு மற்றும் தேவைச் சட்டத்தை போலீஸ் உதவியுடன் சரியாக அமுல் செய்ய மொலினாரிக்கு ஏன் இவ்வளவு பலமான துடிதுடிப்புத் தோன்றுகிறது.*

* இ. ஜி. வேக்ஃபீல்டு, *England and America*, தொகுதி II, பக்கம் 52.

பிரித்துக் கொடுப்பதானது, மூலதனம் மையப்படுத்தப்படுவதையும் அதனுடன் கூடவே கூட்டு உழைப்பின் அடித்தளங்கள் அனைத்தையும் அழித்தொழிக்கிறது. பல ஆண்டுகள் பிடிக்கக் கூடியதும், நிலையான மூலதன முதலீட்டைக் கோருவதுமான தொழில்துறை திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தடை செய்கிறது. ஐரோப்பாவில் கண நேரத் தயக்கமும் இன்றி மூலதனம் முதலீடு செய்யப்படுகிறது, காரணம் இதன் வாழும் அனுபந்தமாக அமைந்துள்ள தொழிலாளி வர்க்கம் எப்போதும் அமிதமாகவே உள்ளது, அதன் மீது எப்போதும் இஷ்டப்படி செயலாட்சி புரியலாம். ஆனால் காலனிகளிலோ!..வேக்ஃபீல்டு ஒரு மிகவும் துயரம் நிறைந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறார்—கானடா மற்றும் நியூயார்க் மாநிலத்து முதலாளிகள் சிலருடன் அவர் உரையாடிக்கொண்டிருந்தார். இங்கு குடியேற்ற வேகம் பெரும்பாலும் தேக்கமடைந்து ''அதிகப் பற்றுன'' தொழிலாளர்களின் ஒரு வண்டலைப் படியவிட்டுள்ளது.

இந்த அதிர்ச்சி நாடகத்தில் ஒரு பாத்திரம் கூறுவதாவது: ''பூர்த்தியடைவதற்குக் கணிசமான காலம் தேவைப்படுகிற பல திட்டங்களுக்கு எமது மூலதனம் தயாராக இருந்தது, ஆனால் எம்மை விட்டு விரைவில் விலகிச் சென்றுவிடுவர் என்று நாங்கள் அறிந்திருந்த தொழிலாளர்களை வைத்துக் கொண்டு இத்தகைய திட்டங்களை நாங்கள் தொடங்க முடியவில்லை. இத்தகைய குடியேறிய மக்களின் உழைப்பை நீடித்துப் பெறுவது நிச்சயம் என்றிருக்குமானல், அவர்களை உயர்ந்த ஊதியத்தில் உடனே மகிழ்ச்சியுடன் வேலையில் அமர்த்துவோம். அவர்கள் எம்மை விட்டு வெளியேறிவிடுவார்கள் என்பது உறுதியாக இருந்த போதிலும், எமக்குத் தேவைப்படும் போது புதிய ஆட்கள் கட்டாயம் கிடைப்பார்கள் என்பது உறுதியாக இருக்குமானல் அவர்களை வேலையில் அமர்த்தியிருப்போம்.''*

ஆங்கில நாட்டு முதலாளித்துவ விவசாயத்தையும் அதன் ''கூட்டு'' உழைப்பையும் அமெரிக்க விவசாயிகளின் சிதறலான சாகுபடியுடன் வேக்ஃபீல்டு வேறுபடுத்திக் காட்டுகிறார். பிறகு அவர் தற்செயலாகவே இப்பிரச்சினையின் மறுபக்கத்தைப் பற்றிய ஒரு காட்சியைத் தருகிறார். பெருந்

* அதே நூல், பக்கங்கள் 191, 192.

திரளான அமெரிக்க மக்கள் வசதியுள்ளவர்களாய், பிறரைச் சார்ந்திராமல், ஊக்கமுள்ளவர்களாய், ஒப்புநோக்கில் பண்பாடுடையவர்களாக இருக்கிறார்கள் என்றும், அதே பொழுதில்

''ஆங்கில நாட்டு விவசாயத் தொழிலாளி ஒரு துயர்ப்படும் கடையனுகை, ஒட்டாண்டியாக இருப்பதாகவும்'' சித்திரிக்கிருர். ''வட அமெரிக்காவிலும் சில புதிய காலனிகளிலும் தவிர வேறு எந்த நாட்டில் விவசாயத்தில் வேலையிலமர்த்தப்பட்டுள்ள சுதந்திரமான தொழிலாளருக்கு அறவே உயிர்வாழ்வதற்குத் தேவையானதைக் காட்டிலும் அதிகமான கூலி தரப்படுகிறது?.. விலை மதிப்புள்ள சொத்து என்ற காரணத்தால் இங்கிலாந்தில் பண்ணைக்குதிரைகள் ஆங்கில விவசாயிகளைவிட நல்ல முறையில் உணவளிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை.''*

இது கிடக்கட்டும், தேசியச் செல்வம் அதன் இயல்பு காரணமாகவே மீண்டும் மக்களின் வறுமையோடு வேறுபடுத்த முடியாது நிற்கிறது.

அப்படியானல், காலனிகளிலுள்ள முதலாளித்துவ எதிர்ப்புப் புற்றுநோயைக் குணப்படுத்துவது எப்படி? ஒரே அடியில் நிலம் முழுவதையும் பொதுச் சொத்திலிருந்து தனியார் சொத்தாக மாற்ற மனிதர்கள் விரும்பித் துணிந்தால் அவர்கள் நிச்சயமாயும் இந்தத் தீமையின் வேரை அழித்து விடுவர்—ஆனல் அதோடு காலனிகளையும் அழித்து விடுவர். இரண்டு பறவைகளை ஒரே கல்லால் கொல்லும் தந்திரம் என்ன என்பதே பிரச்சினை. தரவு மற்றும் தேவை விதியைச் சார்ந்திராமல் அரசு கன்னி நிலத்துக்குச் செயற்கையான ஒரு விலையை வைக்கட்டும்; குடியேறிய தொழிலாளி நிலத்தை வாங்கித் தன்னைத்தானே ஒரு சுதந்திரமான விவசாயியாக மாற்றிக் கொள்வதற்குப் போதுமான பணத்தைச் சம்பாதிப்பதற்கு அவனை நீண்ட காலம் கூலிக்காக வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தும் அளவுக்கு இந்த விலை இருக்கவேண்டும்.**

---

* அதே நூல், தொகுதி பாகம் I, பக்கங்கள் 47, 246.

** ''சொந்தக் கரங்கள் அன்றி வேறெதுவும் இல்லாத மனிதன் நிலத்தையும் மூலதனத்தையும் மற்றவர்கள் உரிமையாக்கிக் கொண்டதன் விளைவாகவே வேலை தேட முடிந்தது.

கூலித் தொழிலாளர் வாங்க முடியாதபடி அதிகமான விலைக்கு இந்த நிலம் விற்கப்படுவது மூலம் வரும் நிதி, தரவு மற்றும் தேவையின் புனிதமான விதியினை மீறுவது மூலம் தொழிலாளரின் கூலியிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டதான இந்தப் பணம், அது பெருகி வரும் விகிதத்திற்கு ஏற்ப ஐரோப்பாவிலிருந்து இந்தக் காலனிகளுக்கு ஏழைகளை இறக்குமதி செய்வதற்கும், இவ்வாறு முதலாளிகளுக்குக் கூலித் தொழிலாளர் மார்க்கெட்டை எப்போதும் நிரப்பி வைக்கவும் அரசால் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த சந்தர்ப்ப சூழல்களில் "tout sera pour le mieux dans le meilleur des mondes possibles" (எல்லா உலகங்களிலும் வைத்து மிகவும் நல்லதான இந்த உலகத்தில் எல்லா வஸ்துக்களும் நன்மைக்காகவே இருப்பது சாத்தியமே). ''முறையான காலனியமைப்பின்'' மாபெரும் இரகசியம் இதுவே.

இந்தத் திட்டத்தின்படி ''தொழிலாளர் தரவு இடையறுதும் முறையாகவும் இருக்க **வேண்டும்**, காரணம், முதலாவதாக பணத்துக்காக வேலை செய்யும் வரையில் எந்தத் தொழிலாளியும் நிலம் வாங்க முடியாது, குறிப்பிட்ட காலம் வரை கூலிக்காகவும் கூட்டாகவும் வேலை செய்யும் குடியேறிய தொழிலாளர்கள் அனைவரும் மேலதிகமான தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்காக மூலதனத்தை உற்பத்தி செய்வர்; இரண்டாவதாக, கூலிக்காக உழைப்பதை விட்டு நிலச் சொந்தக்காரராகும் ஒவ்வொரு தொழிலாளியும் நிலத்தை விலைக்கு வாங்குவது மூலம் காலனிக்குப் புதிதாகத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்கான நிதிக்கு வகை செய்

---

தனக்கு லாபம் தேடிக் கொள்ளவும் முடிந்தது என்று நீங்கள் கூறுகிறீர்கள்... இதற்கு நேர்மாறாக, தனிப்பட்டவர்கள் நிலங்களை உரிமையாக்கிக் கொண்டதனால்தான் மக்களுக்கு சொந்தக் கரங்கள் தவிர, வேறு எதுவுமில்லாது போயிற்று... மனிதனை ஒரு வெற்றிடத்தில் வைத்து அவன் சுவாசிப்பதற்கு அவசியமான காற்றைத் தர மறுக்கிறீர்கள். நிலத்தை உடைமை கொள்ளும் போதும் இதே போன்று செயல்படுகிறீர்கள்... இது மனிதனைச் செல்வத்துக்கு எட்டாத் தொலைவில் வைத்து அவனது வாழ்க்கையை உங்கள் அதிகார ஆணைக்குக் கீழ்ப்படிய வைப்பதற்குச் சமமாகும்'' (Colins, மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி 3, பக்கங்கள் 267-271).

கிறார்கள்'' என்று வெற்றிக் களிப்புடன் கூக்குரலிடுகிறார் வேக்ஃபீல்டு.*

நிலத்துக்கு அரசு கட்டாயமாக விதிக்கும் விலை ''போதிய விலையாக'' இருத்தல் வேண்டும் அதாவது, ''மற்றவர்கள் அவர்களது இடத்தில் வேலைக்கு வந்து சேரும் வரை தொழிலாளர்கள் சுதந்திரமான நிலச் சொந்தக்காரர்களாவதைத் தடுத்து நிறுத்துமளவுக்கு அவ்வளவு உயர்ந்த விலையாக இருக்க வேண்டும்.''** ''நிலத்துக்கான இந்தப் போதுமான விலை'' என்ற சொற்றொடர் தொழிலாளி, கூலி உழைப்பு மார்க்கெட்டை விட்டு விலகி ஓய்வுபெற்று நிலத்துக்குச் செல்லும் அனுமதிபெறுவதற்காக முதலாளிக்குச் செலுத்தும் மீட்புப்பணத்தின் ஒரு சுற்றிவளைத்த மறைமுக வெளியீடேயாகும். முதலில் அவன் முதலாளிக்கு ''மூலதனத்தைப்'' படைத்துத் தரவேண்டும், இதைக் கொண்டு முதலாளி மேலும் அதிகமான தொழிலாளர்களைச் சுரண்ட முடியும்; பிறகு அவன் தனது சொந்தச் செலவில் தொழிலாளர் மார்க்கெட்டில் ''ஒரு மாற்றுத் தொழிலாளியை'' வைக்க வேண்டும், அவனை அரசு அவனது பழைய எஜமானான முதலாளியின் நலனுக்காக கடல் கடந்து அனுப்பி வைக்கிறது.

காலனிகளில் பயன்படுத்தப்படுவதற்கென்று திரு. வேக்ஃபீல்டு குறிப்பிட்ட நோக்கத்துடன் வழிவகை செய்தளித்திருக்கும் இந்த ''புராதனத் திரட்சி'' முறையை ஆங்கில அரசு பல ஆண்டுகளாகச் செயல்படுத்தி வந்திருப்பது அதன் தனித்தன்மைக்கு மிகவும் பொருத்தமுடையதாகும். ராபர்ட் பீலின் வங்கிச் சட்டம்[13] போன்று என்பதைக் கூற வேண்டுமா, இதுவும் முற்றாகத் தகர்ந்து விட்டது. குடியேறுவதற்காகச் செல்வோர் வெள்ளம் ஆங்கிலக் காலனிகளிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டை நோக்கித் திருப்பிவிடப்பட்டது. இதற்கிடையில் ஐரோப்பாவில் முதலாளித்துவ உற்பத்தியின் முன்னேற்றமும் இதைத் தொடர்ந்து வந்த அரசின் நிர்ப்பந்தமும் வேக்ஃபீல்டின் வகைதுறை ஏற்பாட்டை மீமிகையாக்கி

---

* இ. ஜி. வேக்ஃபீல்டு, அதே நூல், தொகுதி II. பக்கம் 192.

** அதே நூல், பக்கம் 45.

விட்டன. ஒரு புறம் ஆண்டுக்குப் பின் ஆண்டாக அமெரிக்காவை நோக்கி விரட்டப்படும் மிகப் பெரிய முடிவில்லாத மனித வெள்ளம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கீழ்ப் பகுதிகளில் நிலையான வண்டல் மண்ணை விட்டுச் செல்கிறது. அங்கு தொழிலாளர் மார்க்கெட்டில் ஐரோப்பாவிலிருந்து வீசப்படும் மனிதர்களின் குடியேற்ற அலை, மேலைப்பகுதியை நோக்கிய குடியேற்ற அலை அந்த வண்டலைக் கரைத்தெறிவதை விடவும் அதிக வேகமாக உள்ளது. மறு புறம் அமெரிக்க உள்நாட்டுப் போரின் விளைவாக தேசியக் கடன் பிரம்மாண்டமான அளவுக்குப் பெருகியது. அதோடு கூட வரிகளின் பளு அதிகரித்தது, மிகவும் இழிந்த நிதி உடைமைக் கும்பல் உருவாயிற்று. ரயில்வே, சுரங்கம் ஆகியவற்றுக்காகப் பயன் படுத்துவதற்கென்று பொது நிலத்தின் பெரும் பகுதி சுரண்டும் லாபவேட்டைக் கம்பெனிகளுக்கு ஊதாரித் தனமாகக் கொடுக்கப்பட்டது. சுருங்கச் சொன்னால் மூலதனத்தின் மிகவும் வேகமான மையப்படுத்தல் நடைபெற்றது. அதனால் இந்த மாபெரும் குடியரசு குடியேறும் தொழிலாளருக்குரிய பேரின்ப நிலமல்ல என்ற நிலை ஏற்பட்டது. அங்கு முதலாளித்துவ பொருளுற்பத்தி ராட்சச கதியில் முன்னேறுகிறது, கூலிகளைக் குறைப்பதும், கூலித் தொழிலாளியின் சார்புநிலையும் இன்னும் சகஜமான ஐரோப்பிய மட்டத்திற்குத் தாழ்த்திக் கொண்டு வரப்படவில்லை. அரசு உயர்குடி வகுப்பினர்கள் மற்றும் முதலாளிகளுக்குப் பண்படுத்தப்படாத காலனி நிலங்களை எவ்வித நாணமுமின்றி வாரி வழங்கியது, இதை வேக்ஃபீல்டும் கூட பலமாகக் கண்டித்திருக்கிறார். இதன் விளைவாக ஆஸ்திரேலியாவில்* குறிப்பாயும் தங்கம் தோண்டும் தொழில் கவர்ந்திழுத்துள்ள மனித வெள்ளத்தோடு சேர்ந்

---

* ஆஸ்திரேலியா தனக்குத்தானே சட்டமியற்றிக் கொள்ளும் நிலையைப் பெற்றதும் குடியேறியவர்களுக்குச் சாதகமான சட்டங்களை நிறைவேற்றியது. ஆனால் ஆங்கில அரசு ஏற்கெனவே நிலங்களை ஊதாரித்தனமாகக் கொடுத்திருந்தது இதற்கு முட்டுக் கட்டையாக இருந்தது. ''1862 ஆம் வருட புதிய நிலச் சட்டத்தின் முதலும் முக்கியமுமான நோக்கம் மக்கள் குடியேறி வாழ அதிக வசதிகளை அளிப்பதாகும்'' (*The Land Law of Victoria, by the Hon.* C. G. Duffy, Minister of Public Lands, London, 1862).

தும், ஆங்கிலப் பண்டங்களின் இறக்குமதியால் ஏற்படும் போட்டியோடு சேர்ந்தும் (மிகச் சிறிய கைவினைஞரைக் கூட இது பாதித்தது) ''ஓரளவுக்கு அமிதமான உழைக்கும் மக்கள் தொகை'' ஏற்பட வகை செய்தது. எனவே ஒவ்வொரு தபாலி லும் ஆஸ்திரேலிய தொழிலாளர் மார்க்கெட் நிரம்பி வழி வது பற்றியும், லண்டன் ஹேமார்க்கெட் பகுதியைப் போலவே அங்கும் சில இடங்களில் மானங்கெட்ட விபசாரம் பெருகி யிருப்பதையும் பற்றிய செய்தியைக் கொண்டுவந்தது.

எனினும் இங்கு நாம் காலனிகளின் நிலைமை குறித்து அக்கறை கொள்ள முற்படவில்லை. பழைய உலகத்தின் அரசியல் பொருளாதாரம் புதிய உலகில் கண்டுபிடித்ததும், கூரை மீதிருந்து பறைசாற்றப்படுவதுமான இரகசியமே நமக்கு முக்கியமாக இருக்கும் விஷயம்; முதலாளித்துவ உற்பத்தி முறையும் முதலாளித்துவத் திரட்சியும் எனவே முதலாளித்துவத் தனியார் சொத்தும், சுயசம்பாத்தியமான தனியார் சொத்தை அழிப்பதை, வேறு சொற்களில் கூறினால் தொழிலாளியின் உடைமை பறிமுதல் செய்வதைத் தமது அடிப்படை நிபந்தனையாகக் கொண்டிருக்கின்றன என்பதே இந்த இரகசியம்.

## பதிப்பாளர் குறிப்புகள்

1 **உலக மார்க்கெட்டின் புரட்சி** என்று கூறும் போது மார்க்ஸ் கடத்து வர்த்தகத்தில் வடக்கு இத்தாலிய நகரங்களான ஜினேவா, வெனிஸ் மற்றும் இதர நகரங்களின் பங்கு கடுமையாக சீர்குலைந்ததையே குறிப்பிடுகிறார். இது கியூபா, ஹெய்ட்டி, பஹாமா தீவுகள், வட அமெரிக்கா, ஆப்பிரிக்காவைச் சுற்றி இந்தியாவுக்கான கடல்மார்க்கம், இறுதியாக தென் அமெரிக்கா ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டது போன்ற மாபெரும் புவியியல் கண்டு பிடிப்புக்களின் விளைவாக 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது.—*9.*

2 J. Steuart. *An Inquiry into the Principles of Political Economy*. Vol. I, Dublin, 1770, p 52.—*12.*

3 ''எல்லாவிடங்களிலும் ஏழைகள் துயர் மிகுந்து வாழ்கின்றனர்'' ஓவிட் எழுதிய Fastsலிருந்து மேற்கோள் (பாகம் I, பாடல் 218).—*18.*

4 இது ஃபியோதர் இவானவிச்சின் ஆட்சியில் 1597ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையைக் குறிக்கிறது போலும்; அப்பொழுது ருஷ்யாவின் உண்மையான மன்னராக பொரீஸ் கொதுநோவ் இருந்தார். இந்த ஆணையின் கீழ், தமது நிலப்பிரபுக்களின் ஒடுக்கு முறையையும் தம் கொத்தடிமை நிலைமையையும் தாங்க முடியாமல் வெளியே ஓடிப்போய் விட்ட விவசாயிகள் தேடப்பட்டு அவர்கள் தப்பியோடியதிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் அவர்களது முந்திய உடைமைக்காரர்களிடம் திரும்பவும் ஒப்படைக்கப்பட வேண்டும்.—*22.*

5 ஆங்கில முதலாளித்துவ வரலாற்றெழுத்தாளர்கள் **''புகழார்ந்த புரட்சி''** என்ற சொல்லை 1688ல் நடைபெற்ற திடீர் ஆட்சிமாற்றத்தை வர்ணிக்கப் பயன்படுத்தினர்

கள். இதற்குப் பின் இங்கிலாந்து அரசியல்சட்டமுறை முடியாட்சி ஆகியது, நிலப்பிரபுத்துவ வர்க்கம் மற்றும் பெரிய முதலாளிகளிடை ஏற்பட்ட சமரசத்தின் அடிப் படையில் இது நிறுவப்பட்டது.—22.

6 The Licinian rogations (லிசினியசின் சட்டம்) என்பது பண்டைய ரோமாபுரியில் கி.மு. 367ல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டத்தைக் குறிக்கிறது. இது ஓரளவுக்கு பொது நிலங்களைத் தனியார் உடைமைக்கு மாற்றும் உரிமையைக் கட்டுப்படுத்தியது, கடன்களில் ஒரு பகுதியை ரத்துச் செய்ய வகை செய்தது. இந்தச் சட்டத்தின் நோக்கம் பெரிய நிலவுடைமைகள் பெருக்கத்தை எதிர்ப்பதும், உயர் குலச் சீமான்களுக்குத் (patricians) தனிச் சலுகைகள் வழங்கப்படுவதை எதிர்ப்பதுமாகும்; இது சாமான்ய மக்களின் (plebs) பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் ஓரளவு வலுப்படுத்தப் படுவதையும் பிரதிபலித்தது. ரோமன் மரபுப் படி வெகுஜன ஆதரவுள்ள தலைவர்களான லிசினியசும், செக்ஸ்டியசும் தான் இந்தச் சட்டத்தின் கர்த்தாக்கள் என்று சொல்லப்பட்டது.—29.

7 ''இளம் அரசு முடிக்கான போலி உரிமையாளர்'' என்று அழைக்கப்பட்ட சார்ல்ஸ் எட்வர்ட் ஆங்கில சிம்மாதனத்தில் அமர வேண்டும் என்று கோரிய ஸ்டுவர்ட் வமிசத்தின் ஆதரவாளர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட 1745-1746 எழுச்சியே இங்கு குறிப்பிடப்படுகிறது. இந்த எழுச்சி, நிலப்பிரபுக்கள் தம்மைச் சுரண்டுவதை எதிர்த்தும் நிலங்கள் ஒட்டுமொத்தமாக உடைமை பறிமுதல் செய்யப்படுவதை எதிர்த்தும் ஸ்காட்லந்து மற்றும் இங்கிலாந்தின் பொது மக்கள் எழுப்பிய ஆட்சேபத்தையும் பிரதிபலித்தது. ஆங்கிலப் படைகளால் இந்த எழுச்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஸ்காட்லந்திலிருந்த கோத்திர முறை சிதைவுறத் தொடங்கியது மற்றும் ''பண்ணைகளைத் துடைத்தொழிப்பது'' முன்னை விட மேலும் அதிக முனைப்பான தன்மையைப் பெற்றது.—32.

8 ''சதிக்கு'' எதிரான சட்டம் இங்கிலாந்தில் மத்திய காலங்களிலேயே நிலவியது. ''அது சட்ட ஆதாரமுடையதாக இருப்பினும் கூட எந்தச் சதிச் செயலையும்'' இது தடை செய்தது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில், தொழிலாளர் ஸ்தாபனங்களும், தொழிலதிபர்களை எதிர்த்த அவர்களது போராட்டங்களும் தொழிற்சங்கச் சட்டங்கள் ஏற்கப்படுவதற்கு முன்னும் அவை ரத்துச் செய்யப்பட்ட பின்னும் ஒடுக்கப்பட்டன. பின்வரும் குறிப்பை பார்க்க. —53.

9 இங்கு குறிப்பிடப்படுவது 1799லும் 1800லும் ஆங்கில நாடாளுமன்றம் அங்கீகரித்த சங்கம் சேருவதை எதிர்த்த சட்டங்களாகும். இவை தொழிலாளர் ஸ்தாபனங்கள் எதுவும் நிறுவப்படுவதையும் செயலாற்றுவதையும் தடை செய்தன. இந்தச் சட்டங்கள் 1824ல் நாடாளுமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டன, இவை ரத்துச் செய்யப்பட்டது அடுத்த ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் தொழிலாளர் சங்கங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடிந்த அனைத்தையும் செய்தனர் அதிகாரிகள். உதாரணமாக, தொழிற்சங்கத்தில் சேருவதற்கோ அல்லது ஒரு வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவோ கோரிச் செய்யப்படும் கிளர்ச்சி ''கட்டாயப்படுத்தல்'' என்றும் ''வன்முறை'' என்றும் கருதப்பட்டுக் குற்றச் செயலுக்குரிய தண்டனைக்குள்ளாக்கப்பட்டது.—53.

10 **கிழக்கு இந்தியக் கம்பெனி**—1600 முதல் 1858 வரை நிலவிய ஓர் ஆங்கில வர்த்தகக் கம்பெனி. இது இந்தியா, சீனா மற்றும் இதர ஆசிய நாடுகளில் இங்கிலாந்து கையாண்ட கொள்ளைக்காரக் காலனியாதிக்கக் கொள்கையின் கருவியாக இருந்தது. 18ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதி முதல் தனது தலைமையில் தரைப்படையும் கடற்படையும் வைத்திருந்த இந்தக் கம்பெனி வலுவான ராணுவ சக்தியாக இருந்தது. இந்தியாவைக் கைப்பற்ற ஆங்கிலக் காலனியாதிக்கவாதிகள் இதன் படைகளைப் பயன்படுத்தினார்கள். சில காலம் இந்தக் கம்பெனி இந்தியாவுடனான வர்த்தகத்தில் ஏகபோக உரிமையும் அந்த நாட்டின் மீது அரசியல் அதிகாரத்தை அமுலாக்கும் உரிமையையும் அனுபவித்தது. 1857-1859 ஆண்டுகளிலான இந்திய தேசிய விடுதலை எழுச்சி ஆங்கிலேயர் தமது அரசியல் ஆதிக்கத்தின் வடிவத்தை மாற்றிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தியது: கம்பெனி ஒழிக்கப்பட்டு இந்தியா பிரிட்டிஷ் முடியரசுக்கு உரிமையாக்கப்பட்டது.—72.

11 இங்கு மார்க்ஸ் *Aanwysing der heilsame politike Gronden en Maximen van de Republike van Holland en West-Friesland* என்ற நூலின் ஆங்கிலப் பதிப்பைக் குறிப்பிடுகிறார் **(ஹாலந்து மற்றும் மேற்கு ஃபிரிஸ்லந்து குடியரசின் அடிப்படை அரசியல் கோட்பாடுகள் மற்றும் மூதுரைகள் பற்றிய விளக்கம்)**. இது ஜான் டி விட்டால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்டு 1662ல் லீடனில் வெளியிடப்பட்டது. பின்னால் இந்த நூலின் ஆசிரியர் (டி விட் எழுதிய இரண்டு அத்தியாயங்கள் தவிர) டச்சுப் பொருளாதார நிபுணரும் தொழில் முனைவருமான பீட்டர் வான் டென் ஹோவ்

என்பது கண்டு பிடிக்கப்பட்டது (இவர் பிட்டர் டி லா கூர் என்றும் அறியப்பட்டிருந்தார்).—79.

12 Asiento—16, 17, 18ஆம் நூற்றுண்டுகளில் ஸ்பெயின், அந்நிய நாடுகளும் தனிப்பட்ட நபர்களும் அதன் அமெரிக்க உடமை நாடுகளுடன் நீக்ரோ-வாணிகம் நடத்தும் தனியுரிமையினை வழங்கிய உடன்பாடுகளின் பெயராகும்.—84.

13 இது 1884ஆம் ஆண்டின் வங்கிச் சட்டத்தைக் குறிப்பிடு கிறது. பாங்கு நோட்டுக்களைத் தங்கத்துக்குப் பரிவர்த் தனை செய்துகொள்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும் முயற்சியில் பிரிட்டிஷ் அரசு சர் ராபர்ட் பீலின் முன்முயற்சியை ஆதரித்து 1844ல் இங்கிலாந்து வங்கி யைத் திருத்தியமைப்பதற்கான ஒரு சட்டத்தை ஏற்றுக் கொண்டது. அது இரு சுதந்திரமான துறைகளாக வங்கி மற்றும் வெளியிடல் என்று உபபிரிவு செய்யப்பட்டது. இதோடு கூட பாங்கு நோட்டுகளைத் தங்கமாகப் பரி வர்த்தனை செய்து கொள்ளும் விஷயத்தில் ஒரு திட்டவட் டமான விகிதம் நிலைநாட்டப்பட்டது. தங்கத்தின் உத் தரவாதமில்லாத பாங்கு நோட்டு வெளியீடு 1 கோடி 40லட்சம் பவுன்கள் அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. வங்கிச் சட்டத்தின் விதிகள் இருந்த போதிலும் பாங்கு நோட்டுகளின் தொகை அதையடக்கிய நிதியைச் சார்ந்திருக்கவில்லை, மாறுக புழக்கத்துறையில் பாங்கு நோட்டுகளுக்கான தேவையையே சார்ந்திருந்தது. பணத்தின் தேவை மிகவும் கடினமாக உணரப்படும் பொருளாதார நெருக்கடிகளின் போது பிரிட்டிஷ் ஆட்சி 1844 சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி தங்க உத்தர வாதமில்லாத பாங்கு நோட்டுகளின் தொகையை அதிகரித்தது.—108.

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து “Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, Nallathambi Chetty Street, Madras—2

ஷோ-ரூம்

6/30, Mount Road, Madras—600002

கிளைகள்

80, West Tower St., Madurai—1
87/89, Oppanakara St., Coimbatore—1
Singarathope, Tiruchirapalli—8
Cherry Road, Salem—1

## முன்னேற்றப் பதிப்பகம்

## தமிழில் சோவியத் நூல்கள்

**எங்கெல்ஸ் பி. குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்**

*1884ல் எழுதப்பட்ட இந்த நூலில் மனித வரலாற்றின் ஆரம்ப கட்டங்களைப் பற்றிய முறையான, விஞ்ஞான பூர்வமான, பொருள்முதல் வாத விளக்கம் முதல் தடவையாகத் தரப்பட்டுள்ளது; குடும்பத்தின் வளர்ச்சி காட்டப்படுகிறது; தனிச்சொத்து தோன்றியது, பகைமையுள்ள வர்க்கங்களாக சமுதாயம் பிளவுபட்டது, சுரண்டுகின்ற வர்க்கங்களின் கைகளில் ஆதிக்கக் கருவியாக அரசு தோன்றியது ஆகியவற்றுக்கான காரணங்கள் இந்த நூலில் எடுத்துக் காட்டப்படுகின்றன. வர்க்கங்கள் அற்ற கம்யூனிச சமுதாயத்தில் அரசு படிப்படியாக உலர்ந்து உதிர்வது தவிர்க்க முடியாதது என்றும் இதில் விளக்கிச் சொல்லப்படுகிறது.*

## லெனின் வி. இ. ''இடதுசாரி'' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு

இந்த நூல் 1920 ஏப்ரல்—மே மாதங்களில் லெனினால் எழுதப்பட்டு, கம்யூனிச அகிலத்தினது இரண்டாவது காங்கிரஸ் தொடங்கும் போது வெளியிடப்பட்டது. ருஷ்யன், ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் பதிப்பிக்கப்பட்டு காங்கிரசுக்கு வந்த பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. ருஷ்யாவிலும் உலகம் அனைத்திலும் புரட்சி இயக்கத்தின் அனுபவத்தைத் தொகுத்துத் தந்த லெனின், சோஷலிசப் புரட்சிக்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் போர்த்தந்திரம், ஆதார நெறி ஆகியவை பற்றிய மிக முக்கியமான பிரச்சினைகளை இதில் பரிசீலிக்கிறார். ஜெர்மானிய, ஆங்கிலேயத் தொழிலாளர் கட்சிகளிலும் மற்ற சில கட்சிகளிலும் அப்போது தோன்றி இருந்த அதிதீவிர இடதுசாரிக் குழுக்களை விவரமாக விமர்சனம் செய்கிறார்.

**К. Маркс**

ГЕНЕЗИС КАПИТАЛА

*на языке тамили*